# வீடு வந்த வெண்ணிலவு

## 1

அன்றைய வேலை முடிந்து, பரமேசன் திரும்பி வரும் போது, வழக்கத்தை விடத் தாமதம் ஆகியிருந்தது.

மணி பத்தைத் தாண்டியிருந்தது.

காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு, சத்தமின்றி வீட்டினுள் வந்தவனுக்கு சோஃபாவில் கண்மூடிச் சாய்ந்திருந்த தாயாரைப் பார்த்ததும், பரிவை விடக் கோபம்தான் வந்தது போலும்.

பேசாமல், அறைக்குள் படுக்கையில் படுத்து உறங்குவதற் கென்ன? சும்மாவே மனதில் துக்கம், அத்தோடு, உடம்பும் அவ்வளவு சரி கிடையாது.

இந்தச் சாப்பாட்டு மேஜையில் இருப்பதை, அவன் எடுத்துப் போட்டுச் சாப்பிட்டுக் கொள்ள மாட்டானா?

மகனுக்குப் பரிமாற வேண்டும் என்று, தூங்காமல் விழித்திருந்து, உடம்பைக் கெடுத்து... இவ்வளவு நேரம்

விழித்துத்தான் இருந்திருப்பார்கள். இப்போதுதான் லேசாகக் கண்ணயர்ந்திருப்பார்கள்.

ஒருவர் பரிமாறித்தான் சாப்பிட வேண்டும் என்கிற வயதெல்லாம் அவன் தாண்டி, வெகு காலம் ஆகிவிட்டது என்று இவர்களுக்கு எப்போது புரியப் போகிறது?

தாயின் மனதிற்கும், உடலுக்கும் ஆழ்ந்த ஓய்வு எவ்வளவு தேவை என்று அறிந்திருந்ததாலேயே, பரமேசனின் மனம் மேலும் ஆத்திரமுற்றது.

வேகமாகத் தாயின் அருகே சென்றவன், தயக்கத்துடன் நின்றான்.

இப்போது எழுப்பிப் படுக்கச் சொன்னாலும், 'அதுதான் விழித்துவிட்டேனே, உனக்குப் பரிமாறிவிட்டே படுக்கப் போகிறேன்!' என்பார் தாயார்.

அதைவிட, அவன் உடம்பு கழுவிவிட்டு வருகிறவரை இப்படியே தூங்கட்டும், அப்புறமாக எழுப்பிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து ஓசையின்றிக் கவனத்துடன் படியேறி, அவனது அறைக்குச் சென்றான்.

திரும்பி வந்து, பாதி உணவை அவன் முடித்துக் கொண்டிருந்தபோதுதான், அன்னபூரணி உறக்கம் கலைந்து எழுந்தாள்.

சாப்பாட்டு அறையில் விளக்கு எரிவதைப் பார்த்து, அங்கே வந்தவள், மகன் உண்பதைப் பார்த்ததும், ''கூப்பிட்டிருக்கக் கூடாதா?'' என்று அருகே வந்தாள்.

''கூப்பிடுவதா? பாத்திரத்தில் இருப்பதைக்கூட எடுத்து உண்ணத் தெரியாத அளவுக்கு, நான் என்ன சின்னக் குழந்தையா? இன்னொரு தரம் நீங்கள் இப்படிக் காத்திருப்பதைப் பார்த்தேன் என்றால், அப்புறம் நான் இரவில் வெளியே சாப்பிட்டு விட்டுத்தான் வருவேன். சொன்னால் கேட்பதில்லையா, அம்மா. நேரத்துக்கு. ஒழுங்காகத் தூங்காவிட்டால், உங்கள் உடம்பு கெட்டுவிடாதா?'' என்று கண்டிப்பும் கவலையுமாகப் பேசினான் மகன்.



''என் உடம்பு கிடக்கட்டும். நான் பகலில்கூடத் தூங்கிக் கொள்வேன். ஆனால், நீ? பார், சட்டினி, சாம்பார் இரண்டும் இருக்கிறது. வெறும் சட்னியை மட்டும், அதுவும் கொஞ்சமாகத் தொட்டுக் கொண்டு சாப்பிடுகிறாயே. என்னை எழுப்பியிருந்தால், முதலிலேயே இரண்டையும் சேர்த்து வைத்துத் தந்திருப்பேன். பருப்பின் சத்தும் உடம்பில் சேர்ந்திருக்குமே. புரோட்டீன் அதில்தானே இருக்கிறதாம். டீவியில் சொன்னார்கள். நீயாகச் சாப்பிட்டால், தொழிலை, வேலையை நினைத்துக் கொண்டு இப்படிச் சாப்பிடுவாய் என்றுதான் அம்மா காத்திருப்பது. இந்தா, இப்போதாவது கொஞ்சம் சாம்பார் சேர்த்துக் கொள்!'' என்று கரண்டியில் சாம்பாரை எடுத்து, மகன் தட்டில் ஊற்றினாள் அன்னை.

சாம்பாரில் துகைத்து ஒரு விள்ளல் தோசையை வாயில் வைத்தவன், ''சே!'' என்றான் பொறுமையிழந்தாற்போல.

''என்னடா? காரமா? அல்லது உப்பா? நன்றாக இல்லையா?'' என்று கவலையுடன் பெற்றவள் வினவினாள்.

''ச்சு! அதொன்றும் இல்லையம்மா. ஒரொரு சமயம், நீங்கள் இப்படிச் சிரமப்படுவதைப் பார்க்கும்போது, சம்பிரதாயமாவது, இன்னொன்றாவது என்று கல்யாணத்தை முடித்து, சவிதாவை இங்கே கூட்டி வந்து விடலாமோ என்று இருக்கிறது! இந்தப்

பொறுப்பையெல்லாம் அவள் பார்ப்பாள் அல்லவா? ஆனால், இவ்வளவு பெரிய துக்கத்தை மறந்து திருமணத்துக்குப் பறக்கிறான் என்று மற்றவர்கள் சொல்வார்களே என்றல்லவா தயங்க வேண்டியிருக்கிறது!'' என்று மனதில் இருந்ததைக் கொட்டினான் பரமேசன்.

சற்று அதிர்ந்தாற் போல நிமிர்ந்து, ஏதோ சொல்ல வாயெடுத்த அன்னபூரணி, ஏதும் சொல்லாமலே வாயை மூடிக் கொண்டாள்.

தொடர்ந்து நீண்ட மௌனத்தைக் கலைத்து, ''எனக்குப் புரிகிறது அம்மா. நாம் சடங்கு சம்பிரதாயம் பார்க்கிறவர்கள். நம்மை விடவும் சவிதா வீட்டில் அதிகம் பார்ப்பார்கள். அத்தோடு, திருமண ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய சந்தோஷ மனநிலையும், நான் உட்பட, இங்கே யாருக்கும் இல்லை. அதை மீறும் ஆவல் எனக்கும் இல்லை. நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள் என்று ஒரு வேகத்தில் சொல்லிவிட்டேன். பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்!'' என்று தாய்க்குச் சமாதானம் சொன்னான் மகன்.

''அது...'' என்று தொடங்கிய அன்னை, மீண்டும் தயங்கி, தொண்டையைச் செருமி, ''எனக்கு ஒன்றும் சிரமம் இல்லைடா பரமேஷ். உன் அப்பா... இருந்தபோது செய்யவில்லையா? இந்தச் சில மாதங்களில் கிழவியாகி விடுவேனா? அப்படிக் கஷ்டமாக இருந்தால், உதியைச் செய்யச் சொல்லமாட்டேனா? எனக்கு ஒன்றும் இல்லை. வீணாக ஏதேதோ நினைத்துச் சஞ்சலப்படாதே!'' என்று சோர்ந்த குரலில், சொல்லி முடித்தாள்.

தன் போக்கில் அடுத்த தோசைத் துண்டோடு கையை வாய்க்கருகே கொண்டு சென்ற பரமேசன், ஏதோ நினைவு வர, விலுக்கென நிமிர்ந்தான். ''அம்மா!'' என்றவனின் குரலில் மித



மிஞ்சிய வருத்தம் இருந்தது. "அம்மா, சாரிம்மா, கொஞ்சம் கொஞ்சமாக, இப்போதுதான் மீளத் தொடங்கியிருக்கிறீர்கள். அதற்குள் நானே மடத்தனமாக அப்பாவை நினைவுபடுத்தி விட்டேன், பாருங்கள்! என்னை என்ன செய்தால் தகும்? அம்மா, ரொம்ப ரொம்ப சாரிம்மா!'' என்று, மீண்டும் வருத்தம் தெரிவித்துவிட்டு, அதற்கு மேல் இயல்பாக உண்ண முடியாமல் தட்டைத் தள்ளி வைத்தான் மைந்தன்.

தட்டை மீண்டும் மகன் முன் இழுத்து வைத்துவிட்டு, "நீ இப்படிப் பாதி உணவில் எழுந்தால் என் மனம் சரியாகி விடுமா? இன்னும் கொஞ்சம் அதிகமாக வருத்தப்படாது? பேசாமல் சாப்பிடு. 'உண்டவன் உரம் செய்வான்' என்று பழமொழியே இருக்கிறது! சும்மாவே, இப்போது அப்பா வேலையை வேறு சேர்த்துப் போட்டுச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம், உடம்பில் சத்து வேண்டாமா? சாப்பிடு. இன்னும் ஒரு பாதி தோசை வைக்கட்டுமா? அல்லது, இட்டிலி சாப்பிடு. அதுவும் இருக்கிறது. சிரமப்பட்டுச் செய்து வைத்தால், தொட்டே பாராமல் மிச்சம் வைப்பதா?'' என்றாள் அன்னை.

லேசாக முறுவலித்துவிட்டு, ''ஓர் இட்டிலி மட்டும்!'' என்று வாங்கிச் சாப்பிட்டான் பரமேசன்.

அவர்கள் வீட்டு இட்டிலி, தனி ருசி. மிக மிருதுவாகவும் இருக்கும். வேலைக்காரர்கள் கிரைண்டரில் மாவு அரைத் தாலும், மாவை எடுக்கும் பதம் அன்னபூரணிதான் சொல்லியாக வேண்டும்.

ஆனால் சமையலை இப்படித் திறமையாகச் செய்த போதும், மற்றப்படி அன்னை அன்னபூரணிக்கு, அவ்வளவாகச் சாமர்த் தியம் போதாது என்பது மகனின் எண்ணம்.

மூன்று மாதங்களுக்கு முன்பாக மறைந்த தந்தை சுந்தர லிங்கமும் அப்படித்தான் எண்ணினார். என்பதும் அவனுக்குத் தெரியும்.

'உன் அம்மாவுக்கு வீடுதான்டா எல்லாம். வெளி உலகம் தெரியாது யாராவது வந்து, இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டால் நம்பி விடுவாள். விழுந்தடித்துக் கொண்டு, தன் சிரமத்தைப் பாராமல் உதவி செய்வாள். ரொம்பவும் சிரமப்பட்டு விடாமல், நாம்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்!' என்பார்.

எப்படிப் பார்த்துக் கொள்வது?

'நானே சாப்பிட்டுக் கொள்கிறேன்!' என்றாலும் கேளாமல், இப்படி விழித்திருந்து உடம்பை வருத்திக் கொள்கிறவளை எப்படித் தடுப்பது?

தாயிடம் தந்தை கடுமையாகப் பேசிப் பரம் கேட்டதில்லை. இப்போது. குடும்பத் தலைவனாகிவிட்ட தானும் அதுபோலவே நடந்து கொள்ள வேண்டும் என்பதிலும், அவன் உறுதியாக இருந்தான்.

கணவர் மட்டும் உயிரோடு இருந்திருந்தால், இப்படி நடக்குமா என்று ஒரு கணம்கூடத் தாயார் ஏங்கி விடக் கூடாது.

தந்தையுடைய நண்பருடைய மகள்தான் சவிதா. ஒரு மாதிரி அழகுதான். கொஞ்சம் நிலையிறங்கி விட்ட நண்பருக்கு உதவி, அதே சமயம் நம் குடும்பத்துக்கும் சவிதா ஒத்துப் போவாள் என்று தந்தை சொன்னதும், அவனுக்கு ரொம்பவே பிடித் திருந்தது.

அப்பாவுக்குத் திடுமென இப்படி ஒரு முடிவு ஏற்படாமல் இருந்திருந்தால், இந்நேரம் அவள் இந்த வீட்டிலேயே மருமகளாக வளைய வந்திருப்பாள். உதயாவுக்கு, அவளது



எதிர்காலத்துக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டான தோழியாக, லோகேசனுக்கு, அன்பும் கண்டிப்புமான அண்ணியாக... முக்கியமாக எத்தனையோ விதத்தில் அம்மாவுக்கு உதவியாக இருந்திருப்பாள்.

அப்படி இருக்க முடியவில்லையே என்பதுதான் அவளது வருத்தமும்.

வீட்டு நிர்வாகத்தில் அவனுடைய தாயாருக்கு உதவி செய்வதில், அவனுடைய பொறுப்பற்ற தம்பியைக் கட்டுப் படுத்துவதில், அழகான அசட்டுத் தங்கைக்குக் குடும்பப் பாங்கைக் கற்றுக் கொடுப்பதில்... எத்தனையோ விதத்தில் அத்தைக்கு உதவியிருக்கலாமே! இப்போது ஒன்றுமே செய்ய முடியவில்லையே என்பதுதான் அவளது அங்கலாய்ப்பும்.

அவ்வப்போது வந்து பார்க்கத்தான் செய்கிறாள். ஆனால் இங்கேயே இருந்து, முழுப் பொறுப்பேற்றுக் கவனிப்பது போல ஆகுமா? அதுதான் அவளுக்கும் வேதனை.

வழக்கமான வேலை என்று செய்து கொண்டே இருப்பதில், இப்போது புரியா விட்டாலும், அவள் வந்து பெருமளவு வேலையை ஏற்றுச் செய்து காட்டும்போதுதான், ஓய்வின் சுகம் என்னவென்று அன்னபூரணிக்கே புரியப்போகிறது. எத்தனை எத்தனை பிரச்சினைகளில், மனதையும் உடலையும் வாட்டி வதைத்திருக்கிறோம். மருமகளிடம் பொறுப்பைக் கொடுத்து விடுவது எவ்வளவு நிம்மதி என்று அப்போதுதான் தெரியும்.

அதுவரை, இன்னமும் ஒன்பது முழு மாதங்கள் அவன் அன்னை இந்தப் பாடுபட்டுத்தான் தீர வேண்டும்போல! பாவம்தான்.

எண்ணமிட்டவாறே உண்டு முடித்துவிட்டுக் கை கழுவி விட்டுச் சென்றவன், அன்னபூரணி பின்னோடு வரவும் நின்று,

''என்னம்மா? செலவுக்கு ஏதும் பணம் வேண்டுமா? லோகனுக்கா அல்லது உதிக்கா? இருவரிடமும் செலவைக் கொஞ்சம் கட்டுப்படுத்தச் சொல்லுங்கள், அம்மா. இப்படி மனம் போனபடி செலவழித்துப் பழகுவது, பிற்காலத்துக்கு நல்லது அல்ல. அதனால் நீங்கள்... அல்லது, நாளைக்கு நானே சொல்லி விடுகிறேன். இப்போது யாருக்குப் பணம் வேண்டுமாம்?'' என்று உள்ளூர எழுந்த எரிச்சலைத் தாயிடம் காட்டாமல் மறைக்க முயன்றபடி பரமேசன் வினவினான்.

அன்னபூரணியின் முகம் சட்டென வாடிப் போயிற்று.

அவளுடைய கணவர் இருந்த வரையில், பணம் பற்றி, அவர் கணக்குப் பார்த்தது இல்லை. பிள்ளைகள் ஏதாவது கேட்டால், உடனே வாங்கிக் கொடுத்து விடுவதுதான். அதிலும் உதயா செல்லப் பெண். அன்னபூரணிதான் அவ்வப்போது, 'போகிற இடத்தில் எப்படியிருக்குமோ? இப்படிக் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்துப் பழக்காதீர்கள்' என்பாள். 'நம் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல், வேறு யாருக்குக் கொடுப்பது?' என்பார் சுந்தரலிங்கம். கொடுக்கவும் செய்வார். இப்போது...

தாயின் மனம் போகும் போக்கை ஊகித்து, ''அப்பாவின் தொழிலில் வரவு, செலவு எல்லாம் இன்னும் பிடிக்குள் அடங்கவில்லை, அம்மா! அதுவரை, அதிகச் செலவை இழுக்காமல் இருந்தால் நல்லது என்று நினைத்தேன்...'' என்று அவன் விளக்க முனையவும், அன்ன பூரணியின் கண்கள் அச்சத்தில் அகன்றன.

''ஏம்பா? யாரும் பெரும்தொகை ஏமாற்றி விட்டார்களா? பெருத்த நஷ்டமா? சமாளிக்க முடியாதா? நான் என் நகைகளை வேண்டுமானால் தரட்டுமா?'' என்று கவலையும் கலக்கமுமாகப் படபடத்தாள்.



தந்தையின் பேச்சு நினைவு வர, ''அடடா, என்னம்மா நீங்கள்? எங்கெங்கோ பரந்து கிடக்கிறது தொழில். எவ்வளவு வரவேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் தெளிவாகத் தெரிய வரவே, இன்னமும் சில மாதங்கள் ஆகும். அதற்காகக் காத்திராமல், சம்பளம், மின்சாரம் போன்ற செலவுகளைச் செய்தே ஆக வேண்டும். முழு மூச்சாய் அங்கே உட்கார்ந்து பார்க்க எனக்கு முடியவில்லை. என் தொழிற்சாலையையும் நான் பார்த்தாக வேண்டும் என்பது உங்களுக்கே தெரியும். அதனால்தான், செலவு பற்றிப் பேசினேன். போகட்டும். எப்படியோ சமாளித்துக் கொள்ளுகிறேன். சொல்லுங்கள். யாருக்குப் பணம் வேண்டும்? எவ்வளவு?'' என்று வினவினான் பரமேசன்.

கவலை அகன்றவளாய், முகம் தெளிய, ''யாருக்கும் பணம் வேண்டாம். பரம், இரண்டு பேருமே பணம் கேட்கவே இல்லை!'' என்றாள் அன்னை.

''பின்னே? ஏதோ சொல்ல வந்த மாதிரித் தோன்றியதே. முக்கியமாக ஒன்றும் இல்லை என்றால், போய்ப் படுங்கள், அம்மா. நேரம் ஆகிறது.''

''விஷயம் முக்கியம்தான். ஆனால், இது வேறு விஷயம்!'' என்றாள் அன்ன பூரணி.

அவள் மேலே பேசுமுன், ''கொஞ்சம் பொறுங்கள்!'' என்று, அவளை அழைத்துப் போய், ஒரு சோஃபாவில் உட்கார வைத்தான். தானும் அடுத்ததில் அமர்ந்து கொண்டான். ''இப்போது சொல்லுங்கள். ஆனால் சீக்கிரம் சொல்லுங்கள். இப்போதே, நீங்கள் தூங்க வேண்டிய நேரம் ரொம்பவே தாண்டிப் போய்விட்டது.''

மகனின் கரிசனம் பெற்றவளின் உள்ளத்தைக் குளிர்வித்தது. 'மனைவி வந்து இந்த அன்பைக் கெடுத்து விடாமல்

காப்பாற்றப்பா!' என்று கடவுளை மனதுள் வேண்டிக் கொண்டு, அன்னபூரணி சொல்லத் தொடங்கினாள்.

''உனக்கு நாதன் மாமாவை நினைவிருக்கிறதா?'' என்று கேட்டாள்.

## 2

நாதன் மாமா!

சிவகுருநாதன் என்பது அவரது பெயர். அது பட்டிக்காடு போல இருப்பதால், வெறும் நாதன் என்று மாற்றிக் கொண்டார். அன்னபூரணியுடைய ஒன்றுவிட்ட தமையன். பெரியப்பா மகன். அஸ்ஸாமில் டீ எஸ்டேட் வைத்திருப்பதாகக் கேள்வி. அங்கேயே, ஒரு வங்காளிப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். மனைவியோடு இருதரம் இங்கே வந்திருக்கிறார். ஒரே ஒரு பெண் குழந்தை. அப்புறமாக, மனைவி இறந்து விட்டதாகத் தெரிவித்திருந்தார். அதே சமயம், இங்கேயும், அன்னபூரணியுடைய தந்தை மரணப் படுக்கையில் இருந்ததால், இங்கிருந்து யாரும் போகவில்லை.

ஆனால் அவர் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவும் இல்லை. எதற்குமே அவர் பெரிதாக அலட்டிக் கொள்கிறவர் கிடையாது என்பது பிறகு தெரிய வந்தது.

ஏனெனில், சுந்தரலிங்கம் இறந்ததற்கும் அவர் வரவில்லை. தகவல் தெரிவித்தபோது, அவர் இந்த நாட்டில் இல்லை. அவருக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்று மட்டும் சொன்னார்கள்.



அதற்கேற்ப, எங்கோ போர்ச்சுக்கல்லில் இருந்து, வருத்தம் தெரிவித்து ஒரு நாலு வரிக் கடிதம் மட்டும் வந்தது. அதன் பிறகு, அவர் இந்தியாவுக்கு வந்தாரா, இல்லையா என்ற தகவலே கிடையாது.

அவரைப் பற்றி நினைக்க, இங்கேயும் யாருக்கும் நேரம் இருக்கவில்லை.

நாலைந்து ஆண்டுகளுக்கு ஒரு தரம் வந்து, தலையைக் காட்டிவிட்டு, அதுவும் அவர் வருகிற நேரம் வீட்டில் இருப்பவர்களோடு மட்டும் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போகிறவரைப் பற்றி என்னத்தை நினைப்பது?

அந்தப் பெண், அவர் மகள் எப்படி இருப்பாள், என்ன செய்கிறாள் என்று இங்கு யாருக்கும் தெரியாது. சிறு வயதில் இரண்டு முறை கூட்டி வந்திருக்கிறார். ஒரு தரம் அவள் மூன்று வயதுச் சிறுமி. அடுத்த தடவை சுமார் பன்னிரண்டு வயதுப் பெண்ணாக.

கல்லூரியில் அடியெடுத்து வைத்ததனால், பரமேஷ் தன்னை மகாப் பெரியவனாக எண்ணிக் கொண்டிருந்த காலம். ஏதோ கிரிக்கெட் போட்டிக்காகக் கிளம்பிக் கொண்டும் இருந்தான். தந்தையின் அருகில், கண்ணை மட்டும் உருட்டியவாறு, ரொம்பவும் பதவிசு மாதிரிக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்க்கையில் அவனுக்கு அலட்சியமாகத்தான் இருந்தது.

எட்டுக்கால் பூச்சி மாதிரி நீள நீளமாகக் கையும் காலுமாக இருந்தவளுக்கு ரதி என்ற பெயரா என்று ஏளனமாய்ச் சிரிப்புக்கூட வந்தது.

அதன் பிறகு, தங்கையைப் பார்க்க நாதன் வந்த சில சமயங்களில், மகள் அவரோடு வரவில்லை. அவளைப் பற்றி

அன்னபூரணி விசாரித்தபோது, 'பள்ளி நேரம், கல்லூரி நடக்கிறது' என்று நாதன் சொன்னது, எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

அதற்கு மேல், அவளைப் பற்றிய அக்கறை யாருக்கும் இருக்கவில்லை.

இவ்வளவுதான் நாதனைப் பற்றிப் பரமேசன் அறிந்தது.

ஒருவேளை துக்கம் விசாரிப்பதற்கு வந்திருப்பாரோ? ஆறி வரும் புண்ணைக் கிளறி விட்டு விட்டாரா?

தாயின் முகத்தை அவசரமாக ஆராய்ந்த மகன், அங்கே அதிகப்பட்ட வேதனை மாதிரி ஏதும் தெரியவில்லை என்று கண்டு நிம்மதியுற்று, ''மறக்குமா அம்மா? உங்கள் பிறந்த வீட்டு உறவென்று, அவர் மட்டும்தானே இருக்கிறார்!'' என்றான்.

''அவர் மட்டுமல்ல. அவருடைய மகளும்!'' என்று அன்னை புன்னகையோடு நினைவுபடுத்தவும், பதிலுக்கு முறுவலித்து, ''ஆமாம், மகளும் இருக்கிறாள். ஆனால் பார்த்துப் பழகாததால், அவளது நினைவே வருவதில்லை. இப்போது அவளுக்கு என்னவாம்?'' என்று மகன் வினவினான்.

''அது...'' என்று சற்றுத் தயங்கிவிட்டு, ''அவள் கொஞ்ச நாள் நம்முடன் இருப்பாள். அண்ணனிடம் நான் சரியென்று சொல்லி விட்டேன், கண்ணா...'' என்று, மகன் முகத்தைக் கவலையுடன் நோக்கினாள் அன்னபூரணி.

அவன் ஏதும் பேசு முன்பாக, ''உ.... உன்னிடம் கேட்டுக் கொண்டு சொல்லியிருக்க வேண்டும். ஆனால், நீ வரும்வரை காத்திருந்து பேச, அண்ணனுக்கு அவகாசம் இல்லை. அஸ்ஸாம் போய், அங்கே கணக்கு வழக்குகளை ஒழுங்கு



படுத்திவிட்டு, மீண்டும் வெளிநாட்டுக்குக் கிளம்ப வேண்டுமாம். அதனால், கொஞ்ச காலம் மகள் இங்கே இருக்கட்டும் என்று கேட்டார். யோசியாமல் சரியென்று விட்டேனடா!'' சிறு குரலில் கூறினாள்.

பயந்த குரலில்.

யாரிடம்?

அண்ணனுக்குப் பயந்து ஒத்துக்கொண்டு விட்டார்களா? நாதனும் படபடவென்று, அடுத்தவருக்குப் பேச வாய்ப்பே கொடுக்காமல், பேசக் கூடியவர்தான். அன்னபூரணியும் மறுப்புக் கூறத் தெரியாதவள்தான். அதற்காக அவள் தலையில் வேண்டாத சுமையை ஏற்றுவதா?

''அந்தப் பெண் வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லையாம்மா?'' என்று இறுகிய குரலில் வினவினான் மைந்தன்.

''ஐயோ, அப்படியெல்லாம் இல்லையடா. தாயில்லாப் பெண். நம் உதியை விடக் கொஞ்சம்தானே பெரியவள். லோகன் வயது என்று நினைக்கிறேன். அப்படி ஒரு சின்னப் பெண் இங்கே வந்து இருப்பதில் எனக்கு என்னம்மா கஷ்டம்? ஆனால்... ஆனால்...''

''ஆனால் என்னம்மா?''

''உனக்குப் பிடிக்காதோ என்றுதான் யோசனையாக இருந்தது...'' என்று அன்னபூரணி மெதுவாகக் கூறவும், மகனுக்கு ஒரு மாதிரி மனம் குன்றி விட்டது.

பெற்றவள் பயந்தது தன்னிடம். பெற்ற மகனிடம்.

வேலை மிகுதியாலும், இன்னும் பல காரணங்களினாலும், பல சமயங்களில் அவன் பொறுமையிழந்து போவதுதான்.

ஆனால், அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, யாரிடமும் காட்டாதிருப்பதாகத்தான் அவன் எண்ணிக் கொண்டிருந்தான்.

ஆனால் அப்படியில்லை போலிருக்கிறதே.

உள்ளூர வருத்தத்துடன், "என்னம்மா நீங்கள்? நம் வீட்டுக்கு, உங்கள் ஒன்றுவிட்ட அண்ணன் மகள் விருந்தாட வருகிறாள். இதில் எனக்குப் பிடிக்காமல் போக என்ன இருக்கிறது? என்னதான் நெருங்கிய உறவு இல்லை என்றாலும், பார்த்துப் பார்த்துப் பழகியிராவிட்டாலும், எங்களுக்கும் உறவுக்காரிதானே! எனக்குப் பிடிக்காமல் போவானேன்? அத்தோடு, இது உங்கள் வீடு அம்மா. இங்கே உங்கள் விருப்பம்தான் முக்கியம். அந்தப் பெண் ரதி வருவது உங்களுக்கு மகிழ்ச்சி என்றால், மற்ற யார் விருப்பத்தைப் பற்றியும் யோசியாமல், தாராளமாக வரச் சொல்லுங்கள்!" என்றான், பரமேசன். அழுத்தமான குரலில்.

தொடர்ந்து, "அவள் வருவதால் உங்களுக்குக் கொஞ்சம் உற்சாகம் ஏற்படுமானால், அதுதான் எங்களுக்கு வேண்டும், அம்மா. ஆனால் அவள் எப்படிப் பட்டவளோ? அவளே உங்களுக்குச் சுமையாகி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று உரைத்தவன், மாமன் மகள் எத்தனை நாட்கள் இருக்கப் போகிறாள் என்று விசாரித்தான்.

"நாட்கள் இல்லை, பரம். மாதங்கள். சிவாண்ணனும், அவரைப் போல இன்னும் சில பெரிய டீ தயாரிப்பாளர்களும் சேர்ந்து, வெளிநாட்டு விற்பனையைப் பெருக்கப் போகிறார் களாம். அதற்காகச் சில காலம் உலகத்தைச் சுற்றிக்கொண்டே இருக்க வேண்டி யிருக்கிறதாம். அஸ்ஸாமில், அண்ணன் இருக்கும் இடத்தில் இப்போது நிலைமை மோசமாகிக் கொண்டே வருகிறதாம். முன்னைப் போல மகளைத் தனியே



விட்டுவிட்டுப் போக மனம் வரவில்லையாம். பார், பரம், அஸ்ஸாம் பற்றி என்ன என்ன படிக்கிறோம்? ரதியை அங்கே தனியாக விட்டுவிட்டுப் போயிருக்கிறார், பார். பாவம்! குழந்தை, ஒண்டியாய், என்னமாய்ப் பயந்து நடுங்கிக் கொண்டு இருந்தாளோ?" என்றாள் அன்ன பூரணி.

"அப்படியெல்லாம் தனியாக விட்டுப் போயிருக்க மாட்டார், அம்மா. அங்கேயும் தெரிந்தவர்கள், மனைவி வகை உறவினர் என்று இருக்கத்தானே செய்வார்கள். அவர்கள் பொறுப்பில் தான் விட்டுப் போயிருப்பார். இப்போது இங்கே விட்டுப் போக, வேறு காரணம் இருக்க வேண்டும்," என்றான் பிள்ளை.

"அது பற்றியும் சொன்னாரடா. நம் பக்கத்துப் பழக்க வழக்கங்கள் தெரிய வேண்டுமாம். நாளைக்குத் திருமணமாகிப் போகிற போது, தகப்பன் வளர்த்த பெண், ஒன்றுமே தெரியவில்லை என்று யாருமே குறை கூறக் கூடாதாம்."

"அப்படியானால், சீக்கிரமே அவளுக்குக் கல்யாணம் செய்யப் போகிறார்கள் என்று சொல்லுங்கள். மாப்பிள்ளை யாராம்? தமிழரா? அல்லது அவரைப் போலவா?"

"இன்னும் பார்க்கவில்லையாம். ஏதாவது நல்ல இடம் இருந்தால் அண்ணன் சொல்லச் சொன்னார்."

"அம்மா, அந்த வேலை மட்டும் வேண்டாம். அந்தப் பெண் ரதியிடம் குணம் எப்படியோ, என்னவோ? அப்புறம் ஒரு சின்னச் சச்சரவு என்றாலும், இருபுறமும் உங்கள் மண்டைதான் உருளும். சவிதா மாதிரி வளர்ப்பு, குணம் இருந்தால் எந்த வீட்டிலும் பிரியமாகப் பொருந்திக் கொள்வாள். ஆனால், ரதியிடம் இன்னொரு சவிதாவை எதிர்பார்ப்பது... ஊகூம், அது நடக்கிற காரியம் அல்ல!" என்று முடித்தான் பரம்.

''அம்மாடி...'' என்று அதிர்ந்து போய் ஏதோ சொல்ல வாயெடுத்த அன்னபூரணி, ஏதும் சொல்லாமலே வாயை மூடிக் கொண்டாள்.

''உங்களுக்குப் புரிகிறது அல்லவா? அதனால், அவளது திருமண விஷயத்தில் மாத்திரம் எச்சரிக்கையோடு ஒதுங்கிக் கொள்ளுங்கள். இனி தூங்கப் போகலாம், அம்மா. ரொம்பவும் நேரமாகிவிட்டது. நாளைக் காலையிலேயே நான் வெளியே செல்ல வேண்டும்.''

எழுந்து, முன்னே சென்ற மகனின் முதுகை வெறித்துப் பார்த்து, அன்னபூரணி பெருமூச்சு விட்டது அவனுக்குத் தெரியாது.

தாயார் நினைத்தது மட்டும் அவனுக்குத் தெரிந்தால்...?

இன்னொரு சவிதாவா என்று அதிர்ந்தது ஒன்று.

அத்தோடு, மகளின் திருமணம் பற்றிப் பேசிய அண்ணனிடம், இங்கே சில நல்ல பையன்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து யாரையாவது பேசி முடித்துவிட்டுப் போகும்படி யோசனை சொன்ன தங்கைக்கு அவர் சொன்ன பதில், அவளை ஏற்கெனவே அதிர வைத்திருந்தது.

''அந்தப் பையன்களை ரதிக்கு அறிமுகப்படுத்தி வை. அவளும் அவர்களைப் பார்த்துப் பழகட்டும். யாரையாவது பிடித்திருந்தால் மேலே பேசுவோம்!'' என்றார், நாதன். இலகுவாக.

அண்ணனின் திருமணம் வீட்டில் கிளம்பிய புயல் நினைவு வர, ''காதல் திருமணமா, அண்ணா?'' என்று ஈனசுரத்தில் அன்னபூரணி கேட்க, ''பொருத்தமான இடம் என்றால்



தப்பில்லை. ஆனால், ரதி சின்னப் பெண். என்றாலும், தப்புத் தண்டாவுக்குப் போக மாட்டாள்!'' என்றார் அவர்.

தப்புத் தண்டா என்று எதைச் சொல்லுகிறாய் என்று கேட்கத் தைரியமற்றுச் சும்மா இருந்துவிட்ட அன்னபூரணி, அதைப் பற்றியும் மகனிடம் மூச்சு விடவில்லை.

## 3

அன்னபூரணியுடைய அண்ணன் மகளான ரதியின் வரவு பற்றி, பரமேசன் அதற்கு மேல் அக்கறை காட்டவில்லை. அக்கறை காட்ட நேரமும் இல்லை.

அவனைப் பொறுத்த வரையில், ஒரு நாளைக்கு, இருபத்து நாலு மணி நேரத்துக்குப் பதிலாக, மேலும் இரண்டு மணி நேரம் கூடுதலாக இருந்தால் நலம் என்கிற நிலை. அவ்வளவு வேலை.

தந்தையின் தொழிலைப் பார்ப்பதும், தந்தையின் அனுமதியோடு, அவர் பணமும் கொடுத்து, நண்பன் ஒருவனோடு சேர்ந்து தொடங்கிய இயந்திரப் பாகங்கள் செய்யும் கூட்டுத் தொழிலில் அவனது பொறுப்பைக் கவனிப்பதுமாக, வாயில் ஈ புகுந்தது தெரியாமல் என்பார்களே, அது போல ஓடிக் கொண்டிருந்தான்.

அதைவிடவும் அவனை அதிகம் வாட்டியது நிதி நிலைமை. வருமானத்தில் ஏற்பட்டிருந்த தேக்கம்.

பாசமுள்ள தந்தையான சுந்தரலிங்கம் திடுமென மறைந்தது ஒரு பெரிய வேதனையும் இழப்புமாக, எல்லோரையும் தவிக்க வைத்தது இயல்பாக எதிர்பார்க்கக் கூடியதுதான்.

ஆனால், யார் என்ன கேட்டாலும், மறுக்காமல், முகம் சுழிக்காமல் செய்து கொடுத்த அவரது நிதி நிலைமை மோசமாக இருந்ததை, இன்னமும் அவனால் முழுமையாக ஏற்க முடியவே இல்லை.

பரமேசனுக்கு, அவன் வேறு தொழில் நடத்த விருப்பம் தெரிவித்ததும், முதலீடாகப் பல லட்சங்கள் கொடுத்து உதவி செய்தார்.

"உன் தொழிலின் திட்ட அறிக்கை பிரமாதமாக இருக்கிறது, ராஜா. நன்றாக வரும். தைரியமாக நடத்து. ஆனால், யாராவது ஏதாவது சொன்னார்கள் என்று மாற்றி விடாமல் திட்டப்படியே கொண்டு போ. கட்டாயம் ஜெயிப்பாய்!" என்று நல்லாசி வழங்கிப் பணம் கொடுத்தார்.

அவர் சொன்னபடி, அந்தத் தொழில் நன்றாகத்தான் வந்தது. வந்து கொண்டும் இருக்கிறது.

ஆனால், அவரது சொந்தத் தொழில்தான் நன்றாக நடக்கவில்லை. நடப்பதென்ன, எழுந்து நிற்க வைப்பதே பெரும்பாடாக இருந்தது. அன்றாடச் செலவுகளையே சமாளித்துத்தான் செய்ய வேண்டியிருந்தது.

இந்த அழகில், இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன், லோகனுக்குக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் விலையில் பைக் வாங்கிக் கொடுத்திருக்கிறார். அதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பாக, உதயாவுக்கு ஒரு வைர பிரேஸ்லெட்!

இரண்டுமே பிறந்த நாள் பரிசுகள்.

ஆனால், இவ்வளவு அதிக விலையில்தான் பிள்ளைகளுக்குப் பிறந்த நாள் பரிசு கொடுத்தாக வேண்டுமா? சவிதா



சொல்வது போல, லோகனுக்கு ஓர் ஐயாயிரம் ரூபாயில் ஒரு கைக்கடிகாரமும், உதயாவுக்கு அதே விலையில் ஒரு பட்டுச் சேலையும் வாங்கிக் கொடுத்திருக்கலாம்.

தன்னைப் பொறுத்தவரையில், பிறந்த நாள் உடைக்குப் பொருத்தமாகக் கைக்குப் பத்துக் கண்ணாடி வளையல்கள் பரிசளித்தாலும், தனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று அவள் சொன்னபோது, பரமேசனுக்கு அப்படியே மனம் நெகிழ்ந்து போயிற்று.

இப்படிப்பட்ட ஒரு ரத்தினத்தை, அவனுக்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறாரே என்ற ஒரு காரணம் மட்டுமே, அனாவசியமாய் அதிகச் செலவு செய்ததால் அவர் மீது வந்த கோபத்தை மறையச் செய்தது எனலாம்.

இன்னொன்றும்.

இதே தந்தை, பரமேசனுக்கும், தொழில் தொடங்குவதற்காகப் பல லட்சங்கள் கொடுத்தார்தானே! அவனுக்குக் கொடுத்த தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் செலவெல்லாம் வெறும் சுண்டைக்காய்தானே!

என்னதான் அது எதிர்கால வருமானத்துக்கான முதலீடு, இவை போன்ற வீண் செலவல்ல என்று சவிதா எடுத்துச் சொன்னபோதும், பரமேசனின் மனம் அதை ஒப்ப மறுத்தது.

அவள் சொல்வது சரியாகவும் இருக்கலாம்.

ஆனால், 'நமக்குத்தான் ஒரு தொழில் இருக்கிறதே, இதிலேயே சேர்ந்து வேலை செய்யேன்!' என்று, சுந்தரலிங்கம் பணம் தர மறுத்திருந்தால், அதைக் குறை கூறவே முடியாதே. சொந்தத் தொழில் செய்ய மகன் விரும்புகிறான் என்பதற்காகவே, அவ்வளவு பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அந்தப் பணத்திற்கு ஈடாக, அவர் எதையும் எதிர்பார்க்கவும் இல்லை.

அவ்வளவு பணத்தை எடுத்துக் கொடுத்ததால்தான், தந்தையின் தொழில் இப்படிச் சங்கடப்படுகிறதோ என்று கூடப் பரமேசன் மனம் குன்றியது உண்டு.

ஆனால், அவனுக்கு அவர் பணம் கொடுத்தது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக. அதன் பிறகும், தொழில் நன்றாகத்தான் நடந்திருக்கிறது.

சென்ற ஆண்டு தொழிற்சாலையில் விரிவுபடுத்தியிருக் கிறார். அதில்தான், அவர் எண்ணியதைவிட அதிகச் செலவாகி இருக்க வேண்டும் என்று பரமேசன் ஊகித்தான்.

மற்றச் செலவுகளைக் கட்டுப்படுத்தி அதைச் சீர் செய்யத் தந்தை சற்றேனும் முயன்றிருக்கலாம். ஆனால், குடும்பத் தினரிடம் மறுக்கத் தெரியாத பாசம், அதைச் செய்ய அவரை விடவில்லை போலும்.

அவனது சொந்தத் தொழில் கை கொடுக்கக் கூடியதே. அந்த அளவுக்கு அதிலும் வருமானம் வரத்தான் செய்தது.

ஆனால், அது மிகவும் நல்லபடியாக நடக்க, தொழிற் சாலைக்காக வாடகைக்கு எடுத்திருந்த இடமும் விற்பனைக்கு வரவே, கொஞ்சம் கடன் பெற்று ஒரு பெரும் தொகைக்கு, நண்பர்கள் இருவரும் அந்த இடத்தை விலைக்கு வாங்கி விட்டார்கள். அன்றாடத் தொழில் செலவுகளோடு, இந்தக் கடன் கட்டுவதும் சேர்ந்து கொள்ளவே, அங்கிருந்தும் பணம் எடுக்க முடியாத நிலை.

பங்குதாரர்கள் இருவருமே, கடன் முடியும்வரை, சொந்தச் செலவுக்குக் கூட, மிகவும் குறைவான தொகையே எடுப்பது



என்று முடிவு செய்திருந்ததால், அங்கிருந்து அதிகப்படி பணம் எடுப்பதும் முடியாது போயிற்று.

விளைவாக, வரவுக்கும் செலவுக்கும் ஈடுகட்டப் பரமேசன் பாடு படும்படி ஆயிற்று.

அவனது அதிகப்படி முயற்சிகளின் விளைவாகச் சிக்கனம் பற்றித் தாய், தம்பி, தங்கையிடம் ஏதாவது வாயை விடுவதும், உடனே அவர்களது திகைத்த தோற்றத்தில் கழிவிரக்கம் கொண்டு, அவர்களையே ஏதாவது சொல்லித் தேற்றி, சற்றுச் சின்ன அளவில் பணம் கொடுத்துச் சமாளிப்பதுமாக நாட்கள் சென்று கொண்டிருந்தன.

இந்தச் செலவுகளால் பெரிய பாதிப்பு ஒன்றும் ஏற்பட்டு விடாது என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொள்வான்.

ஆனால் அதையும் முழுதாக ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை. ஏனெனில், 'சிறு துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழியை மேற்கோள் காட்டி, ''எல்லாம் நம் குடும்பம் சீக்கிரமே முன்னுக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்! விரைவாக எல்லாம் நன்றாகி விட்டால் அதை ஆனந்தமாக அனுபவிக்கப் போவதும், நம் குடும்பம்தானே! அத்தையும், பிள்ளைகளும் அதை யோசித்து நடந்தால் நல்லது!'' என்று சவிதா சொன்னதும் சரியென்றுதான் பரமேசனுக்குத் தோன்றியது.

தொடர்ந்து, ''பாருங்கள். பிள்ளைகள், பிள்ளைகள் என்று அத்தை சொல்லுகிற மாதிரியே எனக்கும் வருகிறது. பிள்ளைகளின் பொக்கை வாய்ச் சிரிப்பிலிருந்து பார்த்து ரசித்து வளர்க்கும்போது, பெரும்பான்மைத் தாய்மாருக்கு அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டார்கள் என்பதே தெரியாமல்

போய்விடும் என்றும், எப்போதும் அவர்களைச் சிறு பிள்ளைகளாகவே கருதுவார்கள் என்றும் என் அம்மா சொல்லுவார்கள். தானும் அந்த மாதிரி இருந்து விடக்கூடாது என்று, சிறு வயதில் இருந்தே, என்னைக் கண்டிப்புடன் வளர்த்தார்கள். ஆனால் அத்தைக்கு ரொம்பவும் இளகிய மனம். யாரையும் கடிந்து பேச மனம் வராது. வெகுளி வேறு. நான் வந்துதான் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்கும் இப்போதைக்கு வழியில்லாது போயிற்று, பாருங்கள்!'' என்று அவள் வருத்தப்பட்டபோது, அவனுக்கும் அதேபோல வருத்தமாகத்தான் இருந்தது.

வருத்தம் அதற்காக மட்டுமல்ல.

பாவம், திருமணம் நிச்சயமான பெண். திருமண நாள் என்றைக்கு என்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோதுதான் தந்தை காலமானது.

ஓரிரு மாதங்களில் என்றிருந்த திருமணம் ஓர் ஆண்டு தள்ளிப் போயிற்று.

அது விதி என்றிருந்தாலும், வருங்காலக் கணவன் அவன்தான் என்று ஆன பின் பரமேசனோடு பேசிப் பழகும் ஆர்வம், சவிதாவுக்கு இருக்கத்தானே செய்யும்?

பெற்ற தந்தையின் மறைவு காரணமான வேதனையும், தொடர்ந்து அதிகப்படி வேலையுமாக, அவன் மனதில் அந்த வகை உணர்வுகள் மரத்துப் போயிருக்கலாம்.

ஆனால், சவிதாவிடமும் அதே சன்னியாசித்தனத்தை எதிர்பார்க்கக் கூடாதில்லையா?

பரமேசனுக்கு அலுவல் நேரம் முடிகிற சமயம், ஆட்டோவில் வந்து பார்வையாளர் அறையில் காத்திருப்பாள்.



பாவம், இனிமேல் கார் அனுப்ப வேண்டும் என்று நினைப்பான். ஆனால், அதுவே தினமும் வருமாறு அவளைக் கட்டாயப்படுத்துவது போல ஆகிவிடுமோ என்று தயக்கம் தோன்றிவிடும். அத்தோடு வேலையில் பெரும்பாலும் மறந்தும் போகும்.

அவள் யார் என்று தெரிந்ததால், அலுவலகத்தில், யாராவது ஆட்டோவுக்குப் பணம் கொடுத்துவிட்டுக் கணக்கு எழுதி வாங்க ஏற்பாடு செய்திருந்தான். அவனாகவே, சவிதா வரும் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து விடும்படி வாட்ச்மேனிடம் பணம் கொடுத்து வைத்தான்.

அவனுடைய வருங்கால மனைவியின் போக்குவரத்துக்கு நிறுவனக் கணக்கில் பணம் எடுப்பது பிடிக்காமல், அவன் செய்த ஏற்பாடு. அத்தோடு, முதலாளி வீட்டு ஆள் என்று யாராவது அவசரப்பட்டுப் பணத்தைக் கொடுப்பதும், பிறகு அதைக் கணக்கெழுதி வாங்குவதும்கூட அவனுக்குப் பிடிக்கவில்லைதான்.

வேலை முடிந்து அவன் வரச் சற்றுத் தாமதமானால்கூட முகத்தில் எரிச்சலோ, கோபமோ சிறிதும் காட்டாமல் அவள் அமைதியாக உட்கார்ந்திருப்பதைப் பார்க்க, அவனுக்குப் பாவமாக இருக்கும்.

அவனுக்கு அதிகத் தாமதமானாலும், படிப்பதற்காக விவேகானந்தர், சுகபோதானந்தா போன்றோரின் கட்டுரைகள் அடங்கிய புத்தகங்களைக் கொண்டு வருவாள்.

அநேக நாட்கள் அவனுக்குத் தாமதமாகித்தான் போகும்.

அதற்காக, அவன் வருத்தம் தெரிவித்தால், "நீங்கள் என்ன வெட்டியாகவா பொழுது போக்கினீர்கள்? வேலைதானே

செய்தீர்கள்? உங்களுக்கு இருக்கும் வேலையின் நடுவிலும் என் நினைவு இருப்பதே பெரிய காரியம். அதுவே எனக்குப் போதும்!" என்று அழகாகப் புன்னகை செய்வாள்.

அவனுக்குக் குன்றிக் குறுகிவிடும்.

வேலையில் புகுந்து விட்டால், அவன் யாரையுமே நினைப்பது இல்லை. அப்படியே நினைப்பது என்றாலும் அன்னை நினைவுதான் வரும்.

ஆனால் வருங்கால மனைவியின் நினைவும் வரவேண்டும் தானே? அதுவும், அவனையே நினைத்து அவள் வந்து காத்துக் கிடக்கும்போது.

இந்த வேலை முடிந்தால், அடுத்து தந்தையின் ஃபாக்டரிக் குப் போக வேண்டும். அங்கே அன்றையக் கணக்குகளை வைத்துக் கொண்டு, பொது நிர்வாகியும் மற்றவர்களும் காத்திருப்பார்கள். அடுத்த 'ஷிஃப்ட்' வேலையும் தொடங்கத் தயாராக இருக்கும்.

செல்லும் வழியிலேயே, சவிதாவின் கேள்விகளுக்குப் பதில் சொல்வான். அதுதான் அவர்களது உரையாடல். சொந்த நிறுவனத்திலிருந்து, நேரத்துக்குக் கிளம்பியிருந்தால், ஏதாவது ஒரு காஃபி ஷாப்பில், ஒரு காஃபி டிஃபன் சாப்பிடுவார்கள். அல்லது, நேரே அவளது வீட்டில் கொண்டு விட்டுவிட்டுக் கிளம்பி விடுவான்.

பெரும்பாலும், அந்த ஏசி காரில் செல்லும் நேரம்தான், அவர் களுக்குத் தனித்திருக்கக் கிடைக்கும் அவகாசமாக இருக்கும்.

ஆனால், அதுவே சவிதாவைக் குளிர வைத்துவிடும். இதை விடுவதா? எதற்காகவும், இந்த சுகத்தை இழக்கக்கூடாது என்று நிச்சயமாக நினைத்தாள் அவள்.



அவ்வப்போது, தன் வருங்காலப் புகுந்த வீட்டுக்கும், சவிதா செல்வதுண்டு.

வரப்போகும் மாமியார், நாத்தனார், மைத்துனனிடமும் பழகிக் கொள்ள வேண்டும் அல்லவா?

செல்லும்போது, அந்தப் பெரிய வீடும், அதன் அழகிய தோட்டமும் அவளது எண்ணத்தை மேலும் உறுதிப்படுத்தும். ரசித்து ரசித்து மகிழ்ந்தபடியே வீட்டினுள் செல்லுவாள். அந்த மகிழ்ச்சிக்காகவே அடிக்கடி செல்லுவாள்.

அப்படிச் சென்ற போதுதான், ரதியின் வரவு பற்றி அவள் அறிய நேர்ந்தது.

மாமன் மகளின் வரவு பற்றிப் பரமேசனே அவளிடம் சொல்லாதது, அவளுக்குச் சற்று உறுத்தல்தான்.

அதைக் காட்டிக் கொள்ளாமல், ''என்ன, முறைப்பெண் வரப் போகிறாளாமே!'' என்று கேலியாகப் பரமேசனிடம் விசாரித்தாள்.

அடுத்த வாரத்து வேலைக்காக, இரும்புத் தகடு வாங்குவது பற்றி மனதுள் கணக்கிட்டுக் கொண்டிருந்த பரமேசன் ஒன்றும் புரியாமல், ''யாரது முறைப் பெண்? யாருக்கு?'' என்று வினவினான்.

''எல்லாம் உங்களுக்குத்தான். உங்கள் மாமா மகள் வரப்போவது பற்றி நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லாமல் மறைத்து விட்டீர்கள்!'' என்று மேலும் விளையாட்டுக் குரலிலேயே சவிதா கேட்டாள்.

''யார், ரதியா? ஆ... ஆமாம். அவள் வரப்போவதாக அம்மா சொன்னார்களே. எனக்கே மறந்தே போய்விட்டது!'' என்றான் அவன். ''எப்போது வரப் போகிறாளோ தெரியவில்லை.''

''பெயர் ரதி என்றதும், எப்போது பார்ப்போம் என்று ஏக்கமாக இருக்கிறதாக்கும்!'' என்று கேலி போலவே கூறிவிட்டு, ''ஆனால், எனக்கு ஒன்று புரியவில்லை, பரம். அவளும் இளம் பெண் என்று அத்தை சொன்னார்கள். இரண்டு இளைஞர்கள் இருக்கும் வீட்டில் அவள் வந்து தங்கினால் நாலு பேர் ஒரு விதமாகப் பேச மாட்டார்களா? இதை அத்தையோ, அவளுடைய அப்பாவோ யோசித்தது போலவே, தெரிய வில்லையே!'' என்று வியந்தாள்.

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் பரமேசன். ''ரதி எங்கள் மாமா மகள், உறவுக்காரி. அவள் எங்கள் வீட்டில் தங்காமல், வேறு எங்கே தங்க முடியும்? இதில் ஒரு விதமாகப் பேச என்ன இருக்கிறது? உன் பேச்சு எனக்குப் புரியவில்லை!'' என்றான் பரமேசன்.

இதற்கு மேல் நேரடியாக, அந்த ரதி உனக்கு வலை போட வருகிறாளோ என்பது போலப் பேச, சவிதாவுக்குத் தைரியம் இல்லை. அவள் அனாவசியமாகச் சந்தேகப்படுகிறவள் என்று, பரமேசன் அவளைக் குறைவாக எண்ணி விடக் கூடாதே. அதுவும், இன்னமும் திருமணம் ஆகாத நிலையில்.

உடனே கலகலவென்று சிரித்து, ''என் பேச்சு இல்லை, டியர். எங்கள் பக்கத்து வீட்டுப் பாட்டியின் பேச்சு. ரதியைப் பற்றி அன்றைக்கு அத்தை சொல்லிக் கொண்டு இருந்தார்களா? வீட்டுக்குப் போய், நான் அம்மாவிடம் சொன்னபோது, அந்தப் பாட்டியும் இருந்தது. அதுதான் இப்படியெல்லாம்... ரதியுடைய அம்மா வங்காளியாமே... என்ன மாதிரிப் பழக்கமோ, என்னவோ என்று... பாட்டி உளறியதுதான்!'' என்று சமாளித்தாள் அவள்.



''உளறலேதான். அவள் தாய் பெங்காலி என்றால், அதற்காக அவள் தலையில் கொம்பா முளைத்திருக்கப் போகிறது! வங்காளமும் இந்தியாவில் உள்ளதுதானே?'' என்று சிறு எரிச்சலுடனேயே கூறினான் பரமேசன்.

''அந்தப் பாட்டி, அவ்வப்போது, இப்படித்தான் உளறும். எப்போதும் டிவி முன் உட்கார்ந்து, கண்டதையும் பார்த்துவிட்டு வடக்கே உள்ளவர்கள் போலக் கவர்ச்சியாக உடை அணிவாளோ என்று... வயதாகி விட்டதல்லவா? விடுங்கள். அந்த வயதான பாட்டியின் பேச்சு நமக்கு எதற்கு? எனக்கு ரதியை எப்போது பார்ப்போம் என்று இருக்கிறது. எனக்குச் சம வயதுத் தோழியாக இருப்பாள் என்று நினைக்கிறேன். அவள் எப்போது வருகிறாள்?'' என்று துப்பட்டாவை ஒழுங்காக இழுத்துவிட்டபடி, ஆவல் காட்டி வினவினாள் சவிதா.

''யாருக்குத் தெரியும்?'' என்றான் பரமேசன் அசிரத்தையாக. ''இந்த மாதக் கடைசிக்குள் ஒரு நாள் அவள் வருவாள் என்று, மாமா ஒரு வரி கிறுக்கி அனுப்பியிருந்தார். அடுத்த வாரத்தில் என்றைக்கேனும் கொண்டு விட்டு விட்டுப் போவார் என்று நினைக்கிறேன். ஏதோ வருகிறபோது வரட்டும்!'' என்று தோளைக் குலுக்கி, அந்தப் பேச்சை முடித்தான்.

ரதியிடம் சிரத்தை காட்டாமல், பரமேசன் பேசிய விதம் சவிதாவுக்கு ஆறுதல் அளித்தபோதும், அந்தப் பெண்ணை நேரில் பார்த்து விட்டால், முழு நிம்மதியாக இருக்கும் என்று அவள் எண்ணினாள்.

வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக, ரதியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தபோது, பரமேசன் மட்டும் அதைப் பற்றிய சலனமே இல்லாமல் இருந்தான்.

ஏதோ, வருவது வரப் போகிறாள், வந்து இருக்கும்போது அம்மாவுக்குத் தொல்லையின்றி இருந்துவிட்டுப் போனால் சரி என்பது அவனது எண்ணம்.

கடைசியாக, ரதி என்றைக்கு வருவாள் என்றும் நாதனின் ஒரு வரிக் கிறுக்கல் வந்து தெரியப்படுத்தியது.

அவள் வரும்போது எப்படி வரவேற்க வேண்டும் என்றெல்லாம் பெரிய திட்டங்கள் போட்டுவிட்டு, அன்னபூரணியும், அவளுடைய இளைய பிள்ளைகளும் படுக்கப் போனால், அவர்கள் படுக்கையை விட்டு எழு முன்பே, விடிகாலை ஐந்தரை மணிக்கு வந்து, அவர்கள் வீட்டு அழைப்பு மணியை அழுத்திக் கொண்டிருந்தாள் ரதி.

## 4

பொதுவாக, அன்னபூரணியின் குடும்பத்தில், யாரும் அதிகாலையில் எழுகிறவர்கள் கிடையாது.

அப்படியே எழுந்தாலும், நகரில் நடக்கும் சில துணிகரக் கொள்ளைகளைப் பற்றிய விவரங்களைப் படித்ததில் இருந்து, வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வருவது கிடையாது. அதாவது, அன்னபூரணி வரவிடுவது கிடையாது.

இறப்பு போன்ற இழப்பு நேர்ந்தால், வீட்டில் எல்லோருக் குமே மனதில் ஓர் அச்சம் குடிகொண்டு விடும். 'பட்ட காலி லேயே படும். கெட்ட குடியே கெடும்' என்பார்களே, அதுபோல நமக்கு இன்னும் என்னென்ன வேதனைகள் காத்திருக்கிறதோ என்ற பயம். அது மறைய வெகு காலம் ஆகும். அன்ன பூரணிக்கும் அந்தப் பாதிப்பு நிறையவே இருந்தது.



எனவே, ஆறு மணிக்கு மேல், நன்கு வெளிச்சம் பரவிய பிறகே வாசல் தெளித்துக் கோலம் போட வேண்டும் என்று, வீட்டோடு இருக்கும் வேலைக்காரிக்குக்கூட உத்தரவிட்டு வைத்திருந்தாள். அதுவரை வீட்டுக் கதவைத் திறப்பதே இல்லை.

இத்தனைக்கும், இரவு பகல் எந்நேரமும் வாயிலில் ஒரு காவலாள் இருப்பான்.

அப்போதும், அவளது பயம் அப்படியேதான் இருந்தது. 'இருக்கிற கெட்ட நேரத்தில் இன்னும் என்ன நடக்கப் போகிறதோ!' என்பாள்.

அவனுடைய தந்தை இருந்தவரையும், உடலைக் கட்டுக் கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பரமேசன் காலையில் எழுந்து தோட்டத்தில் ஓடுவது உண்டு. அதிக வேலை காரணமாக இப்போது தாமதமாகப் படுப்பதும், தயின் பயமுமாக அந்த விடிகாலை ஓட்டம் நின்று போயிற்று.

அவனுக்கு எந்தப் பயமும் இல்லை என்றாலும், தாயின் மன அமைதியை முக்கியமாகக் கருதிக் காலையில் கதவைத் திறந்து வெளியே செல்வது இல்லை.

மாற்று ஏற்பாடாக, அறைக்குள்ளேயே ஏதாவது உடற்பயிற் சிகள் செய்வான். அன்றும், அவன் அப்படி உடல் பயிற்சியைத் தொடங்கிய போதுதான் அழைப்பு மணி வீட்டை அதிரடித்தது.

சற்றுப் பொறுத்திருந்து கவனித்தான்.

மீண்டும் அழைப்பு மணி ஓசை கேட்கவே, பால்கனி வழியே எட்டிப் பார்த்தான்.

செக்கச் செவேல் என்று, தக்காளிப்பழ நிறத்தில், ஒரு காரின் பின்புறம் தெரிந்தது.

கூடவே, ''அம்மா! ஐயா!'' என்று வாயிற்காவலனின் குரலும் கேட்கவே, டீ ஷர்ட்டை எடுத்து மாட்டியபடியே கீழிறங்கிச் சென்றான்.

அங்கே, ஏற்கெனவே வீட்டு அங்கத்தினர் அனைவரும் கதவின் பின் குழுமியிருந்தனர்.

''கதவைத் திறப்பதற்கு என்ன அம்மா? வாட்ச்மேன் குரல் கேட்கவில்லை?'' என்று முன்னே சென்று கதவைத் திறந்தான் பரமேசன்.

விடிகாலைக் குளிரில் ஓட்டி வந்ததாலோ, என்னவோ, கன்னங்கள் ரோஜா நிறத்துடன் கண்கள் பளபளக்க, ஓர் அழகிய பெண் வெளியில் நின்று கொண்டிருந்தாள்.

உள்ளிருந்த வரவேற்புக் குழுவைப் பார்த்ததும், புன்னகையில் அவளது பற்களும் பளீரிட்டன.

சுழன்ற பார்வை அன்ன பூரணியிடம் நிலைக்க, ''அத்தைதானே? அத்தை! நான் ரதி. யாருக்காவது என்னை அடையாளம் தெரிகிறதா?'' புன்சிரிப்புடன் வினவினாள்.

''என் கண்ணு!'' என்று வியப்புடன் கூவியவாறு, முன்னே வந்து அவளை அணைத்துக் கொண்டாள் அன்னபூரணி.

''ஆனால், இந்த நேரத்தில் எப்படிம்மா வந்தாய்? அப்பா எங்கே? சாமான்களோடு, வேறு கார், டாக்சி எதிலாவது பின்னோடு வருகிறாரா?'' என்று விசாரித்தாள்.

வியப்புடன் தகப்பனுடைய தங்கையைப் பார்த்தாள் வந்தவள். ''என்ன அத்தை, அப்பா எழுதவில்லை? அப்பாவின்



விமானம் நேற்று நள்ளிரவே கிளம்பி விட்டதே. அவரை அனுப்பிவிட்டு, நான் இன்று வருவேன் என்று எழுதச் சொன்னேனே... மைகாட்! எழுதவில்லையா? இல்லையே. ஏதோ எழுதினாரே. நான்தானே தபாலில் போட்டேன்!'' என்று வில்லாய் வளைந்திருந்த புருவங்களை லேசாகச் சுழித்துக் குழப்பத்துடன் வினவினாள்.

''கடிதம் வந்தது. அதில், நீ இன்று வருவதாக ஒரே ஒரு வரி மட்டும் கிறுக்கியிருந்தது. ஆனால் இந்த அதிகாலையில் வருவாய் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை!'' என்றான் பரமேசன்.

''சே! மாமா எழுத்தை அப்படிச் சொல்லாதே. மரியாதை இல்லை!'' என்றாள் அன்னபூரணி.

''உண்மையைச் சொல்வதில் மரியாதை எங்கே வந்தது அத்தை? நானே அப்பாவிடம் உங்களுக்குப் புரிய வேண்டுமே என்று, தேதியை எண்ணில் எழுதச் சொன்னேன்!'' என்றாள் அவள் சரளமாக.

தொடர்ந்து, அதிகாலையில் வந்து சேர்ந்த விதத்தையும் சொன்னாள். ''அப்பாவுக்கு நடு ராத்திரியில் விமானம், அத்தை. அவரை வழியனுப்பிவிட்டு அந்த நேரத்தில் வந்து, உங்களை எழுப்பித் தொல்லை செய்யக் கூடாது என்று, விமான நிலையத்தில் 'பார்க்கிங்' இடத்திலேயே காரில் கொஞ்சம் கோழித் தூக்கம் போட்டுவிட்டு, ஐந்து மணியானதும் கிளம்பினேன்.'' என்றாள் சர்வ சாதாரணமாக.

''தனியாகவா?'' என்று ஒரு கணம் திகைத்துவிட்டு, உடனேயே சமாளித்து, ''இதோ பார், உன் பெரியத்தான் பரமேசன். இவன் அடுத்தவன் லோகேசன். இவள் உதயா.

இவர்களை எல்லாம் உனக்கு அடையாளம் தெரிகிறதா?'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

புன்னகையோடு உரிய பதிலைச் சொல்லி, அறிமுகப் படலத்தை ஏற்றவள், தன் அத்தையின் பக்கம் திரும்பி, ''அத்தை, நான் ஏதும் தப்பாகச் சொல்லி விட்டேனா? விடிகாலையில் வந்ததன் விளக்கம் சொல்லும்போது, ஒரு மாதிரி ஆகி விட்டீர்களே!'' என்று வெளிப்படையாக வினவினாள் ரதி.

சிறு வியப்புடன் பரமேசன் நோக்க, பதில் சொல்லத் தயங்கினாள் பெரியவள்.

''சும்மா சொல்லுங்கள், அத்தை. எதுவானாலும் மறைக்காமல் சொல்லி விடுங்கள். உங்களுக்குச் சங்கடம் உண்டாகும்படி நடக்கக் கூடாது என்று அப்பா கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். சொல்லுங்கள், அத்தை!'' என்று உலுக்கினாள் வந்தவள்.

''அதில்லைம்மா... நம் வீட்டுப் பெண்கள், துணையின்றி, வெளியே ராத்தங்குவது இல்லை. அதுவும் வெறுமனே ஒரு காரில்...''

''தனியே வெளியே ராத்தங்கக் கூடாது...'' என்று, மனனம் செய்வது போல, ஒரு தரம் சொல்லிக் கொண்டாள் ரதி. ''இனிமேல் கவனம் வைத்துக் கொள்கிறேன்.''

''ஆனால், இந்தக் காரில் தங்கியதில் பயம் ஒன்றும் இல்லை, அத்தை! ஏசி கார். வெளியே இருந்து திறக்க முடியாது. மற்றப்படி, இங்கு கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளுக்கு மாறாக, நான் என்ன செய்தாலும், கொஞ்சம்கூடத் தயங்காமல், தாராளமாகச் சுட்டிக் காட்டி விடுங்கள். என்ன?'' என்றவள், அடக்க முயன்று முடியாமல், ஒரு சின்னக் கொட்டாவியைக் கை மறைவில் வெளியிட்டு, ''சாரி!'' என்றாள்.



''இரவு சரியாகத் தூங்கவில்லை அல்லவா? அதுதான். அம்மா, ரதியைப் படுத்துத் தூங்கச் சொல்லுங்கள்...'' என்று பரமேசன் கூறிக் கொண்டு இருக்கும்போதே, ''ஆமாமாம். பரம் சொல்லுவது சரிதான். படுத்துக் கொஞ்சம் தூங்கும்மா. உதிம்மா, ரதிக்கு அவள் அறையைக் காட்டு. லோகா, காரிலிருந்து சாமான்களை எடுத்துக் கொடு...'' என்று ஒவ்வொருவருக்கும் அன்னபூரணி வேலை ஒதுக்கலானாள்.

''அம்மா! பொறுங்கள். முதலில் ரதிக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்கள். சாப்பிட்டுவிட்டுத் தூங்கினால், கூடக் கொஞ்ச நேரம் நிம்மதியாக உறங்க முடியும்!'' என்றான் பரமேசன்.

''தாங்க்ஸ், பரமேசன்!'' என்று, ரதி அவனுக்கு நன்றி தெரிவித்தாள். ''எனக்கே கொஞ்சம் பசிதான். ஆனால், இந்த நேரத்தில் எங்கேயும் நின்று சாப்பிட யோசனையாக இருந்ததால், நேரே வந்துவிட்டேன். எனக்குப் பெரிதாக எதுவும் வேண்டாம், அத்தை. ரொட்டியும், அத்தோடு சேர்த்துச் சாப்பிட சாஸ், ஜாம் ஏதாவது இருந்தால் போதும்!'' என்றபடி அன்னபூரணியோடு உள்ளே சென்றாள் அவள்.

சமையல்கட்டில், தனக்கு முதல் காஃபி போட்டுக் கொண்டிருந்த சமையல்கார அன்னம்மாவைத் தோசை சுடச் சொல்லி, நாலு தோசைகளை மிளகாய்ப் பொடி, சாஸுடன் ஒரு வெட்டு வெட்டிவிட்டுத் தூங்கப் போனாள்.

சற்றும் அசைவற்று, அவள் தூங்கி எழுந்து வந்தபோது, பத்து மணிக்கும் மேலாக ஆகியிருந்தது.

அவளது அறையோடு இணைந்திருந்த குளியலறையில் அவசரமாகக் குளித்து உடை மாற்றிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள். வீட்டுப் பெண்கள் இருவரும் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

பையன்கள் இருவரும் கண்ணில் படவில்லை என்றாலும், வீட்டின் ஏதோ பகுதியில் பாப் இசை உரக்கவே முழங்கிக் கொண்டு இருப்பது கேட்டது. ஏதோ ஒரு மகனின் ரசனையோ, அல்லது ஆடியோ சிஸ்டத்தை அணைக்க மறந்து, வெளியே போய் விட்டார்களோ என்று எண்ணியவாறே, ரதி அன்ன பூரணியிடம் சென்றாள்.

உதயா குதித்தெழுந்து, அவளிடம் செல்ல, "வாம்மா, நன்றாகத் தூங்கினாயா?" என்று, எதிரில் கிடந்த சோஃபாவைக் காட்டி உட்காரச் சொன்னாள் அவள் அன்னை.

"உங்களுக்குக் குடிப்பதற்குப் பழச்சாறு ஏதாவது கொண்டு வரவா, ரதி?" என்று வினவிய உதயாவின் கையைப் பற்றி, அருகில் உட்கார வைத்தாள் ரதி.

"எனக்கு இப்போது எதுவும் வேண்டாம். கூடவே, இந்த 'நீங்கள், வாங்க'ளும் வேண்டாம். உன்னை விட, நான் கொஞ்சம் பெரியவளாகத்தான் இருப்பேன் என்று நினைக் கிறேன். ஆனால் மிஞ்சி மிஞ்சி ஓரிரு ஆண்டுகள் வேறுபாடு தானே இருக்கும்? அதற்கெல்லாம் பெரிய மரியாதை காட்டி, என்னைத் தூர நிறுத்தி விடாதே. நீயும் நானும் சிநேகிதிகள். சரிதானா?" என்று அவள் சரளமாகக் கூறவும், மற்ற இருவரின் முகங்களும் மேலும் மலர்ந்தன.

"இரண்டு ஆண்டுகளா? முழுசாகப் பத்து மாதங்கள் கூடக் கிடையாது. நீ பிறந்த சேதி வந்தபோது, உதி எனக்கு வயிற்றிலே வந்து விட்டாளே. ஆனால், இந்த... வந்து, சில பேர் எல்லோரிடமும் மரியாதை எதிர்பார்ப்பதால், போட்டு விட்டாள் என்று நினைக்கிறேன்!" என்று எப்படியோ விளக்கி முடித்தாள் அன்னபூரணி.



வியப்புடன் நோக்கியபோதும், அவளது தடுமாற்றத்துக்கு விளக்கம் ஏதும் கேளாமல், "பரமேசன், லோகேசன் இருவரும் எங்கே, அத்தை? வேலைக்குப் போய்விட்டார்களா?" என்று அங்கே இல்லாத மற்றவர்களைப் பற்றி விசாரித்தாள்.

அப்போதும், அன்னபூரணி சட்டென்று பதில் சொல்லி விடவில்லை. ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, பிறகு தலையசைத்து, அதை மாற்றி, "பரம் எட்டு மணிக்கெல்லாம் கிளம்பி விடுவான். லோகா சின்னப் பிள்ளைதானே! அவன் சாயங்காலமானால், யாராவது சிநேகிதன் வீட்டுக்குப் போவான். அல்லது இங்கேதான் எங்காவது சுற்றிக் கொண்டு இருப்பான்!" என்றாள் புன்னகையோடு.

பதிலாக முறுவலித்துவிட்டு, "ஆனால் அத்தை, எதற்கும் ரொம்பச் சத்தம் வேண்டாம் என்று லோகேசனிடம் சொல்லி வையுங்கள். தொண்ணூறு டிசைபலுக்கு அதிகமான சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தால், காது சீக்கிரம் ரிப்பேராகி விடுமாம். கொஞ்ச நாட்களுக்கு முன்பாகப் பத்திரிகையில் படித்தேன். அப்புறம்..." என்று குறும்பாக நோக்கி, "உங்களுக்கு ஞாபக மறதி நிறைய உண்டு போல" என்றுரைத்து முடித்தாள்.

"இ... இல்லையே... ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று அன்னபூரணி கேட்க, உதயாவும் வினாவாக நோக்கினாள்.

"பின்னே என்ன அத்தை? இன்று காலையில் நான் சொன்னதை, அதற்குள் மறந்து விட்டீர்களே. காலையில் ஐந்தே முக்கால் மணி இருக்குமா, எதையும் என்னிடம் வெளிப் படையாகப் பேசுங்கள் என்று உங்களிடம் நான் சொன்ன போது? அதற்குள் இரண்டு தரம் மறைத்து, முழுங்குகிறீர்களே!" என்று முறுவலித்தாள்.

அன்னபூரணி அசடு வழியவும், அவள் கையைப் பிரியமாய்ப் பற்றி, "சும்மா சொல்லுங்கள், அத்தை. இப்போது உதயா என்றால் தயங்குவீர்களா? என்னையும் அப்படியே எண்ணிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கஷ்டம்தான். ஆனால், எனக்கு இந்தப் பக்கத்துப் பழக்க வழக்கங்கள் மட்டுமல்ல, அம்மா இல்லாததால் எந்தப் பக்கத்துப் பழக்க வழக்கங்களுமே தெரியாது. எல்லாமே நீங்கள் கற்றுக் கொடுத்தால்தான் உண்டு. நீங்களும் இப்படித் தயங்கினால் நான் என்ன செய்யட்டும், சொல்லுங்கள்!" என்றாள் இனிய குரலில்.

சிறு வருத்தமான முறுவலுடன் அவள் சொன்ன விதத்தில், அன்ன பூரணிக்கு அப்படியே உருகி விட்டது. தாயில்லாப் பெண் என்கிற கனிவு.

"என் கண்ணே..." என்று பற்றியிருந்த ரதியின் கையை முத்தமிட்டு, "உனக்கு நான் எல்லாம் கற்றுத் தருகிறேனடா செல்லம். அண்ணி இல்லாவிட்டால் என்ன? உதிக்குப் போல, உனக்கும் ஓர் அம்மாவாக இருந்து விடுகிறேன். அவ்வளவுதானே? உன் மாமாவும் இருந்திருந்தால், அப்பா அருகில் இல்லையே என்ற குறையும் உனக்கு இல்லாமல் போயிருக்கும். ஆனால்... சரி சரி. கடவுள் விதித்தது. சோகத்தைப் பற்றி அதிகம் பேசக்கூடாது. ஆனால், கண்ணு, அம்மா இல்லையே என்று நீ வருத்தமே படக் கூடாது. சரிதானா? இப்போது உனக்கு என்ன தெரிய வேண்டும்? சற்றுமுன் ஏன் தயங்கித் தடுமாறினேன் என்றுதானே! இதோ சொல்லுகிறேன்," என்று சொல்லத் தொடங்கினாள்.

"பாரம்மா, பரமும், லோகனும் உனக்குப் பெரியவர்கள், ஆண் பிள்ளைகள். 'அத்தான்' என்று முறை சொல்லி, மரியாதையாக அழைக்க வேண்டும். இப்போது உதியை 'வா, போ' என்பதுபோல, அவர்களைச் சொன்னால், அவ்வளவு நன்றாக இராது. அதிலும்... அதிலும், பரமேசனுக்கு விரைவிலேயே மணமாகப் போகிறது..." என்று அவள் கூறி முடிக்கும்போது குரல் சின்னதாகி இருந்தது.



ரதியின் அகன்ற விழிகள் அப்பாவியாய் அவளுடைய அத்தையை நோக்கின.

அந்தப் பிள்ளைப் பார்வைக்குப் பின் என்ன யோசனை ஓடியதோ, பேச்சு மட்டும் பெரியவளின் வார்த்தைகளுக்குத் தொடர்ச்சியாக வந்தது.

"ம்ம்ம்... அதெப்படி, அத்தை? ஆண் பிள்ளை என்றால், கொம்பா முளைத்திருக்கிறது? சரி... பரமேசனுக்காவது வயசு கூடுதல். மரியாதைப் பன்மையில் விளிக்கலாம். லோகனைப் பார்த்தால் என் செட் மாதிரியே இருக்கிறதே. அவனைப் போய், எப்படி 'வாங்கள் போங்கள்' என்பது? அதிலும், பழைய காலத்து சினிமா மாதிரி, 'அத்தான்' என்றால்... எப்படியோ இருக்கிறதே, அத்தை? ஏன் உதி, நீ லோகேசனோடு எப்படிப் பேசுவாய்?" என்று உதயாவிடம் திரும்பிக் கேட்டாள்.

தாயைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "சண்டை வந்தால் வாடா, போடாதான். சாதாரணமாய் வா, போ. அம்மாதான் மரியாதையாகப் பேச வேண்டும் என்பார்கள். அம்மா இல்லாத இடத்தில் அவனே வேண்டாம் என்பான்!" என்றாள் உதயா.

"ஆமாம், வந்தவளையும் கெடுத்து விடுங்கள்!" என்று வாய் சொன்னபோதும், அன்ன பூரணியின் முகத்திலும் சிரிப்புதான் விகசித்தது. "நீயும் பையன்களிடம் கேட்டுக் கொண்டு, அதன்படி பேசிக் கொள்ளேன், ரதிம்மா." என்று இலகுவாக அவள் விட்டுக் கொடுத்ததும், ரதிக்கு மகிழ்ச்சி அளித்தது.

அத்தை ஒன்றும் கண்டிப்பானவள் அல்ல.

அத்தைக்கும், அத்தை மக்களுக்குமாக வாங்கி வந்தவற்றை ரதி எடுத்து வந்து கொடுத்தாள். வீட்டிலிருந்த மூவருக்கும் எல்லாமே பிடித்துப் போகவும் அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மூவருமாகச் சற்று நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில், லோகேசனும் வந்து, அதில் கலந்து கொண்டான்.

ரதியின் தமிழ் பற்றிப் பேச்சு வந்தது.

''அதில் மட்டும் அப்பா ரொம்பவும் கண்டிப்பு. வீட்டில் தமிழ்தான் பேசியாக வேண்டும். அத்தோடு, வீட்டை ஒட்டி மூன்று தமிழ்க் குடும்பங்களையும் குடி வைத்திருந்தார். இதெல்லாம் போகத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்குத் தனியாக ஆசிரியர் வேறு.. தாய்மொழிப் பற்று அப்பாவுக்கு நிறைய உண்டு.''

''நாங்கள் எல்லோரும் அஸ்ஸாம் என்றாலே, ஒரே 'டமால், டுமீல்' என்று எண்ணிக் கொண்டிருந்தோம். ஒவ்வொரு வினாடியும், உயிருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன். நீயானால், டியூஷன், அது இது என்று ரொம்ப சாதாரணமாகப் பேசுகிறாயே!'' என்று லோகேசன் ஆச்சரியப்பட்டான்.

''எல்லா இடத்திலும் அப்படியில்லை, லோகன். பாக்கெட், பாக்கெட்டாகச் சில இடங்களில் மட்டும்தான். ஆனால், இப்போது தீவிரவாதிகள் ரொம்பவே வன்முறையாளர்கள்



ஆகிவிட்டனர். கொலை ரொம்ப சாதாரணம் ஆகிவிட்டது. ஆனால், அதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், அது மிகவும் அழகான மாநிலம். தூரத்து மலைகளை உதய நேரத்தில் பார்க்க வேண்டும்...! ஆரஞ்சிலிருந்து, மஞ்சள் தங்கமாகிப் பிறகு வெள்ளியாக மாறுவதை எத்தனை தடவை பார்த்தாலும், பிரமிப்புதான். புண்ணியம் என்றுகூடச் சொல்லுவார்கள்!'' என்றாள், ரதி.

''எனக்கும் அதெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆ...'' என்று தொடங்கிய உதயா, தமையனின் ''உஷ்''ஷில், கப்பென்று வாயை மூடிக் கொண்டாள்.

சத்தமின்றி, ஜன்னல் அருகே சென்று, வாயில் புறம் நோக்கிய லோகேசன் வேகமாகத் திரும்பி வந்தான். ''அம்மா! நான் வீட்டில் இல்லை. பத்து மணிக்கே வெளியே போய்விட்டேன். இப்படியே பின்புறம் சென்று நைசாக வெளியேறி விடுகிறேன்!'' என்றவாறு ஓசையின்றி விரைந்தான்.

## 5

ஏன் இப்படி உளறுகிறான்?!

ரதி திகைத்து நோக்குகையில், ''அம்மா, நான் குளிக்கப் போகிறேன்!'' என்று, உதயாவும் அவளது அறையை நாடி, மாடிக்கு விரைந்தாள்.

அன்னபூரணியின் முகமும் சோர்ந்து விட்டிருந்தது.

எல்லோரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, பின்புறமாகப் பதுங்கிச் சென்ற லோகேசனைப் பிடித்து நிறுத்தி, ''என்ன

உளறல் இது, லோகன்? எதற்காக இப்படி ஓட வேண்டும்?'' என்று வேகமாகக் கேட்டாள்.

''கூட வா, சொல்லுகிறேன்!'' என்று அடிக் குரலில் கூறியபடியே, அவன் மேலே நடந்தான். ''ஆட்டோவில் வருவது, சவிதா. அண்ணனுக்கு வருங்கால யம... இல்லை, மனைவி. அவளுக்குப் பயந்துதான் இந்த ஓட்டம்.''

''அவளைப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. எதற்குப் பயந்து ஓட வேண்டும்? என்னோடு பேசிக் கொண்டு இங்கேயே உட்கார்ந்திருப்பதுதானே?'' என்று கூடவே நடந்தபடி கேட்டாள் ரதி.

''உட்காருவதா? உனக்கு அவளைத் தெரியாது. முதலில் அவள் வரும் ஆட்டோவுக்குப் பணம் கொடுக்கச் சொல்லுவாள். கொடுத்தால் திரும்பி வராது.''

''கொடுக்க மாட்டேன் என்று திடமாகச் சொல்லு.''

''அவ்வளவுதான். தொலைந்தேன். ஊதாரி. மாத நடுவில், ஓர் ஆட்டோவுக்குக் கொடுப்பதற்கு, அவனிடம் பணம் இல்லை. பாக்கெட் மணி முழுவதையும் அதற்குள் ஊதி விட்டேன். அது இதென்று, அண்ணனிடம் வத்தி வைத்து விடுவாள். ஐயோ, என்னை விடேன். அவள் கேட்டில் ஆட்டோவில் இருந்து இறங்கி, இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்களில் வீட்டுக்கு வந்து விடுவாள். அதற்குள், நான் பின்புறம் போய் ஒளிந்து தப்பியாக வேண்டும்!'' என்று, லோகேசன் பதறவும், ரதி அவன் கையை விட்டு விட்டாள்.

அவள் மெள்ளத் திரும்பி ஹாலுக்குச் சென்றபோது, அழைப்பு மணி அடித்தது.



அதற்குள் அன்னபூரணியும் காணாமல் போயிருக்க, உள்ளிருந்து வந்த வேலைக்காரன், ''கதவைத் திறக்கவாம்மா?'' என்று ரதியிடம் கேட்டான்.

வாயிற் கதவைத் திறப்பதில் அன்னபூரணியின் பயத்தை அதற்குள் அறிந்து விட்டிருந்த ரதி, தானே பார்த்துக் கொள்வதாக வேலையாளை அனுப்பிவிட்டுப் போய்க் கதவைத் திறந்தாள்.

இரு பெண்களும், சில வினாடி, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

வந்திருந்த புதியவளுக்குத் தன் தோற்றம் ஓர் அதிர்ச்சியே என்று ரதியால் உணர முடிந்தது. அதுவும் பிடிக்காத அதிர்ச்சி. தன்னைப் போல ஒருத்தியை, வந்தவள் எதிர்பார்க்கவில்லை என்று நன்றாகவே தெரிந்தது.

அந்தப் பெண்ணைப் பார்க்கையில், ரதிக்கும் ஏமாற்றம் தான்.

அவள் பார்த்த அளவில், அவளுக்குப் பரமேசனிடம் சற்று மதிப்பு உண்டாகி இருந்தது. அவனது தோற்றத்தில் இயல்பான கம்பீரம் இருந்தது. கூடவே அடுத்தவர் கருத்தை உறுத்தாத அளவில், தோற்றத்தில் கவனம் எடுத்திருப்பதும் தெரிந்தது. கூடவே, மற்றவர்களிடம் அலட்டல் இல்லாத அக்கறை காட்டுவதும் புரிந்தது.

அவளைச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கச் சொன்னதே அதற்குச் சான்றுதானே.

தன் வருங்கால மனைவியாக அவன் தேர்ந்தெடுத்திருந்த பெண்ணிடமும், இந்தத் தன்மைகளை ரதி உள்ளூர எதிர்

பார்த்திருந்தாள் போலும். ஆனால் அவற்றில் எதையும் காணாதது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

ஓர் ஆணால் இதைப் புரிந்து கொள்ள முடியுமோ, என்னவோ! தன் தோற்றத்தில், சவிதா அதிகப்படி அக்கறை காட்டியிருந்தது, ரதிக்குத் தெளிவாகத் தெரிந்தது.

முக அலங்காரம், இன்றைக்கு எல்லோரும் செய்வதுதான். ஆனால், தன்னை மிகவும் வெள்ளையாகக் காட்டிக்கொள்ள, அவள் மிகவும் முயன்றிருந்தாள். குறைந்தபட்சமாய், அந்த முயற்சியைக் கழுத்து, கைகளுக்கும் செய்திருக்கலாம். சிக்கனம் பார்த்து, அதைச் செய்யாமல் விட்டதால், யாருடைய முகத்தையோ, அவளது கழுத்தில் ஒட்ட வைத்தது போன்று, விசித்திரமாகத் தோன்றினாள்.

கமீசின் கழுத்துப் பூவேலையைத் துப்பட்டாவை அடக்கம் காட்டிப் போர்த்தியிருந்த விதம், ஒழுங்கற்று மறைத்துக் கெடுத்தது. அதற்கு மேல் முக்காடு வேறு.

வட இந்தியாவில், எல்லாப் பெண்களும்... அதாவது எல்லாக் குடும்பப் பெண்களும் முக்காடு போடுவார்கள் என்று நினைத்தாள் போலும்.

இது தனக்காகப் போடப்பட்ட முக்காடு என்று புரியவும், சிரிப்பை அடக்க ரதி சிரமப்பட வேண்டியிருந்தது.

சுரிதார் செட்டில் இருந்த வண்ணம் என்று, அவளுக்குக் கொஞ்சமும் பொருந்தாத நிறத்தில் உதட்டு, நகச்சாயம் வேறு.

இப்படி ஒருத்தியை இந்தப் பரமேசன் எங்கிருந்து பிடித்தான்?

தன்னுடைய ஜீன்சையும், டெனிம் டாப்ஸையும் பார்த்து, இவள் என்ன எண்ணுவாள்?



ரதி யோசிக்கையில் வெளியே இருந்து ஆட்டோ ஒலி யெழுப்பியது.

சவிதாவும் திகைப்பிலிருந்து மீண்டு, "நீ... நீங்கள்... வந்து, ரதிதானே?" என்று வினவினாள்.

ரதி என்ற தன் பெயரே இவளுக்குப் பிடிக்கவில்லை என்று ரதி உணர்ந்தாள். லோகேசனும், உதயாவும் ஓடியது நினைவு வர, "ரதியேதான்!" என்றாள் அழுத்தம் திருத்தமாக. "உங்கள் பெயர் சவிதா என்று நினைக்கிறேன். பெயருக்குப் பொருத்தமாக, உங்கள் முகம் வெளேரென்று, வெள்ளையடித்த மாதிரி இருக்கிறது!" என்று முறுவலித்தாள்.

ரதியின் கிண்டலைப் புரிந்து கொள்ளாமல், பெருமைப் புன்னகை புரிந்தாள் மற்றவள்.

ஆட்டோ திரும்பவும் சத்தம் கொடுக்கவும், உள்ளே எட்டிப் பார்த்தாள் சவிதா. "வேறு யாரும் இல்லையா? லோகேசன் எங்கே போனான்?" என்று விசாரித்தாள்.

ஹாலை ஒரு தரம் பார்த்துத் தோளைக் குலுக்கினாள் மற்றவள்.

"யாரும் இல்லையா? அடடா! இப்போது ஆட்டோவுக்குப் பணம் கொடுக்க வேண்டுமே!" என்று கவலை காட்டினாள் சவிதா.

"கொடுங்களேன்!" என்றாள் ரதி சாதாரணமாக. "கொடுத்து விட்டு வாருங்கள்!" என்று சோஃபாவை நோக்கி நடந்தாள்.

"எப்படிக் கொடுப்பது?" என்றாள் மற்றவள் பதிலுக்கு.

"புரியவில்லையே!" என்று ரதி திரும்பி வியந்து நோக்கவும், சவிதாவின் முகம், அந்த ஒப்பனைக்கும் மீறி, லேசாகச் சிவந்தது.

ரதியின் வளைவான புருவங்கள் உயரவும், சமாளித்துக் கொண்டு, ''அ... அதில்லை, ரதி. என்னிடம் ஐந்நூறு ரூபாய் நோட்டாக இருக்கிறது. அ... அதனால்தான்...'' என்று ரதியையே பார்த்தாள்.

குறிப்பறிந்து, ரதி பணம் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாள் போலும்.

என்ன நம்பித்தனம். இவளுக்காக, நான் பணம் தர வேண்டும் என்று இவள் எப்படி எதிர்பார்க்கிறாள் என்று, ரதிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

தன் வியப்பை வெளிக் காட்டாமல், ''நோட்டைக் கொடுங்கள். என்னிடம் சில்லறை இருக்கிறதா என்று பார்க்கிறேன்!'' என்றாள் இயல்பான குரலில்.

ரதியிடம் இருந்து பணம் பெயராது என்று புரியவும், ''இல்லை... ஆட்டோக்காரன் இப்படி ஹார்ன் அடிக்கிறானே, அவனிடமே சில்லறை கேட்டுக் கொடுத்துவிட்டு வருகிறேன்!'' என்று வேகமாக வெளியே போனாள் சவிதா.

இப்படியொரு பெண்ணா என்று ரதிக்கு அதிசயமாக இருந்தது.

கவலையாகவும்.

இவள் மருமகளாகி வீட்டுக்குள் வந்தால், அத்தை, லோகன், உதி இவர்கள் கதி எல்லாம் என்ன ஆகும்?

பரமேசன்... அவனுக்கு இதுவா பிடித்திருக்கிறது? ஆச்சரியம்தான்!

வீட்டு மனிதர்கள் எவ்வளவு நேரம் ஒளிந்து கொள்ள முடியும்?



கூடவே, ரதி என்ன எண்ணுவாள்... என்ன பண்ணுவாள் என்றும் தோன்ற, அன்ன பூரணி முதலில் வந்து சேர்ந்தாள்.

அப்போதுதான் சவிதாவைப் பார்ப்பது போல நடித்து, ''அடடே, சவிதாவா? நீ எப்போதம்மா வந்தாய்? இவ்வளவு சீக்கிரம்.. வந்து... இந்த நேரத்தில் நீ வருவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்று தட்டுத் தடுமாறி, ஒருவாறு அவளை வரவேற்றாள்.

''இந்த மாதிரி இக்கட்டான நேரத்தில், நீங்கள் தனியே கஷ்டப்படும்படி நான் விட்டு விடுவேனா, அத்தை? அதனால்தான், அப்பா வேலைக்குச் சென்றதுமே, நானும் கிளம்பி ஓடி வந்தேன்!'' என்றாள் சவிதா, பெரும் சுமை தூக்குகிற பாவனையில்.

நன்றி தெரிவிக்காமல், ''என்ன இக்கட்டான நேரம்?'' என்று, அன்னபூரணி திகைத்த போதும், கோபப்படாமல் விளக்கினாள், ''பின்னே என்ன அத்தை? ஆண்டுக்கணக்கில் பாராமல் இருந்த தூரத்து உறவினரை, அதுவும் ஒரு வயதுப் பெண்ணை, வீட்டில் வைத்துப் பராமரிப்பது என்றால் சும்மாவா? எவ்வளவு சிரமம்! இங்கேயே இருந்து, உதவியிருக்க வேண்டியது. துரதிர்ஷ்ட வசமாக இடையில் மாமா இறந்ததால், அதற்கு வழியில்லாமல் போயிற்று. வந்தாவது, உதவி புரிவது என் கடமை அல்லவா?''

ரதியின் கண்களில் குறும்பு பளிச்சிட்டது. ''நீங்கள் சொல்வது, ரொம்ப சரி, சவிதா. ஒரு வயதுப் பெண்ணைக் கவனிப்பது என்றால், ரொம்பவே சிரமம்தான். அதில் அத்தைக்கு உதவியும் அவசியமே!'' என்று சிரியாமல் கேட்டாள்.

தன்னை மீறி நகைத்துவிட்டு, உதயா கைகளால் வாயை மூடிக் கொண்டாள்.

''உங்... உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையே என்று, உதயா சிரிக்கிறாள். ஒருவருக்கு ஒன்று தெரியவில்லை என்றால், என்னவென்று சொல்லிக் கொடுக்க வேண்டுமே தவிர, இப்படிச் சிரிக்கக் கூடாது. உதயா, இப்படி நீ சிரிப்பது உன் அண்ணனுக்குத் தெரிந்தால், உனக்குப் பண்பில்லை என்று திட்டிவிட மாட்டாரா?'' என்றாள் சவிதா.

உதயாவின் கண்களில் தோன்றிய அச்சம், சவிதாவின் மறைமுக மிரட்டலைப் புரிய வைக்க, ''ஆனால் எனக்கு 'ஒன்றும்' தெரியவில்லை என்று நீங்கள் சொல்ல முடியாதே!'' என்றாள் ரதி புன்னகையோடு. தொடர்ந்து, ''ஒன்று மட்டுமல்ல, இரண்டு, மூன்று... எல்லாமே தெரியும். மில்லியன், டிரில்லியன் கூடக் கணக்கிட்டிருக்கிறேனே!'' என்று சிறுபிள்ளை போலப் பெருமையடித்தாள்.

மீண்டும் முகத்தில் சிரிப்பு படர, வாயைப் பொத்திக் கொண்டு எழுந்து ஓடிவிட்டாள் உதயா.

என்னதான் உதயாவை மிரட்டுகிறாளே என்று, சவிதாவுக்கு அசடு வழிய வைத்த போதும், அவள் இந்த வீட்டுக்கு வரப்போகும் மருமகள், விருந்தாடி வைத்திருக்கும் தன்னால், வீட்டுப் பெண்ணுக்கும், மருமகளுக்கும் இடையே உரசல் நேர்ந்து விடக் கூடாது என்று எண்ணிய ரதி உரக்க, ''உதி, சவிதாவுக்குப் பழச்சாறு கொண்டு வரத்தானே ஓடினாய்? அப்படியே, எனக்கும் எடுத்து வருகிறாயா? சென்னை வெய்யில், எனக்குத் தாகமாய் எடுக்கிறது!'' என்று கேட்டுக் கொண்டாள்.

அப்போதைக்குச் சமாதானம் அடைந்தபோதும், தன்னைப் பார்த்துச் சிரித்த உதயாவைத் தண்டிக்காமல் விடச் சவிதாவுக்கு



மனமில்லை. ஆனால், பழச்சாறை விடவும் பிடிக்காமல், சாதாரணமாகப் பேசலானாள். டீபாய் மேல், ரதி கொண்டு வந்திருந்த பொருட்கள் இருக்கவே, பேசப்படும் விஷயம் அதுவாயிற்று.

சணலைப் பிரித்தெடுத்து, மெல்லிய நூலாக்கி, அத்துடன் செயற்கை இழைகளைச் சேர்த்து நெய்யப்பட்டிருந்த துணிகளை, அங்கே எல்லோருக்குமே, ரதி வாங்கி வந்திருந்தாள். அன்னபூரணிக்குச் சால்வை, அவளுடைய மகன்களுக்கு டீ ஷர்ட்... உதயாவுக்குச் சுரிதார் செட்!

தனக்கு ஒன்றும் வாங்கி வரப்படவில்லை என்று அறிந்ததும், சவிதாவின் நெஞ்சு காந்தியது.

ரதி எதற்காக அவளுக்கு வாங்கி வர வேண்டும் என்று யோசிக்க, அவளுக்குத் தோன்றவில்லை. வாங்காமல் எப்படி வரலாம் என்றுதான் தோன்றியது. எப்படியும், பரமேசனுக்கு மணமாகப் போகிறது என்று, இவளுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்?

இந்த வீட்டுக்கே தலைவியாகப் போகிறாள். இருப்பதில் விலை உயர்ந்ததாய், அவளுக்கல்லவா பரிசளித்திருக்க வேண்டும்?

அதைச் செய்யாமல் விட்டதற்காக, முதலில் ரதியைக் குட்ட வேண்டும்.

''என்ன, அத்தையையும், அவர்களுடைய பிள்ளைகளையும் அரிசி பருப்பு என்று எண்ணினீர்களா? அவர்களை மூட்டை கட்ட, சணல் கொண்டு வந்திருக்கிறீர்களே!'' என்று கிண்டலடித்துவிட்டு, ''சணல் என்றால் விலையும் குறைவாக இருக்கும். அப்படித்தானே? எல்லாம் என்ன விலையிருக்கும்?'' என்றும் நாகரீகமற்று வினவினாள்.

அருவருப்பை மறைத்துக் கொண்டு, ''அந்தப் பக்கம் விளைவதாக இருக்க வேண்டும் என்று எண்ணினேன். பக்கத்தில் பெங்காலில் சணல் அதிகம் விளைவதாகப் படித்திருப்பீர்களே!'' என்றாள் ரதி அமைதியாக.

ரதி கொண்டு வந்திருந்தனவற்றுள், ஒரு செய் நீரூற்று இருந்தது. அழகான வடிவமைப்பு. சிறு மோட்டாருடன் கூடியது. ஊற்றாகப் பீறிடும் நீர், மூன்று வழிகளில் பிரிந்தோடி, கீழே சேரச் சேர, மீண்டும் ஊற்றாகப் பீறிட்டது.

''ஐயையோ! இதென்னது? வீட்டுக்குள் தண்ணீர் அடித்துக் கொண்டு? காற்றில் நீராவி அதிகமாகி, எல்லோருக்கும் சளி பிடித்துவிடாதா? அதிலும், அத்தை மாதிரி வயதானவர்களுக்கு இழுப்பே வந்துவிடும். அதுபற்றி யோசிக்கவே தோன்ற வில்லையா? ச்சு! முதலில், இதைத் தூக்கித் தூ... இதை உள்ளே எடுத்து வை, உதயா!'' என்று அறிவியல், ஆரோக்கியம் பற்றிய தன் அறிவுத் திறனையும், வருங்கால மாமியார் மீதுள்ள அக்கறையையும் சேர்த்துச் சவிதா வெளிப்படுத்தினாள்.

ஆனால், அதைப் பாராட்டத்தான் அங்கே யாரும் இல்லை.

''அம்மா ஒன்றும் 'வயதானவர்கள்' இல்லை!'' என்றாள் உதயா ஆத்திரத்தோடு.

''இந்த 'வயது' பற்றி, ரொம்பவும் குழம்புகிறீர்களே!'' என்றாள் ரதி கிண்டல் போல.

## 6

உதயா தன் பேச்சை மறுப்பது, சவிதாவுக்கு ஆத்திர மூட்டியது. அதுவும் புதிதாக வந்தவளோடு சேர்ந்துகொண்டு,



வருங்கால அண்ணியை எதிர்க்கிறாளே. அத்தோடு, இவளுடைய அம்மா என்ன குமரியா? வயதானவள் இல்லை யாமே! புருஷனோடு இந்தம்மாவும் போய்ச் சேர்ந்திருந்தால், எதற்கும், 'அம்மா, அம்மா!' என்று உருகுகிறானே... பரமேசன், அந்தத் தொல்லை அடியோடு இல்லாமல் போயிருக்கும்.

அதையெல்லாம் வெளிப்படையாகச் சொன்னால், ஏதோ ஒரு வகையில் பரமேசனிடம் போய்ச் சேர்ந்துவிட்டால் நன்றாயிராது என்கிற ஒரே காரணத்துக்காக, மனதை மறைத்துச் சவிதா புன்னகை செய்தாள். ''அத்தை மீது நமக்கு இருக்கும் அன்பினால், அத்தைக்கு வயதாகி விட்டதை, நம் மனம் ஒப்பாதுதான். ஆனால், ஒன்றை நீ யோசித்துப் பார்க்க வேண்டும், உதயா! நடக்க வேண்டியது ஒழுங்காக எல்லாம் நடந்திருந்தால், இப்போது உன் அம்மா என்ன ஆகியிருப் பார்கள், சொல்லு,'' என்று வெட்கப்படுவது போலத் தலையைச் சரித்து, ஓரக் கண்ணால் பார்த்தாள்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. எப்படியும், ஒழுங்காக எது நடந்திருந்தாலும், என் அம்மா இப்படியேதான் இருந்திருப்பார்கள்!'' என்றாள் உதயா எரிச்சலை மறையாமல்.

''அத்தோடு, நாற்பத்தேழு வயதில் யாரும் வயதானவர்கள் ஆகி விடுவதில்லை, சவிதா. இப்போது அறுபது வரையே, மத்திய வயதுதான். என் அப்பாவுக்கு ஐம்பத்து நாலு வயது. ஆனாலும், பெரியவரிடம் ஆசீர்வாதம் வாங்க வந்தேன் என்று யாராவது வந்தால், விரட்டியடித்து விடுவார்!'' என்று இலகுவாகப் பேசினாள் ரதி.

''உன் அப்பாவை நான் பார்த்தது இல்லை என்பதால், அவரைப் பற்றி நான் அபிப்பிராயம் சொல்வது சரியல்ல.

ஆனால், அறுபதை நெருங்கும் ஒருவர், ஆசி கொடுக்க மறுப்பது என்றால், விசித்திரமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் சொல்ல வந்ததே வேறு. வயது என்னவாக இருந்தாலும், பாட்டியாகிறபோது, அவர்களைச் சின்ன வயது என்று சொல்ல முடியாதுதானே?'' என்று, ஆணித்தரமாகக் கேட்டு முறுவலித்தாள் சவிதா.

''பாட்டியா?'' என்று, மற்ற மூவருமே அதிர்கையில், ''மாமா மட்டும் சாகாமல், நடக்க வேண்டியது ஒழுங்காக நடந்திருந்தால், அத்தை இப்போது அந்தப் பதவிக்குத் தயாராகிக் கொண்டுதானே இருந்திருப்பார்கள்!'' என்று கேட்டு, எல்லோரையுமே வாயடைத்துப் போக வைத்தாள் அவள்.

ஒரு வழியாக, இந்த மக்கு, மர மண்டைகளுக்கு, விஷயத்தைப் புரிய வைத்து விட்ட திருப்தியால் அவள் முறுவலிக்க, அவள் முகத்தில் ஓங்கி அறைந்து, அந்தச் சிரிப்பை மறைய வைக்க வேண்டும் போல இருந்தது என்று, தனிமையில் ரதியிடம் சொன்னாள் உதயா.

ரதிக்கும் அப்போது அப்படித்தான் இருந்தது.

அப்போது மட்டுமல்ல. சவிதாவோடு கழிந்த நேரத்தில், பலமுறை அவள் முகத்தில் ஓங்கி அறைய வேண்டும் என்று அவளுக்குத் தோன்றத்தான் செய்தது.

அதிலும், அந்த வீட்டிலேயே உட்கார்ந்து, அவள் கொண்டு வந்து கொடுத்த பழச்சாறையே குடித்துக் கொண்டு, அநாகரீகமாக எப்படிப் பேசினாள்!

தனக்கும், அந்த வீட்டுத் தலைமகனுக்கும் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது என்கிற விஷயத்தை, யாரும் ஒரு கணம் கூட மறந்துவிடக் கூடாது என்பதில், சவிதா எப்போதும்



குறியாக இருந்தாள். பரமேசனும் தானும், மனதால் ஒன்று என்பதைத் தெள்ளத் தெளிவாக எல்லோருக்கும் தெரிய வைப்பதிலும் அப்படித்தான்.

இருக்கட்டும். தாராளமாக இருக்கட்டும் என்பதுதான் ரதிக்கும்.

ஆனால், அதை அவள் தெரிய வைத்த விதம்... அதுதான் ரதிக்கு ஆத்திரமூட்டியது.

பொதுவாகப் பேசத்தான் ரதி முயன்றாள்.

குடித்துக் கொண்டிருந்த பழச்சாறைப் பற்றி, ''நன்றாக இருக்கிறது. முன்பே தயாரித்தது போல அல்லாமல், புதிதாகச் செய்த மாதிரி சுவையாக இருக்கிறது!'' என்றாள்.

ஒரு வீட்டுக்குச் செல்லும்போது, வீட்டார் மனதுக்கு இதமாக நடக்கும் கடமை, விருந்தாளிக்கும் உண்டல்லவா? அத்தோடு, பழச்சாறும் மெய்யாகவே நன்றாகத்தான் இருந்தது. அதை அவள் வாய் விட்டுச் சொன்னதும், தாயார், மகள் இருவர் முகங்களும் மலர்ந்தன.

''கல்ச்சுர'லில் கற்றுக் கொண்டு வந்து, உதயாவே தயாரித்தது, ரதிம்மா!'' என்று பெருமையுடன் அன்னபூரணி அறிவிக்க, ''அப்படியா? பாராட்டுகள் உதி. வேறு என்னென்ன கற்றுக் கொடுக்கிறார்கள்?'' என்று ரதி ஆவலுடன் கேட்க, அது பற்றிக் கலகலப்பாக உரையாடல் நடந்தது.

இன்னொரு பெண்ணைப் பாராட்டுவது, சவிதாவுக்கு எப்படிப் பிடிக்கும்?

அதுவும், தண்டிக்கப்பட வேண்டியவள் என்று அவள் எண்ணிய உதயாவை!

எனவே, "இவளைப் பற்றித்தான் எங்கள் இருவருக்கும் ஒரே கவலை!" என்றாள் உரக்க. "இவள் அண்ணனுக்கும் எனக்கும்!"

"என்ன கவலை?"

ரதி புரியாமல் புருவம் சுருக்கவும், "கல்லூரிப் படிப்பு முடிந்து, இந்த மாதிரி வீட்டுக் கலைகள் படிக்கத் தொடங்கி, நாலைந்து மாதங்கள் ஆகிவிட்டன. இன்னமும், ஒரு மாப்பிள்ளை வீட்டிலிருந்தும், இவளைப் பெண் கேட்டு வரவே இல்லை. அதுதான் எங்களுக்குக் கவலை!" என்று, உதயா அங்கே இல்லாதது போல, அவளைப் பற்றிப் பேசினாள்.

அம்மா, மகள் இருவர் முகங்களும் கண்டிப் போவதைப் பார்த்த ரதிக்கு நெஞ்சு கொதித்தது.

சவிதா சொல்வது மெய்யோ, பொய்யோ? ஆனால், அவள் இப்படிப் பேசியது அநாகரீகம் என்றால், அதை மறுத்துப் பேசுவது, இன்னமும் அசிங்கமாகத் தோன்றும்.

மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள் என்றால், பொய்ப் பெருமை பேசுவது போல இருக்கும். அத்தோடு, என்னவோ, அதை ஒரு பெரிய விஷயமாக எண்ணுவது போலவும் தோன்றும். அப்படி வரவில்லைதான் என்றாலோ, என்னவோ திருமணத்துக்கே லாயக்கில்லாமல், உதயா ஒதுக்கப்பட்டி ருக்கிறாள் என்று ஒப்புவது போல ஆகும்.

ஒரு சின்னப் பெண்ணை என்ன மாதிரி நிலையில் நிறுத்துகிறாள்!

பார்த்ததுமே மனம் பிடித்துப் போன உறவுகள். அவர்களும் ஒதுங்காமல் பிரியமாகப் பழகவே, ரதிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. புது இடம் என்கிற நினைவே வரவில்லை.



இந்த சவிதா வந்து, மூக்கை நீட்டும்வரை.

எதைச் சொல்லவும் முடியாமல், இருவரும் தவிப்பதையும், அதைச் சவிதா ரசிப்பதையும் கண்ட ரதியால் அதற்கு மேல், பொறுக்க முடியாமல் தலையிட்டாள்.

"என்னது? பெண் கேட்டு வருவதா? வீட்டில் ஒரு பெரிய துக்கம் நேர்ந்து, இவ்வளவு சீக்கிரமாகவா? சேச்சே! அசுசியாக இல்லை? அப்படி யாராவது வந்து கேட்டால், பண்பே இல்லாதவர்கள் என்று விரட்டி விடுங்கள், அத்தை!" என்றாள் அன்ன பூரணியிடம்.

வியப்பும் நிம்மதியுமாகப் பெரியவள் பார்க்கும்போதே, ரதி, சவிதாவிடம் திரும்பினாள். "ஆனால், நம் நாட்டில், அந்த அளவுக்கு அநாகரீகம் பிடித்தவர்கள் இருக்க மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். உங்களுக்கு என்ன தோன்றுகிறது, சவிதா?" என்று அவளிடம் நேரடியாகக் கேட்டாள்.

இந்த நேரடிக் கேள்வியில், சவிதா சற்றுத் தடுமாறிப் போனாள்.

ஆம், இல்லை என்று எதுவும் சொல்ல முடியாத நிலை.

ஆமாம் என்றால், தன்னைத் தானே மறுத்துப் பேசுவது போல ஆகும். இல்லை என்றாலோ, முதலில் அவள் பேசியதே அநாகரீகம் என்று ஆகும்.

அவள் பேசியதுஅநாகரீகமாகவே இருக்கலாம். ஆனால், அதை இவள் எப்படி எடுத்துக் காட்டலாம்.

இந்த வீட்டுத் தலைவனை மணக்கப் போகிறவள் என்கிற மரியாதையே இல்லாமல் சிறுமைப்படுத்துவதா?

இந்த ரதி வேண்டும் என்றே அவளைத் தாக்கியிருக்கிறாள்.

அதாவது விரோதி.

சவிதாவுக்கு உலகில் உள்ள அத்தனை பேருமே விரோதிகள்தான். எல்லோருமே, ஏதோ ஒரு விதத்தில், அவளுக்குக் கெடுதல் பண்ணியவர்கள்தான். அதிலும் இந்த வீட்டில் உள்ளவர்கள், புதிதாக வந்திருக்கும் இவள் உட்பட, அத்தனை பேருமே விரோதிகள்தான்.

பரமேசன் தவிர. அவனும் சும்மா தலையாட்டிக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, கேள்வி கேட்கவே கூடாது.

''என்ன, பதிலையே காணோம்?'' என்று மறுபடியும் சவிதாவைக் கேட்டாள் ரதி. ரதி வேண்டும் என்றே விடாமல் தன்னை வம்புக்கிழுப்பதாகச் சவிதா நினைத்தாள். பதில் சொல்லச் சங்கடப்பட்டுக் கொண்டுதானே, சும்மா இருக்கிறாள். சரி என்று பேசாமல் விட்டுவிட வேண்டியதுதானே? அதை விட்டுத் திரும்பத் திரும்பக் கேட்பதா? இருக்கட்டும். உனக்கும் வைக்கிறேன், ஆப்பு.

கண்களில் ஒரு பளபளப்புடன் ரதி அவளையே பார்க்கவும், ''அது... அது... வந்து, பரமைக் கேட்டுத்தான் அபிப்பிராயம் சொல்ல முடியும்!'' என்றாள் சவிதா, குரலில் ஓர் அழுத்தத்துடன்.

பொதுவாகப் பரமேசனின் பெயரைச் சொன்னால், அந்த வீட்டில் உள்ளவர்கள் அமைதியாகி விடுவது வழக்கம். அதற்காகத்தான், அவன் பெயரை, அதுவும் உரிமைப் பாணியில் சவிதா பயன்படுத்தியது.

ஆனால், விருந்தாடி வந்தவள் வேறு மாதிரி ஆளாக இருந்தாள்.



''ஏன்? உங்கள் அபிப்பிராயத்தைத்தானே நான் கேட்டேன்?'' என்று மீண்டும் அதே கேள்வியிலேயே நின்றாள்.

''நான் எப்போதும் அவர் விருப்பம் போலத்தான் நடப்பது.''

ஆனால், ரதி அவளை விடுவதாக இல்லை. குறைந்த பட்சமாய், அவள் இருக்கும்போதாவது, சவிதா திமிராகப் பேசக் கூடாது. அன்ன பூரணியையோ, உதயாவையோ வருத்தக் கூடாது.

அதே குறிக்கோளுடன், சவிதாவைத் துளைத்தெடுத்தாள். ''ஆனால் உங்களுக்கும் சுய மூளை உண்டுதானே? உங்களுக்கு என்ன தோன்று...''

குறுக்கிட்டு, ''எனக்கு ஒன்றும் தோன்றாது!'' என்றாள் சவிதாவும் பதிலுக்கு. ''என் பரமேசனின் விருப்பம்தான் என் விருப்பமும். அவர் சொன்னதை ஏற்க, என் மனதைத் தயாராக வைத்திருக்கிறேன். ஏன் அத்தை, கல்யாணம் நிச்சயமான பெண்களின் கடமை அதுதானே?'' என்று அன்னபூரணியைத் தனக்குத் துணைக்கழைத்தாள். பிறகு, ''எனக்கு அம்மா இருப்பதால் இந்த நல்ல நெறிமுறைகளை எல்லாம் எனக்கு நன்றாகக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நீ பாவம்! உனக்கு இதெல்லாம் என்னவென்றே தெரியாது!'' என்றுரைத்து, ரதியின் தாயில்லாக் குறையைச் சுட்டிக்காட்டி, அவளை வருத்தப்பட வைக்க முயன்றாள்.

ஆனால், சிறு வயதில் இருந்தே தாயில்லாமல் வளர்ந்திருந்த ரதியைக் காயப்படுத்தும் வலிமை, அவளது அம்புக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை.

அத்துடன், சவிதாவின் நோக்கம் புரிந்ததால், திருப்பிக் கொடுப்பதை மட்டும்தான் ரதி நினைத்தாள். கொடுக்கவும் செய்தாள்.

''நல்ல வேளையாக எனக்கு ஓர் அம்மா இருந்து, இந்த மாதிரிக் கண்றாவிகளைக் கற்றுத் தரவில்லை. அங்கே சிடியில், 'மை டியர் மார்த்தாண்டன்' என்று ஒரு திரைப்படம் பார்த்தேன். அந்த மாதிரி அல்லவா இருக்கிறது. அத்தானுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்! பத்தே நாட்களில் வாழ்க்கை போரடித்துவிடும்.''

''பின்னே, வெட்டு, குத்து என்று புருஷனோடு சண்டை போட்டுக் கொண்டா இருப்பார்கள்? அதுவா மேல் என்று சொல்கிறாய்?'' என்று, ஏக வசனத்தில் திருப்பிக் கேட்டாள் சவிதா. முதலில் பயன்படுத்திய மரியாதைப் பன்மை, நினைவுகூட வரவில்லை.

''ஆனால், அதுகூட போரடிப்புக்கு எவ்வளவோ மேல்!'' என்றாள் ரதியும் விடாமல்.

இந்த வார்த்தைகளை முழுவதுமாக, அப்படியே கொண்டு போய்ப் பரமேசனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று சவிதாவின் மனம் பரபரத்தது. ஆனால் இந்த நேரத்தில் அவனைச் சந்திப்பது கடினம். சந்தித்தாலும், அவன் நின்று பேச மாட்டான். இதுவோ, மனதில் ஆழப்பதிய வைக்க வேண்டிய ஒன்று.

எனவே, சரியான தருணத்துக்காக, ரதியின் வார்த்தைகளைப் பத்திரப்படுத்தி வைத்தாள் அவள்.

## 7

அப்போதைக்கு ரதியின் கை மேலோங்கி இருப்பதை உணர்ந்து, அத்தோடு வீட்டினரும் அவள் பக்கமாக இருப்பது புரியவும், சவிதா பின் வாங்க முடிவு செய்தாள்.



அதற்காகத் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள் என்பதாக அல்ல. புலி பதுங்குவது பாய்வதற்காக என்கிற தத்துவம். பாய்ந்து, முழுப் பலத்துடன் அடிப்பது எப்படி என்று திட்டமிட எடுத்துக் கொண்ட அவகாசம்.

ஏனெனில், சாதுக்களாக, கொடுக்கிற குட்டுகளை வாய் பேசாது வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்குப் பக்கபலம் ஒன்று வந்திருக்கிறதே.

நாலு நாள் இருந்துவிட்டு ஓடப் போகிறவள் அவள் என்பதை மறந்து, சின்னது வேறு துள்ளிக் குதிக்கிறது. அதட்டி அடக்காமல், பெரியதும் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

எல்லோருக்கும் சேர்த்தல்லவா கொடுக்க வேண்டியிருக்கிறது.

இப்போது எப்படிக் கௌரவமாகப் பின் வாங்குவது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோது, ரதி அதற்கு வழி வகுத்துக் கொடுத்தாள்.

''அத்தை, எனக்குக் கொஞ்சம் சில்லறைச் சாமான்கள் வாங்க வேண்டும். ஷாம்பூ, சோப்பு... இந்த மாதிரி. பக்கத்தில் நல்ல கடை ஏதாவது இருந்தால், என்னைக் கூட்டிப் போகிறீர்களா?'' என்று அன்னபூரணியிடம் கேட்டவள், சவிதாவிடம் திரும்பி, ''சாரி, சவிதா! இதெல்லாம் எனக்கு அவசரமாக வேண்டியவை. எனவே வாங்குவதற்காக நாங்கள் வெளியே போக வேண்டியிருக்கிறது!'' என்றாள்.

'கிளம்பு' என்று சொல்லாமல் சொல்லுகிறாள்.

ஆத்திரம் வந்தபோதும், தோற்றோடுவது போலத் தோன்றாமல், எப்படிக் கிளம்புவது என்றுதானே, சவிதாவும்

யோசித்துக் கொண்டிருந்தாள். எனவே, "எனக்குமே வீட்டில் கொஞ்சம் வேலை இருக்கிறது. எப்படிக் கிளம்புவது என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன்," என்று எழுந்தாள்.

இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது என்று ரதி பார்க்கும்போதே, அன்னபூரணி எழுந்து சென்று, ஒரு பையில் கொஞ்சம் பழங்கள் எடுத்து வந்து கொடுத்தாள்.

பையை வாங்கிக் கொண்டு, ஒரு கணம் தயங்கிவிட்டுச் சவிதா கிளம்பினாள்.

அவள் அந்தப் பக்கம் போனதும், உதயா தலைவலித் தைலத்தை எடுத்து வந்து கொடுக்க, நெற்றிப் பொட்டுகளில் அதைப் பூசியவாறே, அன்னபூரணி படுக்கச் சென்றாள்.

தனிமை கிடைத்ததுமே, உதயா குமுறத் தொடங்கி விட்டாள்.

"இவள் வந்தாலே இப்படித்தான். என்னவாவது சொல்லி, அம்மாவுக்குத் தலைவலி வரவழைக்காமல் போவதே இல்லை. எத்...தனை முறை நாக் கூசாமல், 'மாமா சாகாமல் இருந்திருந்தால்...' என்று குறிப்பிட்டாள், பார்த்தாயா, ரதி? அப்பா இல்லாததை ஏற்க முடியாமல் இன்னமும் நானே திணறுகிறேன். அம்மாவுக்கு எப்படி இருக்கும்! பல்லைக் கடித்து வேதனையைச் சகித்துக் கொண்டு, சும்மா இருக்க வேண்டியதாகி விட்டதே. பாவி! பாதகி! இவள் அண்ணியாக வந்தால் இந்தப் பேச்சாலேயே எங்கள் எல்லோரையுமே கொன்று விடுவாள். அதிலும், அம்மா நிச்சயமாகத் தாங்கவே மாட்டார்கள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை, ரதி!" என்று உதயா அழுதாள்.

"நல்ல வேளையாக வெளியே போக வேண்டும் என்பது உனக்கு நினைவு வந்தது. அதைச் சொல்லி, அம்மாவும் துணைக்கு வர வேண்டும் என்று நீ சொல்லியிராவிட்டால், அவள் கிளம்பியிருக்கவே மாட்டாள். அவள் ஒரு மணி நேரம் இருப்பதையே தாங்க முடியாதபோது, நாள் முழுவதும் அவள் இங்கேயே வசிப்பதை எண்ணிப் பார்க்கவே பயமாக இருக்கிறதே!" என்று கலங்கினாள்.



ரதிக்கும், அப்படி ஒரு நிலையை எண்ணிப் பார்க்க முடியவில்லைதான்.

திடுமென நினைவு வர, "அம்மாவுக்குத் தலைவலி வந்து விட்டதே, ரதி. எப்படி வெளியே போவது? உனக்கு என்ன வேண்டும், சொல்லு. யாராவது ஆளை விட்டு வாங்கி வரச் சொல்லலாம்," என்று உதயா கேட்க, வெறுமனே தலையசைத்துச் சின்னதாக முறுவல் செய்தாள் ரதி.

"ஓ! சும்மாதான் சொன்னாயா, ரதி? அவளைக் கிளப்புவதற்காகவா? பாரேன். இன்றைக்குத்தான் பார்த்தோம். அதற்குள் எங்களுக்காக என்னவெல்லாம் செய்கிறாய்! அவளைப் பார்! மருமகளாகப் போகிறவளாம். குத்திக் குதறவென்றே வருகிறாள். வக்கிரம் பிடித்தவள்!" என்று ஆத்திரத்துடன் கூறினாள் உதயா.

ரதிக்கும் அதே எண்ணம்தான். ஆனால் அதை அப்போது வெளியிட்டுச் சொல்வது அவ்வளவு சரியில்லை என்று தோன்றியதால், "வாயேன், உதி. என் துணிமணிகளை எல்லாம் அலமாரியில் அடுக்கலாம். பெட்டிக்குள் இருந்தது, எடுத்து எடுத்துப் போட்டால் கசங்கி விடும். அலமாரியில் தொங்கப் போட 'ஹாங்கர்' வசதி இருக்கிறதா?" என்று கேட்டபடி அவள் எழ, உதயாவும் எழுந்து உடன் நடந்தாள்.

அடுத்து ஒரு மணி நேரம், இரு பெண்களுக்கும் உற்சாகமாகக் கழிந்தது.

ரதியின் ஆடை, அணிகலன்களைப் பார்த்து உதயா ரசிப்பதும், தன்னிடம் உள்ளவை பற்றிச் சொல்வதுமாக, இருவரின் நெருக்கமும் அதிகமாயிற்று. அந்த ஒரு மணி நேரத்துக்குள் பல ஆண்டுகள் பழகிய தோழிகள் மாதிரி ஆகிவிட்டனர்.

மதிய உணவின் பின், உதயா தன் வீட்டுக் கலை வகுப்புக்குச் சென்றுவிட, ரதியை ஓய்வெடுக்குமாறு அவளது அறைக்கு அனுப்பினாள் அன்ன பூரணி.

பகலில் தூங்கிப் பழக்கப்பட்டிராத ரதி, அன்றைய நிகழ்ச்சிகளை அசை போடலானாள்.

அன்னபூரணி. பெரும்போக்கான பெண்மணி. அமைதி விரும்பி. ஆனால், அந்த அமைதிக்காக அவள் கொடுக்கும் விலை நிச்சயமாக அதிகமே.

அடுத்தது லோகேசன்.

அவன் என்ன செய்கிறான்? படிப்பானாலும், வேலை யானாலும், அந்த நேரம் வரை அவன் வீட்டில் அரட்டை அடித்துக் கொண்டிருக்க முடியாது. ஆற, அமர இசை கேட்டுக் கொண்டிருந்தது வேறு.

உதயா நல்ல பெண். படிப்பு முடிந்தாயிற்று. அடுத்து வீட்டுக் கலைகள் படித்து முடித்ததும், திருமணம் நடக்கும் என்கிற நிலை. ஆனால், வெளி உலகம் தெரியாமல் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டிருக்கிறாள். ஒரு சவிதாவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லையே! இவளைப் போல உலகில் எத்தனை பேர்.

இதற்கு மேல் பரமேசன்.

சவிதா பேசுவதைப் பார்த்தால், அவனை முந்தானையில் முடிந்து வைத்திருப்பது போலத் தோன்றியது. அவனைச்



சமாளித்துக் கொள்ள முடியும் என்கிற நிச்சயம் இல்லாமல், அவனுடைய தாய், தங்கையை இப்படிப் பேச முடியாது.

அப்படியானால், பரமேசன் எப்படிப்பட்டவன்?

தன்னுடைய முதல் அபிப்பிராயம் தப்பா?

எப்படியிருந்தாலும், எல்லாமே இன்னும் சில நாட்களில் தெரிந்து விடப் போகிறது. இப்போது அனாவசியமாக மூளையைக் கசக்கிக் கொள்வானேன்.

இதையே அவளுடைய தந்தையிடம் கூறினால், 'நடக்காத விஷயம் பேசுகிறாயே, பாப்பா. அங்கே மூளை இருந்தால் தானே, கசக்குவதற்கும், துவைப்பதற்கும்?' என்று சிரிப்பார், உற்சாகமே உருவானவர்.

இந்தப் பரமேசனும் இருக்கிறானே.

தந்தையைப் பார்க்க குறைந்தபட்சம் இன்னும் இரண்டு மாதங்கள் ஆகுமே என்றிருந்தது ரதிக்கு. அறுபது நாட்கள்.

சும்மா இருந்தால் சோர்வுதான் அதிகம் ஆகும் என்று எண்ணி அவளது பூப்போட்ட டாப்ஸ் ஒன்றை எடுத்து ஒவ்வொரு பூவின் நடுவிலும், வைரமாய் ஜொலித்த பிளாஸ்டிக் கற்களை ஒட்டலானாள்.

சுமார் நாலரை மணி அளவில், காஃபிக்காக அவளை அழைக்க வந்த உதயாவுக்கு, இதைப் பார்த்ததும் ஒரே வியப்பும் மகிழ்ச்சியும். ''அந்த வேலை உனக்குத் தெரியுமா, ரதி? என் சினேகிதியுடைய சொந்தக்காரி ஒருத்தி இதுபோலச் செய்கிறாள்.

''எனக்கு ஒரு சுரிதார் செட்டுக்குச் செய்யலாம் என்று பார்த்தால், அனாவசியமான அதிகச் செலவு என்று பெரி

யண்ணன் வேண்டாம் என்றுவிட்டார். அந்தம்மா கற்றுக் கொடுக்கவும் மாட்டேன் என்று விட்டார்கள். இனி உன்னிடம் கற்றுக் கொண்டு, வேண்டிய மாதிரி அழகாகச் செய்து கொள்வேனே!'' என்று குதூகலப்பட்டாள்.

அந்த மகிழ்ச்சியுடனேயே இருவருமாக அன்ன பூரணி யிடம் சென்றனர்.

மூவருமாகப் பேசிக் கொண்டிருந்தபோது, வாயிலில் கார் வந்து நிற்கவும், எட்டிப் பார்த்துவிட்டு, ''அண்ணன், அம்மா!'' என்றாள் உதயா வியப்பும் உவகையுமாக.

ஆனால், உடனே முகம் வாட, ''அம்மா, சவிதாவும் வருகிறாள்!'' எனவும், இருவர் கண்களிலும் கவனம் தெரிந்தது.

இப்போது, சவிதா சேலைக்கு மாறியிருந்தாள். ஒழுங்காக மடிப்பெடுத்து, பின் குத்தி, தவறான பார்வைக்கே இடமின்றி அடக்கமே உருவாக...!

''வாம்மா!'' என்று அன்னபூரணி வரவேற்க, ''ஹலோ சவிதா, ஹலோ பரமேசன்!'' என்றாள் ரதி, வரவேற்கும் பாவனையாக.

''இப்போதுதான் விழித்து எழுந்தீர்களா? அதே உடையில் இருக்கிறீர்களே!'' என்று சவிதா கேட்டபோது மரியாதைப் பன்மை மீண்டும் தலை காட்டியது.

''எங்கேனும் வெளியே செல்லும்படி இல்லையானால், நான் இரவு படுக்கு முன்தான் குளித்து உடை மாற்றுவது. குளிக்காவிட்டால், தூக்கமே வராது!'' என்றாள் ரதி.

''ஹை! அண்ணன்கூட அப்படித்தான். இல்லையாண்ணா?'' என்று கேட்டாள் உதயா.



''ம்...'' என்று லேசான முறுவலுடன் ஒப்பிவிட்டு, ''என்னம்மா டிஃபன்?'' என்று வினவினான் பரமேசன்.

''நம் பக்கத்துச் சிற்றுண்டியாக ரதி சாப்பிட்டுப் பார்க்கட்டும் என்று கொழுக்கட்டையும், வடையும் செய்யச் சொன்னேனடா!'' என்று மகனுக்கும் வருங்கால மருமகளுக்கும் இரு தட்டுகளில் பலகாரங்களை எடுத்து வைத்தாள் அன்னை.

''விருந்தாளிக்காக இப்படி ஏதாவது இருக்கும். ஏதோ 'புல்லுக்கும் பொசியும் நீராகி' நமக்கும் கொஞ்சம் கிடைக்கட்டுமே என்றுதான் வீட்டுக்கே டிஃபன் சாப்பிட வந்தேன்!'' என்று ரதியைப் பார்த்துப் புன்னகை செய்தான் அவன்.

சங்கப் பாடலைப் புரிந்துகொண்டு, ''ஏதோ, என்னை நெல் என்கிறீர்களே, அதற்கு நன்றி!'' என்றாள் ரதி.

''இனிப்பும், எண்ணெயும் எனக்குக் கொஞ்சமாக வையுங் கள். இல்லாவிட்டால், உடம்பு உப்பிவிடும்!'' என்று விட்டு, சவிதா ரதியின் பக்கம் திரும்பினாள். ''பகலின் வியர்வையோடு என்னால் படுக்கவே முடியாது. அதனால், நானும் இரவிலும் ஒரு தரம் குளித்து விடுவேன்!'' என்றாள்.

'என்ன பொருத்தம்!' என்று யாராவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தாளோ, என்னவோ, யாரும் வாயைத் திறப்பதாக இல்லை என்றானதும், ''அப்... புறமாக, யார் முதலில் குளிப்பது என்று எனக்கும் அவருக்கும் போட்டியாகி விடப் போகிறது!'' என்று கூறி, வெட்கத்துடன் நெளிந்தாள்.

எதையும் கவனியாததுபோல, ''சாப்பிடம்மா!'' என்று ஒரு தட்டை அவள் முன் வைத்தாள், அன்னபூரணி.

''இந்த வடையும் தேங்காய்ச் சட்டினியும் சூப்பர், அத்தை!'' என்றாள் ரதி. ''எனக்கு இன்னும் இரண்டு வடை வையுங்கள். ஒரு நாள் சாப்பிடுவதில் குண்டாகி விடுவேனா, என்ன? ஆனால் தினமும் இப்படிச் சிறப்பாக ஏதாவது செய்து விடாதீர்கள், அத்தை. அப்புறம், எங்கள் வீட்டுக் கதவை இடித்துப் பெரிதாக்க வேண்டியதாகிவிடும். அதைவிடப் பெரிய அநியாயம், அப்பா என்னை யார் நீ என்று கேட்டுவிடக் கூடும்!'' என்று அவள் பாவனையோடு சொல்ல, எல்லோரும் நகைத்தனர்.

''ஒரு சின்ன வேலை செய்தால், அதற்கெல்லாம் அவசியமே இராது. நன்றாகச் சாப்பிடவும் செய்யலாம்!'' என்றான் பரமேசன்.

''ஐயோ, அது என்ன? சீக்கிரமாகச் சொல்லுங்கள், பரமேஷ். உடனே போய் அதைச் செய்து விடுகிறேன்!'' என்று பரபரப்புக் காட்டிக் கெஞ்சினாள் ரதி.

''நடக்க வேண்டும். காலையிலும், மாலையிலும் கொஞ்சம் வியர்வை வர நடந்தால் உடம்பு தொடர்ந்து கச்சிதமாகவே இருக்கும்!'' என்று ஆலோசனை வழங்கினான், அவன்.

''இதுதான் சின்ன வேலையா?'' என்று பொய்யான ஆத்திரம் காட்டி முறைத்தாள் ரதி. ''வயிறு நிறைய உண்டுவிட்டு, 'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு' என்பதுபோல, நன்றாக உறங்குவதை விட்டுவிட்டு, நடப்பதாமே. அதுவும், வியர்வை வர நடக்க வேண்டுமா? அத்தை! பழைய காலத்துச் சித்திரவதைக் கலையில், உங்கள் மூத்த மகன் மகா வல்லவர் என்று நீங்கள் சொல்லவே இல்லையே! மகன் மேல் அவ்வளவு பாசமா?'' என்று கேட்டாள்.

எல்லோரும் சிரித்தபோது, ''பெற்றவர்கள் என்றால், பிள்ளை மேல் பாசம் இருக்கத்தான் செய்யும். ஆனால், எதற்கு



இந்த வீண் விவாதம்? அளவோடு சாப்பிட்டால், நீங்கள் சொல்லுகிற சித்திரவதையை அனுபவிக்கத் தேவையே இல்லையே!'' என்றாள் சவிதா.

''ஆனால், 'உண்டவன் உரம் செய்வான்' என்று பழமொழியே இருக்கிறதே... ஆனால், அது என்ன 'உரம்' பரமேஷ் அத்தான்? அதைச் செய்ய, எதற்காக நன்றாகச் சாப்பிட வேண்டும்? உரம் என்றால், செடி கொடிகளுக்குப் போடும் எருதானே? அதைத் தயாரிப்பதற்குப் போய்... வாவ்! பிரமாதம் உங்கள் சிரிப்பு! ஆனால், இப்போது எதற்குச் சிரிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் ரதி.

''ஒன்றுமில்லை! இந்த 'உர'த்துக்கு வலிமை, பலம் என்று பொருள். அதைப் போய்...'' என்று முறுவலித்தான் பரமேசன்.

சிரித்தவாறே, காஃபிக்குச் சொல்ல, அன்னபூரணி உள்ளே செல்லவும், ''அத்துடன் உனக்கு என் நன்றி. சமீப காலமாக, இந்த வீட்டில் இப்படிச் சிரிப்புச் சத்தம் கேட்டதே இல்லை. அதுவும், அம்மாவின் சிரிப்பைக் கேட்க மிகவும் ஆறுதலாக இருந்தது!'' என்றான்.

சிறு அமைதியின் பின், ''மாலையில் உங்களைப் பார்த்ததே அத்தைக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். காரில் வருவது நீங்கள் என்று உதயா சொன்னதும், அத்தை முகம் மலர்ந்ததைப் பார்க்க வேண்டும்!'' என்றாள் ரதி புன்னகையோடு.

அவள் சொன்னதைக் கேட்டதும், அவனும் முகம் மலர்ந்தான்.

''கொஞ்ச காலமாகவே, வேலை மிகுதியில், மாலைச் சிற்றுண்டிக்கு வீட்டுக்கு வர முடியவில்லை. இனி, அடிக்கடி வர முயற்சி செய்ய வேண்டும்,'' என்றான் தொடர்ந்து.

''உங்களோடு நானும் வந்து அத்தைக்கு உதவி செய்யப் போகிறேன்,'' என்றாள் சவிதா, சற்று உரத்த குரலில். ''விருந்தோம்பல் வேலை இருக்கிறதல்லவா?''

''ரதி ஒன்றும் விருந்தாளி அல்ல!'' என்றாள் உதயா வெடுக்கென.

''ரதி விருந்தாளி அல்லதான். ஆனால், அதைக் கொஞ்சம் அமைதியாகச் சொல்ல வேண்டும்!'' என்றான் பரமேசன், தங்கையிடம்.

அன்றையக் கதை அத்தோடு முடியவில்லை.

## 8

அத்தை மகளும், மாமன் மகனும் இலகுவாகப் பேசிப் பழகியது சவிதாவுக்குப் பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை என்றால், கொஞ்ச நஞ்சம் அல்ல. முடிந்தால், ரதியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு வந்து விடுவாள், கல்யாணம் நிச்சயமான ஒருவனிடம் அதென்ன அவ்வளவு குழைச்சல் என்று, மிகவும் வெறுப்பாக இருந்தது. ஆனால், அதைக் காட்டிக் கொள்ளாமல் சும்மா இருக்க நேர்ந்தது இன்னமும் அதிகமாக அவளுக்கு ஆத்திர மூட்டியது.

அந்த வீட்டில் அவளுக்கு உள்ள உரிமையை யாரும் ஆதரித்துப் பேசக் காணோம். என்ன அழகாக எடுத்துக் கொடுத்தான். காதிலேயே விழாத மாதிரிக் குத்துக் கல்லாக உட்கார்ந்திருந்தார்கள். ஆனால், ரதி விருந்தாளி அல்லவாம்.

அந்தச் சின்னப் பாம்புதான் விஷம் கக்கியது என்றால், பரமேசனும் அதை ஒத்துப் பேசுகிறானே.



விருந்தாளி அல்ல என்றால், ரதி என்ன இந்த வீட்டுக் காரியா?

பரமேசனுடைய மனைவி என்ற நிலையில் நின்று, உதயாவின் தலையில் ஒரு குட்டு வைத்து, அவள் அண்ணனையும் பிடித்து உலுக்கி, ஒரு பேயாட்டம் ஆடலாம் என்றால், அதற்கும் வழியில்லாமல், இன்னமும் திருமணமே ஆகவில்லை. இப்போது ஆடினால், அந்தப் பேயாட்டத்துக்குப் பயந்து, கல்யாணமே வேண்டாம் என்று விட்டால்?

கனவு கண்டதெல்லாம் வீணாகிப் போகுமே.

என்ன ஆனாலும், அதற்கு மட்டும் இடம் கொடுக்கக் கூடாது என்பதில் சவிதா உறுதியாக இருந்தாள்.

திருமணம் தள்ளிப் போகக் காரணமாய், சமயத்தில் உயிரை விட்டுத் தொலைத்த சுந்தரலிங்கத்தை ஆயிரத்து நூறாவது தடவையாக மனதுள் திட்டித் தீர்த்தாள் சவிதா.

அப்போதைக்குச் சற்று அடக்கி வாசிக்கத் தீர்மானித்து, ''நெருங்கிய உறவினர் வீட்டுக்குப் போய்த் தங்கக்கூட, எங்களுக்குப் பிடிக்காது. உங்க அப்பாவுக்கே இரண்டு விட்ட தங்கை... தூ...ரத்து உறவு என்ற போதும் நீங்கள் இங்கே வந்து தங்கியிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால், அத்தை மிக நல்லவர்கள் என்பதால், நீங்கள் கஷ்டப்படாமல் தங்கலாம்!'' என்று, அன்னபூரணியைப் பாராட்டுவதுபோல ரதியைக் குத்தினாள்.

சிறு புருவ நெரிசலுடன் ஏதோ புரியாதவன் போலப் பரமேசன் நோக்க, சவிதாவின் குத்தலைக் கண்டுகொள்ளவே இல்லாமல், அன்னபூரணியைப் பார்த்துப் புன்னகை செய்தாள் ரதி. ''அவதார புருஷர்களின் முகத்தைச் சுற்றிப் பிரகாசமான

ஒளிவட்டம் தெரியுமாமே. அதுபோல உங்கள் நல்ல தன்மை, உறவே இல்லாத சவிதா கண்ணுக்குக் கூடத் தெரிகிறது, பாருங்கள் அத்தை!'' என்று பாராட்டினாள்.

எனக்காவது தூரத்து உறவு... உனக்கு அதுவும் இல்லையே என்று மறைமுகமாகச் சொல்லிக் காட்டுகிறாளா? இவளை... இவளை என்ன செய்வது?

பரமேசனிடம் திரும்பி, ''ரதி நம் குடும்பத்தாருக்காக வாங்கி வந்த கோணித் துணிகளை நீங்கள் பார்க்கவில்லையே, பரம்? ஹாலில்தான் கிடக்கிறதா அல்லது உள்ளே எடுத்து வைத்து விட்டாயா, உதயா? வாருங்கள், பரம்! போய்ப் பார்க்கலாம்!'' என்று அவனைக் கைப் பற்றி அழைத்தாள்.

கேட்கிறாளே, என்ன செய்வது என்பது போல, உதயா ரதியைப் பார்த்தாள்.

எழுந்து கொண்டிருந்த பரமேசன் அந்தப் பார்வையைக் கண்டு விட்டான் என்பதை உணர்ந்து, ரதி தானும் எழுந்து, ''எல்லாவற்றையும் நான் அத்தை அறையில் கொண்டு போய் வைத்தேன், உதி. வா, எடுத்து வரலாம்,'' என்று, துணிகள் எங்கிருக்கின்றன என்று தெரியாமல், உதயா கண ஜாடையால் கேட்டதுபோலக் காட்டி அவளோடு உள்ளே சென்றாள்.

இருவருமாகத் துணிகளோடு திரும்பி வந்தபோது, நீ இவ்வளவு கவலைப்படத் தேவையில்லை, சவிதா. இதனால் அப்படி ஒன்றும் காற்றில் நீராவி அதிகமாகி விடாது!'' என்று பரமேசன் சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது.

''விடவே மாட்டாளே!'' என்று கடித்த பற்களுக்கிடையே முணுமுணுத்தாள் உதயா.

எதையோ சொல்லிக் கொண்டு வருவதுபோல, ''அதுதான் யோசனையாக இருக்கிறது...'' என்றபடி ஹாலுக்குள் காலை



வைத்த ரதி, பரமேசனைப் பார்த்து, ''சாரி, அத்தான். உங்களுக்கு வாங்கியது மட்டும், கொஞ்சம் அளவு சின்னதாக இருக்குமோ என்று சந்தேகமாக இருக்கிறது. இவ்வளவு உயரம் வளர்ந்திருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்றபடி, அவனுக்காக வாங்கி வந்த குர்தாவை அவனிடம் கொடுத்தாள்.

''உன் அப்பா உயரம்தானே? பின், ஏன் எதிர்பார்க்க வில்லை?'' என்று கேட்டபடி, பார்சலைப் பிரித்தான் பரமேசன்.

''ம்ம்... என் அப்பா தனி!'' என்றாள் ரதி பெருமையாக.

குர்தாவைத் தோளில் வைத்துப் பார்த்துவிட்டு, ''கொஞ்சம் சின்னதுதான். முயன்று, என்னை உள்ளே திணித்து, இதை அணிந்திருக்கும்போது, யாராவது கிண்டலடித்தால், என் மாமா மகள் குழப்பவாதி. அவள் வாங்கி வந்தது என்று உன் பக்கம் கையைக் காட்டி விடுகிறேன்!'' என்று கேலியாகக் கூறிச் சிரித்தான் அவன். மீண்டும் குர்தாவை மடித்தபடி, ''அப்படி ஒன்றும் சின்னதில்லை, ரதி. அணிந்து கொள்ளலாம். வாங்கி வந்ததற்கு நன்றி. டெரிகாட்டன் மாதிரி இருக்கிறதே தவிர, சணல் கலந்து நெய்தது என்று தோன்றவே இல்லை!'' என்றான் பாராட்டுதலாக.

துணி நெய்யப்பட்டிருந்த விதத்தைத்தான் பரமேசன் பாராட்டினான். ஆனால், சவிதாவுக்கு நெஞ்சு காந்தியது. விட முடியாமல், ''என்னதான் மாற்றிக் காட்ட முயன்றாலும், கோணி செய்யும் பொருளில் செய்தது என்பது ஒரு மாதிரி உறுத்தத் தானே செய்கிறது!'' என்றாள் அவள்.

திரும்பி அவளைப் பார்த்துவிட்டு, ''அப்படிச் சொல்ல முடியுமா, சவிதா? இப்போது, உன் கைப்பை தோலில் செய்ததுதான். அதற்காக மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் என்று

அருவருப்புப் பட்டுக் கொண்டா இருக்கிறாய்? அது மாதிரி எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்!'' என்று பரமேசன் கூறவும், சொல்வது அறியாமல் திகைத்தாள்.

அத்தோடும் நில்லாமல், ''இந்த நீரூற்றும்கூட நீ கொண்டு வந்ததுதானாமே. சைனீஸ் வாஸ்துவா? அழகாக இருக்கிறது. எங்கே வாங்கினாய்? இந்தப் பக்கம் என்றால், இன்னொன்று வாங்கித் தர முடியுமா? ஒரு பெரிய வாடிக்கையாளருக்கு இதிலெல்லாம் பைத்தியம். கொடுத்தால் உச்சி குளிர்ந்து போகும்!'' என்று வேறு அவன் கேட்கவும், சவிதா கொதிநிலைக்கே போய்விட்டாள்.

''அடுத்த மாத மின் கட்டணத் தொகையைப் பார்த்ததும், நேர் எதிராக மனிதர் கொதிக்கவும் தொடங்கி விடுவார். வீணே வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள்!'' என்றாள், அவனுக்காகச் சொல்வது போல.

''இதெல்லாம் உனக்குப் புரியவில்லை, சவிதா!'' என்றான் பரமேசன். ''இந்த நீர் ஊற்றின் அளவையும், மோட்டாரின் மெல்லிய சத்தத்தையும் கவனித்தாயா? மிகச் சிறிய மோட்டார். இரவில் போடும் விடிவிளக்கின் அளவுதான் மின்சாரம் செலவாகும். அதிகமாகவே ஆனாலும், அவர் பொருட்படுத்த மாட்டார். சொல்லு, ரதி. இது எங்கே வாங்கியது?'' என்று மீண்டும் ரதியிடம் கேட்டான்.

''எங்கேயும் வாங்கவில்லை. இது நானே செய்தது!'' என்று, மகிழ்ச்சிப் புன்னகையோடு ரதி கூற, படபடவென்று கை தட்டினாள் உதயா.

''வாவ். உனக்கு என்னதான் தெரியாது, ரதி? அப்போ தானால், டாப்சில் பூ வேலை செய்தாய். இப்போது இது. யம்மாடியோவ்!'' என்று உரத்த குரலில் பாராட்டினாள்.



''பெரிய விஷயம் ஒன்றுமில்லை, உதி. சமையல், வீட்டுப் பொறுப்பை எல்லாம் பார்க்க அங்கே ஆள் உண்டு. அப்பா வேறு வேலை முடிந்ததும், நேரே கிளப்பிற்குப் போய்விட்டுத் தாமதமாக வருவார். நேரம் போக வேண்டுமே! எங்கேயாவது, எதையாவது பார்த்தால், போய்க் கற்றுக் கொள்வேன். அவ்வளவுதான். இதே என்னைச் சமையல் அறையில் கொண்டுபோய் விடு. பெப்பெ என்று விழிப்பேன்!'' என்று, தன் திறமைகளைச் சாதாரணமாக்கிச் சொன்னாள் ரதி.

''தயவு பண்ணி இப்படிக் கத்திப் பேசாதே, உதயா. கேட்பவர்கள் நம் வீட்டைப் பற்றித் தப்பாக நினைப்பார்கள்!'' என்றாள் சவிதா.

யோசனையோடு அவளைப் பார்த்தான், பரமேசன்.

அவன் பார்வையைக் கவனித்துவிட்டு, ''நமக்கு உதி என்றும் சின்னக் குழந்தைதான். ஆனால், மற்றவர்கள் அவளைப் பெரிய பெண்ணாகத்தானே கருதுவார்கள். சின்னப் பிள்ளை போல இப்படிக் கத்திப் பேசினால்...'' என்று சவிதா இழுக்கவும், ''அதுவும் சரிதான். சத்தத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள், உதி!'' என்றான், அவளுடைய அண்ணன் - பொறுப்பு மிக்கவனாக.

உதயாவின் முகம் இறுகிப் போய்க் கண்கள் கலங்கத் தொடங்கின.

அதையும் கவனித்து, ''நல்லதற்குச் சொன்னால், அதை நல்லபடியாக ஏற்கவும் வேண்டும்!'' என்றான் அவன்.

''பரமேஷ் அத்தான்!'' என்று ரகசியம் போல மெல்லிய குரலில் அழைத்தாள் ரதி.

அவன் திகைப்புற்றுத் திரும்பவும், ''இந்தக் குரல் சரிதானா அத்தான்? நம் பக்கத்துப் பழக்க வழக்கங்களைப் படித்து வர வேண்டும் என்று என் அப்பா சொல்லியிருக்கிறார். அவர் ஒன்று சொல்லி, நான் செய்யாமல் இருந்தது கிடையாது. உதிக்குச் சொன்னால், அது எனக்கும்தானே! இது பரவா யில்லையா? அல்லது, இன்னும் குறைக்க வேண்டுமா?'' என்று பாதிக் கண்களை மூடித் தீனக் குரலில் பதவிசாகக் கேட்டாள்.

தன்னை மீறிச் சிரித்தான், பரமேசன். ''இப்படிப் பேசினால், பாதி உயிரே போய் விட்டதோ என்று நினைப்பார்கள். சும்மா ஒழுங்காகவே பேசு.''

''உதியும்தானே?'' என்று கேட்டவள், அவனது கண்கள் இடுங்கவும், ''பின் என்ன அத்தான்? புதிதாக வந்த உறவுக்காரி. எனக்கு இதமாக இருக்கும் என்று சற்று உரக்கச் சொல்லி விட்டாள். அதற்குப் போய் இவ்வளவு அலட்டலா? வேண்டாம், உதி. எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று நீ எதையும் சொல்லவே வேண்டாம். எல்லோரையும் போலச் சும்மாவே இருந்து விடு. நான் ஒன்றும் அதற்காக வருத்தப் படவே மாட்டேன்!'' என்று வேண்டும் என்றே சேர்த்துச் சொன்னாள்.

பரமேசனின் முகம் லேசாகக் கன்றியது.

''அதில்லை, ரதி. உன் கை வண்ணம் மிக அழகாகவே இருக்கிறது... உதிம்மா, நீ இப்போது நமக்குள் பேசியது தப்பில்லை. ஆனால், இதே பழக்கத்தில் வேற்று ஆட்கள் முன்னிலையில் இதே மாதிரி வந்து விடக் கூடாதே என்றுதான், சவிதா எடுத்துச் சொன்னதும், அண்ணன் எச்சரித்ததும். அதைப்



பெரிதாக எண்ணாதே, என்ன?'' என்று தங்கையைச் சமாதானம் செய்தான்.

அவளும் முயன்று முறுவலித்தாள்.

எல்லோருக்கும் எல்லாம் சரியாகிப் போயிருக்கும். சவிதா தவிர.

''இனி, சவிதாவைக் கொண்டு போய் விட்டு விட்டு, நான் அப்பா அலுவலகத்துக்குப் போக வேண்டும். வரட்டுமா?'' என்று பரமேசன் எழுந்தபோது, உயர் ரக பைக் ஒன்று வாயிலில் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

''அப்பப்பா! காலையில் போனவர், இப்போதுதான் வருகிறாரா? சென்னை வெய்யில் எல்லாம் உங்கள் தம்பி தலையில்தான் போல. எப்படிக் கன்றிக் கறுத்திருக்கிறது பாருங்கள். சாப்பிடாமல் கொள்ளாமல், இப்படிச் சுற்றி உடம்புக்கு ஏதாவது வந்தால், பாவம்! அத்தைக்குத்தானே கஷ்டம்!'' என்றாள் சவிதா வருத்தமாக.

சட்டென வாயிற்புறம் சென்று, தம்பியிடம் தணிந்த குரலில் ஏதோ படபடத்துவிட்டு, அங்கிருந்தே எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு, பரமேசன் கிளம்பிவிட்டான்.

முகத்தில் அப்பாவித் தனத்தைக் காட்டியபடி, விடைபெற்றுக் கொண்டு பதவிசாக அவனைப் பின் தொடர்ந்தாள் சவிதா.

முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு லோகேசன் உள்ளே வந்தான்.

கார் கிளம்பும்வரை பொறுத்திருந்து, ''திருட்டுப் பூனை. முகத்தைப் பார். அண்ணனைக் கிளப்பித் திட்ட வைத்துவிட்ட சந்தோஷம்!'' என்று உதயா சீறினாள்.

''ரொம்பத் திட்டி விட்டானாடா?'' என்றாள் அன்னபூரணி பரிவுடன்.

தோளைக் குலுக்கினான் மைந்தன்.

''அது எப்போதும் உள்ளதுதானே! இன்றைக்குக் காரணம் தான் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார். சாக்காய்க் கிடைத்தது ரதி!'' என்று அசட்டையாகப் பதிலிறுத்தான் லோகேசன்.

''என்னது? நானா? எப்படி? நான் என்ன செய்தேன், லோகன்?''

''தினம்தான் சுற்றுகிறாய். இன்றைக்குமா? வீட்டுக்கு ஒரு சொந்தக்காரப் பெண், கொஞ்ச நாள் தங்கியிருக்க வந்திருக்கிறாள். சற்று நேரம் அவளோடு பேசியிருந்து இதமாக உணர வைப்போம் என்பதே இல்லாமல், இன்றுகூட ஊர் சுற்றப் போவதா? என்ன பண்பு இது?'' என்று, அண்ணன் சொன்னது போலவே, அதட்டலாகச் சொல்லிக் காட்டினான் அவன்.

வியப்புடன் விழி விரித்தாள் ரதி.

பரமேசன் வேலையை ஒதுக்கிக் கொண்டு, வீட்டுக்கு வந்து இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததன் காரணம் இதுவா?

அவளது முதல் அபிப்பிராயம் சரியானதாகத் தோன்றிய தாலோ, என்னவோ, அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது.

## 9

தனக்காக எண்ணி ஒன்று செய்தான் என்பதால் மட்டுமின்றி, அது ஒரு குடும்பத் தலைவனின் பொறுப்பான



செயலும்கூட என்பதால், பரமேசனைப் பற்றி ரதி ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினாள்.

பார்த்த அளவில், அவனுக்கு உழைப்பு அதிகம் என்பது புரிந்தது.

தூண்டித் துருவுவது போலத் தோன்றாத அளவில், சிறு சிறு கேள்விகளின் மூலமும் சில பல விஷயங்களை அவள் அறிந்து கொண்டாள்.

அவன் தானாக ஒரு தொழிலைத் தொடங்கி நடத்துவதே, அவளுக்கு அவனிடம் மதிப்பை ஏற்படுத்தியது.

அத்தோடு, இப்போது தந்தையின் தொழிலையும் சேர்த்துப் பார்க்கிறான்.

வீட்டிலும் தந்தை இல்லாத குறை தெரியாதபடி, நிர்வாகத்தை நடத்த முயற்சிக்கிறான் என்று புரிந்தது. தந்தையின் மூலம் கிடைத்த தொழில் பற்றிய அறிவினால், இரு தொழில்களையும் அவன் கஷ்டப்பட்டு அதிகமாக உழைத்து நடத்துவதையும், நிலை குலையாமல் குடும்பத்தை நடத்தப் பாடுபடுவதையும் அவளால் எளிதாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

எல்லா வகையிலும் சிரமப்படுகிற சமயத்தில், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிற மாதிரி சவிதாவின் பேச்சிலிருந்த விஷம் அவனுள் இலகுவாக இறங்கிக் கொண்டு இருப்பதையும் கூட அவளால் தெரிந்து கொள்ள முடிந்தது.

குடும்பத்தின் மற்ற மூன்று அங்கத்தினருமே பொறுப் பற்றவர்கள் என்கிற மாதிரி எண்ணப் போக்கு உருவாக்கப் பட்டிருந்தது. பெண்கள் இருவரிடமும் சற்று அடக்கிப்

பேசினாலும், லோகேசனிடம் எரிச்சலை மறையாது காட்டத் தொடங்கியிருந்தான் பரமேசன்.

அதே சமயம், சவிதாவின் சாவிக்குப் பரமேசன் ஆடுகிறான் என்கிற எண்ணம் அவனுடைய வீட்டினருக்கு!

இது பெரும் பிளவாகி விரிசலாகி விடாமல் தடுக்க வேண்டுமானால், முதலில் பரமேசனின் வேலைப்பளுவைக் குறைத்தாக வேண்டும் என்ற முடிவுக்கு ரதி வந்தாள்.

இதற்குள்ளாக, இருமுறை சவிதா வீட்டுக்கு வந்தபோது, ரதி அங்கே இல்லை. வெளியே வேலை இருப்பதாக அன்ன பூரணியிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

அது என்ன வேலை, என்னவென்று சொன்னாள் என்று சவிதா தூண்டில் போட்டுப் பார்த்தும், அன்ன பூரணியால் எந்த விவரமும் கொடுக்க முடியவில்லை. அவளுக்கே முழுமை யாகத் தெரிந்தால்தானே!

இன்னொரு தடவை ரதி உதயாவையும் அழைத்துச் சென்றிருந்தாள்.

இருவரும் திரும்பி வரும்வரை உட்கார்ந்திருந்து, உதயாவைக் குற்றவாளி மாதிரி நிறுத்திக் குறுக்கு விசாரணை நடத்தினாள், சவிதா.

ரதியோடு இரண்டு மணி நேரம் கழித்ததால் வந்த துணிவோ, என்னவோ, ''நான் எங்கேயோ போவேன், வருவேன். அதையெல்லாம் வெளியார் யாருக்கும் கணக்குக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை!'' என்று சுள்ளென்று கூறிவிட்டு, மேலே பேச இடமும் கொடாமல் உதயா உள்ளே போய் விட்டாள்.



சற்று நேரம், சவிதாவுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை.

அவளைவிட, இரண்டு வயது சின்னக் கழுதை எப்படித் தூக்கி எறிந்து பேசிவிட்டுப் போகிறாள்.

அதுவும், யாரிடம்? அவளுக்கு அண்ணியாகி, இந்த வீட்டையே ஆட்டிப் படைக்கப் போகிற ஒருத்தியிடம் பேசுகிற பேச்சா இது?

'வெளியார் யாரிடமு'மாமே. இவள் அப்பன் மட்டும் செத்துத் தொலையாமல் இருந்திருந்தால், காதைப் பிடித்துத் திருகி, தலையிலும் இரண்டு குட்டு வைத்துக் கேட்கிற உரிமைக்காரியாகவே சவிதா இருந்திருக்கலாம்.

சே! சரியான நேரம் பார்த்துச் செத்தானே, படுபாவி.

அன்ன பூரணியிடம் மிரட்டிப் பார்க்கலாம் என்றால், அவள் ஏற்கெனவே தலைவலி என்று தைலத்தைத் தடவிக் கொண்டு படுக்கப் போயிருந்தாள்.

இப்படிச் சொல்லு என்று, அவளே மகளுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போயிருப்பாளோ? சே! இராது. அந்தக் கிழவிக்கு அவ்வளவு தைரியம் போதாது. புத்தியும் போதாது.

எல்லோரும் அவளுடைய தாயார் மாதிரிக் கெட்டிக் காரியாக இருப்பார்களா என்ன? அவள் மட்டும் சரியான சமயத்தில் எடுத்துச் சொல்லவில்லையானால், சவிதா என்ன மாதிரி வாழ்வை விட்டுத் தொலைத்திருப்பாள்.

பிறகும், யார் யாரை எப்படி நடத்த வேண்டும் என்று கற்றுக் கொடுத்தது அவள்தானே!

இப்போது, அக்கா வீட்டில் ஏதோ தகராறு என்று போயிருக்கிறாள். அங்கே முடித்து விட்டுத்தான் வருவாள். வருகிறபோது வரட்டும். இங்கே சவிதாவே சமாளித்துக் கொள்ளுவாள்.

இப்போது, இந்த உதயாவை என்ன செய்வது?

அண்ணனிடம் வத்தி வைத்து விடுவாளோ என்ற பயத்தில், என்ன சொன்னாலும், பேசாமல் கேட்டுக் கொண்டிருப் பவளுக்கு, இந்தத் திமிர் எங்கிருந்து வந்தது?

வேறு யார்... என்று மேலே யோசிக்கத் தேவையே இல்லாமல், தன் தோள் பையில் இருந்து, சில சாமான்களை எடுத்து, டீபாய் மேல் அமைதியாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள் ரதி.

நடந்ததை யெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந் திருப்பாள்.

இந்த வீட்டின் வருங்காலத் தலைவியை, உதயா அவமதித்ததையும்.

"இதை என் பரமிடம் சொன்னால், என்ன நடக்கும் தெரியுமா?"

"அந்தப் பரமேசனுக்குத்தான் தெரியும்!" என்று, மேலே பார்த்துத் தோளைக் குலுக்கினாள், ரதி.

"ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகப் பேசி விட்டதாக நினைப்போ? தங்கையைக் கெடுக்கிறாய் என்று, பரம் உன்னை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவார். ஜாக்கிரதை!" என்று மிரட்டினாள்.



"ஓ..! என்ன நடக்கும் என்று உங்களுக்கே தெரியுமா? பின்னே, அனாவசியமாக என்னிடம் ஏன் கேட்டீர்கள்?" என்று கேட்டுவிட்டு, தன் வேலையில் கவனமாகக் கையில் இருந்த பில்லையும், டீபாய் மேல் இருந்த பொருட்களையும் சரி பார்த்தாள் ரதி.

என்ன அலட்சியம். இந்தத் திமிரை அடக்கியே ஆக வேண்டும் என்று சவிதாவுக்கு வேகம் வந்தது. பரமேசன் வந்து ஒரு போடு போடாவிட்டால், இந்த வீட்டில் யாருமே தன்னை மதிக்க மாட்டார்கள் என்ற தோன்றிவிட, அங்கிருந்து உடனே கிளம்பிவிட்டாள்.

அந்த நேரத்தில், பரமேசனைப் பார்ப்பது கடினம் என்பது அவளுக்குத் தெரியும்.

பிடிவாதம் பிடித்து அவனை வரவழைத்தாலும், அந்த எரிச்சலில், அவள் சொல் அவன் மனதில் பதியாது. சமயத்தில், எதிர்மறைப் பயனே விளைந்தாலும் விளையலாம்.

யோசித்துவிட்டு, வழக்கத்துக்குச் சற்று முன்னதாக, அவனது அலுவல் இடத்துக்குச் சென்று காத்திருந்தாள்.

வழக்கத்துக்குமே, சற்றுத் தாமதமாக வேலையை முடித்தவன், அவளிடம் வந்து மன்னிப்புக் கேட்டான். "நாளைக்கு ஒரு லோடு அனுப்பியாக வேண்டும். அதுதான் தாமதம்!" என்று விளக்கம் கொடுத்தான்.

"அதனால் என்ன? பரவாயில்லை!" என்று, மெல்லிதாக முறுவல் செய்தாள் சவிதா.

மனம் இரங்கியபோதும், வேலைப் பளு நினைவில் அழுத்த, "அப்படியானால், நீ ஆட்டோவில் வீட்டுக்குப் போய்

விடுகிறாயா? இப்போது நேரே அப்பா ஃபாக்டரிக்குப் போனால்தான், எனக்கு நேரம் சரியாக இருக்கும்!'' என்று அவன் சொல்லவும், தன்னையறியாமல், ''ஏன் இன்னமும் அப்பா ஃபாக்டரி என்கிறீர்கள்? அது பிள்ளைகளான உங்களது. அதற்காக நீங்கள் உழைக்கிற உழைப்புக்கு, அது நம்மது என்றே சொல்லலாம்!'' என்று வழக்கம் போல ஊசி யேற்றியவள், அவன் சொன்னது முழுமையாக உறைக்க, உடனே திகைத்தாள்.

''பரம்.. நான்... நான் உங்களிடம் சற்றுப் பேச வேண்டுமே. ரொம்ப முக்கியமான விஷயம், பரம்!'' என்றாள் அவசரமாக.

''சாரி. நேரமில்லை!'' என்றான் அவன் சுருக்கமாக.

இந்தச் சில மாதங்களில், பரமேசனது இந்தக் குரல் எதற்கும் இளகாது என்று சவிதா உணர்ந்திருந்தாள். கல்லுளிமங்கத்தனம் என்று மனதுள் ஆத்திரப்பட்ட போதும்.

அதை முகத்தில் காட்டாமல், ''என்னை மெயின்ரோடு வரையிலேனும் அழைத்துச் செல்வீர்கள் அல்லவா?'' என்று கெஞ்சலாக வினவினாள்.

''வா!'' என்று ஒற்றைச் சொல்லாகச் சம்மதம் தெரிவித்தான் பரமேசன்.

உள்ளூரச் சிரித்தபடி, காரில் ஏறி அமர்ந்தாள் அவள். ஐந்தாறு நிமிஷங்கள் ஆகக்கூடும்! ஆனால், அந்த நேரத்தில் அவள் பேசுவதை அவன் கேட்டுத்தானே ஆக வேண்டும்?



கார் நகரத் தொடங்கியபோது, ''பரம், உங்களிடம் இது பற்றிப் பேசக் கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால், பலமுறை யோசித்தும், இதை உங்களிடம் நான் சொல்லாதிருப்பது தப்பு என்றே எனக்குத் தோன்றுகிறது. நாளைக்கு நீ ஏன் சொல்லவில்லை என்று நீங்களே என்னைக் கேட்கக்கூடும் என்பதால், வேறு வழியின்றிச் சொல்லுகிறேன். தப்பாக நினையாதீர்கள்...'' என்ற பீடிகையுடன் தொடங்கிச் சொன்னாள். ''பரம், அந்தப் பெண் ரதியிடம் நீங்கள் எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு எதிராக, அவள் நம் வீட்டினரைத் தூண்டி விட்டுக் கொண்டு இருக்கிறாள். அதனால், பிள்ளைகள் குணமும் மாறி வருகிறது.''

''அப்படி ஒன்றும் எனக்குத் தெரியவில்லை!'' என்றான் அவன் சுருக்கமாக. கூடவே, ''அப்பாவுக்குப் பிறகு வீட்டில் படிந்திருந்த சோகத்திரை விலகிச் சிரிப்புச் சத்தம் கேட்கிற மாதிரி இருக்கிறது. வேறுபாடாக ஒன்றும் இல்லையே!'' என்றான் யோசித்து.

'உங்களுக்கு இருக்கும் வேலை மிகுதியில், உள் விஷயத்தையெல்லாம் கவனிக்க நேரம் ஏது? விரும்பினாலும் முடியாதே. அதனால்தானே, உங்கள் சார்பாக, நான் இதில் ஈடுபடுவது. லோகன், உதி இரண்டு பேரும், இப்போது எப்படி வாயாடுகிறார்கள், தெரியுமா? லோகேசனாவது, ஆண் பிள்ளை! திருத்த முடியாத பிரச்சினையே என்றாலும், எப்படியோ இருக்கட்டும் என்று விட்டு விடலாம். உதயா அடுத்த வீட்டுக்குப் போய் வாழ வேண்டியவள் ஆயிற்றே. அப்படி விட முடியுமா? தாயின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்தவள் ரதி. விருப்பம் போல ஊர் சுற்றுகிறாள். அவள் மாதிரி இவளும் சுற்றலாமா? நல்லதற்குச் சொன்னால் எதில், எதிர்த்துப் பேசுகிறாள்.''

காரை நிறுத்தினான் பரமேசன். ''ஆட்டோ ஸ்டாண்டு வந்து விட்டது. இறங்கிக் கொள்கிறாயா?'' என்றவனை முகத்திலேயே ஓங்கிக் குத்தலாம் போல இருந்தது சவிதாவுக்கு.

பொறுக்கி எடுத்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, உரிய ஏற்ற இறக்கங்களுடன், இந்த ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக அவள் சொன்னது எதுவும் இவன் மண்டையில் ஏறவே இல்லையா?

வேலை வேலை என்று, அதே கவனமாகப் பரமேசன் இருப்பது பிற்காலத்தில் அவளுக்கு வசதியாகவே இருக்கும் என்றாலும், இப்போது நிலைமை வேறாயிற்றே.

அவன் சொல்லுக்குப் பணிவது போல, இறங்குவதற்காக கார் கதவைத் திறந்தபடி, ''உங்கள் தங்கை மேல் உள்ள அக்கறையால்தான் சொன்னேன், பரம்! தப்பில்லையே?'' என்று முகத்தில் சிறு கவலை காட்டி வினவினாள்.

''சேச்சே! தப்பு இல்லை. ஆனால் இது உனக்கு அவசியமற்ற கவலை. உதயாவைப் பொறுத்தவரை, அவளது வளர்ப்பு, வழிகாட்டுவது எல்லாம் அம்மாவின் பொறுப்பு. அதனால், அவளைப் பற்றிக் கவலைப்படாதே... அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இப்போது, நேரமாகிறது. இறங்குகிறாயா? நான் கிளம்ப வேண்டும்.''

இதற்கு மேல் காரில் உட்கார்ந்திருக்க முடியுமா?

இறங்கியபடியே, ''பெரிய துக்கத்தில் சுருண்டு கிடக்கிறார்கள் அத்தை. வேறு எதையும் அவர்களால் எப்படி... சரி, இது பற்றி, நாம் இன்னொரு நாள் பேசுவோம்,'' என்றவாறு ...ா இறங்கிக் கொள்ள, ''ஸீ யூ!'' என்றபடி காரைக் கிளப்பிக் வே...ண்டு பரமேசன் போய்விட்டான்.



63, [Old 25]

ஆத்திரத்துடன் காரின் பின்புறத்தை முறைத்த சவிதா, சட்டென முகத்தைச் சீராக்கிக் கொண்டாள். பக்கக் கண்ணாடி மூலம், அவன் அவளைப் பார்த்து விட்டால்...?

வீணே வம்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது!

## 10

விஷயத்தை அத்தோடு விட்டு விட்டால், அவள் சவிதாவாக இருக்க முடியாது!

எனவே, மறுநாளே இந்தப் பேச்சை மீண்டும் எடுத்தாள் அவள்.

முந்திய நாள், அவள் பெரிதாகச் சொல்ல வந்ததைக் காது கொடுத்துக் கேளாமல், இடையில் இறக்கி விட்டுவிட்ட கழிவிரக்கம் பரமேசனுக்கு.

ஏதோ முக்கியமானதாகத்தானே இருக்கும்! ஆனால், வேலை மிகுதியில் மற்ற எதையும் நினைக்க முடியாத நிலை, அப்போது!

பாவம். எப்போது ஆட்டோ கிடைத்து... எப்போது போனாளோ!

எனவே, மறுநாள் சற்றுச் சீக்கிரமாக வேலையை முடித்து விட்டுக் காத்திருந்தால், அவன் எதிர்பார்த்தது போலவே, சவிதாவும் வந்து சேர, அவளைக் காஃபி டிஃபனுக்கு வெளியே அழைத்துப் போனான்.

அவளும், வேறு பேச்சுப் பேசிப் பொழுதைப் போக்காமல், விஷயத்துக்கு வந்தாள்.

அவள் விஷயமாக நினைத்ததற்கு.

''ஒரு சமயம் யோசித்துப் பார்த்தால், அந்த ரதியிடம் பரிதாபம்தான் வருகிறது, பரம்! அம்மா இல்லாமல் எப்படித்தான் வளர்ந்தாளோ! அன்பு காட்ட, அறிவுரை சொல்ல, தேவைப்படும்போது கண்டிக்க... யாரும் இல்லை என்றால் பாவம்தான்!'' என்று தொடங்கினாள்.

ரதி மீது பரிதாபப்படுவது எப்படி?

பரமேசனுக்கு அது புரியவும் இல்லை. ஏனோ பிடிக்கவும் இல்லை.

''நேற்று ஏதோ உதயா பற்றிப் பேசினாயில்லை? அதுகூட அவசியம் இல்லை என்று சொன்னேன். உன் அக்கா வீட்டில் எல்லோரும் நலமா? உன் அம்மா கடிதம் எழுதினார்களா?'' என்று விசாரித்தான்.

பேச்சை மாற்றுகிறானா?

எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''அவர்களுக்கென்ன? எல்லோரும் நன்றாகத்தான் இருப்பார்கள். இங்கே நம் வீட்டில்தான் எதுவும் சரியில்லை. நன்றாக மாட்டிக் கொள்ளப் போகிறோம் போலத் தோன்றுகிறது!'' என்றாள் அவள் கவலையோடு.

''என்ன? ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''எல்லாம் ரதியால் வந்த விளை. கண்டிக்கும் தாயில்லாததால், கட்டுப்பாடற்று வளர்ந்தவள் அவள். சொல்லாமல் கொள்ளாமல், தினமும் ஊர் சுற்றுகிறாள். அவளோடு சேர்ந்து, உதயாவும் சுற்றத் தொடங்கி இருக்கிறாள்.''

''நம் பக்கத்துப் பழக்க வழக்கங்கள் படிக்க வந்தாள், ரதி. அம்மா அனுமதி இல்லாமல் எங்கும் போக மாட்டாள், சவிதா.



பாரதா வாடகை நூல்நிலையம் 63, பிள்ளையார் கோயில் தெரு, சென்னை

அதேபோல, அம்மாவின் அனுமதி இல்லாமல், உதயாவை அவள் எங்கேயும் அழைத்துப் போவாள் என்றும் எனக்குத் தோன்றவில்லை. இது பற்றி, அம்மாவிடம் நீ கேட்டாயா?''

''கேட்கவில்லை... ஆனால், கேட்டு என்ன பயன்? தூரத்து உறவு என்றாலும், அண்ணன் மகள். அத்தோடு, தாயில்லாப் பெண் என்கிற இரக்கம் வேறு. அவள் தப்பே செய்தாலும், அத்தை அவளைக் காட்டிக் கொடுப்பார்களா, என்ன? அவளை என்ன, யாரையுமே அவர்கள் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். அந்த அளவு, இளகிய மனம் அத்தைக்கு. அந்தப் பரிவுக்கு, அந்த ரதி தகுதியானவள் இல்லையோ என்பதுதான் என் கவலை!'' என்று சோகக் குரலில் முடித்தாள் சவிதா.

வியப்புடன் அவளை உற்றுப் பார்த்தான், பரமேசன். பிறகு, ''உனக்கு, ரதியைப் பிடிக்கவில்லை போலத் தெரிகிறதே,'' என்று அவன் கூறவும், சவிதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பாவி! அவள் சொல்வதையெல்லாம் கேட்டுத் தலையாட்டி விட்டு, ரதியை விரட்டுவதற்கு வழியைத் தேடுவான் என்று பார்த்தால், இப்படிப் பாயிண்ட்டைப் பிடித்து விட்டானே.

உண்மைதான். ரதியை அவளுக்குப் பிடிக்கவில்லைதான். அவள் வந்ததில் இருந்தே, தன் சாம்ராஜ்யம் சரிவது போல உணர்வு சவிதாவுக்கு! அவளது ஓரக்கண் பார்வையாலும், குறிப்பான வார்த்தையாலும் எல்லோரையும் கலங்க அடித்துக் கொண்டிருந்தது மாறி, கிழவி தலைவலி என்று படுக்கப் போய்விடுகிறாள். உதயா எதிர்த்து வாயாடுகிறாள்... அந்தத் தடியன் கண்டு கொள்வதே இல்லை.

இதோ, எதிரில் உட்கார்ந்திருக்கும். இவனும் அவளோடு கலகலப்பாகப் பேசிப் பழகுகிறான். அதன் விளைவு?

வருங்கால மனைவி சொல்வதை அப்படியே ஏற்காமல் யோசிக்கிறான்.

யோசிப்பதோடு நிறுத்தாமல், உண்மையைக் கண்டு பிடித்தும் விட்டானே.

ஆனால், அவனது கண்டுபிடிப்பை ஒத்துக்கொள்ளக் கூடாது என்று முடிவு செய்து, "என்ன நீங்கள் இப்படிச் சொல்லு கிறீர்களே! என்னைப் பற்றி நீங்கள் அறிந்தது இவ்வளவுதானா? ஒருவரது குறைகளைச் சொன்னால், அவரைப் பிடிக்கவில்லை என்று அர்த்தமா? உலகத்தில் குற்றம் குறைகள் இல்லாத மனிதர்களே இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி யானால், யாருக்கும் யாரையுமே பிடிக்காதா? என்ன பேச்சுப் பேசி விட்டீர்கள். அவளைப் பிடிக்காமலா, பாவம்! அஸ்ஸாமில், ஏதோ ஒரு மூலையில் இருக்கும் டீ எஸ்டேட்டில் தனியாக வளர்ந்த பெண்! ஸ்பென்சர் மாதிரிப் பெரிய 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்' எல்லாம் அவள் பார்த்தே இருக்க மாட்டாள். ஒரு ஞாயிறன்று, அவளை அங்கே கூட்டிப் போய்ச் சுற்றிக் காட்டி, ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நான் திட்டம் போட்டுக் கொண்டிருப்பேன்? ஒன்றும் யோசியாமல், என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள், பரம். அவள் உங்கள் சொந்தக்காரி என்கிற ஒன்று போதாதா, அவளை எனக்குப் பிடித்துப் போவதற்கு? இது கூடவா உங்களுக்குத் தெரியாது?" என்று நீளமாகப் பொரிந்து கொட்டி, அவனை மன்னிப்பே கேட்க வைத்தாள் சவிதா.

"அப்படியில்லை, சவிதா. ரதி கொஞ்சம் துடுக்காகப் பேசக் கூடியவள் மாதிரித் தோன்றியது. உன்னிடம் ஏதாவது பேசி, அதனால் வெறுத்து விட்டதோ என்று அப்படி நினைத்து விட்டேன்!" என்று அவளைச் சமாதானப்படுத்தினான் பரமேசன்.



"அதற்கெல்லாம் வெறுப்பதானால், நேற்று உதயா பேசிய விதத்துக்கு அவளை அல்லவா அடியோடு வெறுத்தாக வேண்டும். ஆனால், அப்படி வெறுக்கிறவளா நான்? அதுவும் உங்கள் தங்கை சின்னப் பெண். ஏதோ மாயையில் மயங்கி, சுபாவத்துக்கு விரோதமாக நடந்து கொள்கிறாள். அதனால் கண்டித்துத் திருத்த வேண்டும் என்றுதானே, உங்களிடம் சொல்ல வந்தேன். சும்மா என்றால், எல்லாம் நடக்க வேண்டியபடி நடந்திருந்தால் உங்களிடம் சொல்லியிருக்கவே மாட்டேன். நானே, சொல்லித் திருத்தியிருப்பேன். அதைவிட, அந்த ரதி சொன்னதைக் கேட்ட அவளது துரதிர்ஷ்டம்! சமயம் பார்த்து மாமா இறந்து போனார்."

பரமேசனால் இதை ஒத்துப் பேச முடியவில்லை.

அதைவிட, ரதி அப்படி என்ன சொல்லியிருக்க முடியும் என்று அறியத் தோன்றியது. எனவே, அது பற்றி விசாரித்தான்.

சவிதா, உள்ளூர எக்களிப்போடு விவரித்தாள். தன் பத்தினித்தனம், ரதியின் தான்தோன்றித்தனம், எல்லாவற்றையும் அடிக் கோடிட்டு, அழுத்திச் சொல்ல எவ்வளவு அருமையான வாய்ப்பு.

அந்த ரதியோடு சேர்ந்ததால் இப்போது எதிர்த்துப் பேசும் உதயா, இதே நிலை நீடித்தால் என்ன ஆவாள்? அதைத் தடுக்க ஏதாவது செய்ய வேண்டும் அல்லவா?

ரதி பேச்சை அப்படியே விட்டுவிட்டு, "உதி ஒன்றும் அவ்வளவு இலகுவாக மாறக்கூடியவள் அல்ல, சவிதா! அம்மா கற்றுக் கொடுத்த கொள்கைகளில் இருந்து, அவள் சற்றும் பிறழ மாட்டாள்!" என்றான் பரமேசன்.

''ஆனால், அதுவும் தப்புதானே?'' என்றாள் சவிதா. ''என்னைப் போலக் கணவன் கருத்தைப் பிரதிபலிக்கத் தயாராக இருப்பதுதானே, ஒரு நல்ல பெண்ணுக்குரிய இலக்கணம்?''

இதுவும், பரமேசனின் மனதுக்கு ஒப்புதலாக இல்லை. எனவே, லேசாகப் புருவம் சுழித்து, ''அது சரியில்லை, சவிதா. எனக்காக, உன் விருப்பு வெறுப்புகளை விட்டுவிட வேண்டும் என்று நான் ஒரு நாளும் எதிர்பார்க்க மாட்டேன்!'' என்றான் அவன் அமைதியாக.

அப்படி எதிர்பார்த்தால்தானே, தனக்கு வரப்போகிறவளின் உயர்வு தெரியும்? அதற்கு ஏற்றவாறு அவள் ஒன்று சொல்லும்போது 'உன்னைப் போல உண்டா?' என்று வெண்ணெயாய் உருகத் தோன்றும்? அதை விட்டு இதென்ன பைத்தியக்காரத்தனம்? பைத்தியக்காரத்தனமா... அல்ல...

பரமேசனின் யோசனை போகிற விதம் சரியில்லை என்று தோன்றிவிட, ''பின்னே? அந்த ரதி சொல்லுகிற மாதிரி ஏட்டிக்குப் போட்டியாக, வெட்டு, குத்து என்று சண்டையிட்டுக் காவல் நிலையத்துக்குப் போய்க் கேவலப்படுவதுதான் சரி என்கிறீர்களா?'' என்று நேரடியாகக் கேட்டு அவனை மடக்க முயன்றாள் சவிதா.

இப்போதேனும், ரதி சொன்னது தப்பு என்று ஒத்துக் கொண்டுதானே ஆக வேண்டும் என்பது அவளுக்கு.

ஆனால், ''ரதி சொன்னது அப்படியல்ல, சவிதா. கணவன் என்ன சொன்னாலும் மனைவி ஆமாம் சாமி போடக் கூடாது. தன் அபிப்பிராயத்தையும் சொல்லி, அவனுக்கும் புரிய வைக்க வேண்டும் என்பதுதான். சும்மா தப்பாக எண்ணி விட்டாய்!'' என்று பரமேசன் விளக்கவும், சவிதா கொதித்துப் போனாள்.



அதுவும், ரதி பயன்படுத்திய அதே 'போரடித்து விடும்' என்ற வார்த்தையை அவனும் பயன்படுத்தியதுதான் அவளுக்குப் பொறுக்கவே முடியாது போயிற்று.

''என்னது? நான், நா....ன் தப்பாக எண்ணினேனா? இருந்திருந்து நீங்கள் என்னைத் தப்பு சொல்லி அவள் பக்கம் பேசுவதா? ஐயோ, கடவுளே! இதைக் கேட்க நான் பாவம் பண்ணியிருக்க வேண்டும்!'' என்று புலம்பத் தொடங்கி விட்டாள்.

கண்களில் நீர்த் திரை வேறு.

பரமேசன் மிரண்டு போனான்.

இந்தப் பொது இடத்தில், இவள் அழுது புலம்புவதை யாராவது பார்த்தால், அவனைப் பற்றி என்ன எண்ணுவார்கள்?

அவசரமாக மேஜை மேல் இருந்த அவளது கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, ''ஷ், என்ன இது, சவிதா? அழாதே. ஒரு சாதாரண உண்மையைச் சொல்லுவதற்குள், நீ என்னைத் தவறாக எடுத்துக் கொண்டாயே. நானாவது அவள் பக்கம் பேசுவதாவது? மிஞ்சிமிஞ்சி இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் இருக்கப் போகிறாள். அதுவரை, ஏதோ பொறுத்துப் போய் விடேன்!'' என்றான் சமாதானமாக.

அதுவும், சவிதாவுக்குப் பிடித்தமாக இல்லை.

பொறுத்துப் போய்விடு என்றால், என்னவோ, அவள்தான் ஆத்திரமும் வெறுப்புமாகப் பொறுமையற்றுக் கொதித்துக் கொண்டிருக்கிற மாதிரியும், தகராறு வேண்டாம் என்று அவன் எடுத்துச் சொல்கிற மாதிரியும் அல்லவா தோன்றுகிறது.

இந்த மாதிரி மனப் போக்கு அவனுக்கு இருப்பது சரியில்லையே.

"என்ன பரம், பொறுத்துப் போய்விடு என்று என்னிடம் சொல்லுகிறீர்கள்? பொறுத்துப் போவதற்கு, முதலில் கோபப் பட வேண்டாமா? நான் என்றைக்காவது, யாரிடமாவது கோபப்பட்டிருக்கிறேனா? என்னிடம் எந்தவிதத் தப்பும் இல்லாததால், அடுத்தவரிடம் தப்பைக் கண்டால் திருத்தி உதவி செய்யத்தான் எனக்குத் தோன்றும். இப்போது, ரதி விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அவளுக்கு ஊர் சுற்ற ஆசை. தெரியாத ஊரில், அவள் தனியே போய் மாட்டிக் கொள்வாளோ என்கிற கவலைதானே எனக்கு? பதிலாக, நானே அவளை அவ்வப்போது வெளியே அழைத்துப் போய் விடலாமே என்றுதான் யோசித்துத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறேன்."

பரமேசன் சற்றே குழம்பினான்.

சவிதா நல்லவள்தான். மூத்த மருமகள் ஆகப் போகிறோம் என்பதால், எல்லாப் பொறுப்பும் தன்னதே என்று எண்ணுகிறாள்.

ரதியும் நல்லவளே. ஆனால், தாயின் கட்டுப்பாடு இல்லாது சுதந்திரமாக வளர்ந்த பெண்.

இருவருக்கும் ஒத்துப் போகாவிட்டால்?

சவிதாவுக்கு ரதியைப் பிடிக்கவில்லையோ என்று முதலில் எழுந்த சந்தேகம் நினைவு வர, "ஸ்பென்சருக்குப் போக வேண்டும் என்றுதானே சொன்னாய்? அங்கே என் நண்பன் ஒருவன் ஆண்களுக்கு ரெடிமேட் உடைகள் கடை ஒன்று வைத்திருக்கிறான். கடையைத் திறந்ததில் இருந்து கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறான். நானும் உங்களோடு வந்தால், அம்மாவுக்கும் சந்தோஷமாக இருக்கும். சேர்ந்தே போகலாம்!" என்றான் அவன்.



சவிதாவுக்கு, இந்த ஐடியா ஒரு வகையில் பிடிக்கவில்லை. ஒரு விதமாகப் பிடித்தது.

தானாக வரச் சொல்லாமல், அந்தப் பெண் ரதியை அழைத்துப் போகும் இடத்துக்குப் பரமேசன், அவனாக வருவதாகச் சொன்னது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அதே சமயம், அவனும் கூட வந்தால், முழுச் செலவையும் அவனே பார்த்துக் கொள்வான். ரதிக்கு வாங்கிக் கொடுக்கிற சாக்கில், தனக்கும் கொஞ்சம் சுருட்டலாம். இத்தனைக்கும் மேலாகக் கூடவே இருந்து, ரதியின் குறைபாடுகளை இவனுக்கு நன்றாக எடுத்துக் காட்டலாம்.

லாபங்கள் நிறைய இருப்பதாகத் தோன்றவே, அவளும் தலையாட்டி, "ரதி எப்படி நடந்து கொள்வாளோ, என்னவோ? சில மணி நேரம் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிற பாக்கியம் கிடைக்கிறதே. அதற்காகவே எந்தக் கஷ்டத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்!" என்று ஒரு மயக்கப் புன்முறுவல் செய்தாள்.

இந்த மாதிரிப் புன்னகை புரியும்போது சவிதாவின் முகம் பார்க்க நன்றாக இல்லை என்று பரமேசனுக்குத் தோன்றியது.

## 11

பரமேசனும் கலந்து கொள்வதாக இருந்ததால், அவனுக்கு வசதியாக, ஒரு ஞாயிற்றுக்கிழமையில் எல்லோருமாக, நகரின் ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்சான ஸ்பென்சருக்குப் போவதாக முடிவாயிற்று.

சவிதாவின் திட்டம் என்றறிந்ததும், வேறு வேலை இருப்பதாக லோகேசன் கழன்று கொண்டான். உதயா தயங்கிவிட்டு, ரதி போகிறாள் என்றதும் ஒத்துக் கொண்டாள்.

ரொம்ப நேரம் நடக்க முடியாததால், அன்ன பூரணி போகவில்லை என்றானது.

ரதி மட்டும்தான், அழைத்த வுடனேயே முக மலர்ச்சியுடன் வருவதாகச் சொல்லி நன்றியும் தெரிவித்தாள். "உங்களது யோசனையாமே சவிதா, ரொம்ப சந்தோஷம்!" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

இதில் குற்றம் கண்டுபிடிக்க, சொல்ல ஒன்றுமில்லை.

எனவே, "என்னவோ தொடக்கம் நல்லபடியாக இருக்கிறது. கடைசி வரை இப்படியே இருக்க வேண்டுமே என்று கவலையாக இருக்கிறது!" என்று ஒரு பெரிய கல்யாணத்தைப் பொறுப்பேற்று நடத்துகிற பாவனையில் சொன்னாள் சவிதா.

"இல்லாமல் போவானேன்?" என்று விலகிப் போனான் பரமேசன்.

அந்த ஞாயிறு வருமுன் இரண்டு விஷயங்கள் நடந்தன.

அன்று சுமார் பன்னிரண்டு மணியளவில் வெளியே செல்வதற்குத் தயாராகக் கீழே இறங்கி வந்த லோகேசனைப் பார்த்து, "நீ என்ன செய்கிறாய், லோகேஷ்?" என்று ரதி வினவினாள். "மாடியிலிருந்து இறங்கி வருகிறேன், வெளியே போகிறேன் என்கிற மாதிரி உளறல் எல்லாம் வேண்டாம்."

உதட்டைப் பிதுக்கிவிட்டு, "கம்ப்யூட்டர் பயிற்சி!" என்றான் அவன்.

"அது பகுதி நேரப் பயிற்சிதானே! மற்ற சமயம்?"



"சினிமா, வீடியோ கேம், நண்பர்கள், பொழுது போக விஷயமா இல்லை?"

"போக்குவதற்குப் பொழுது இருந்தால், அதை உருப்படியாகப் போக்குவதற்கு என்ன?"

"உருப்படியாக என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? மண்வெட்டியை எடுத்து, பாத்தி கட்டிச் செடிக்கு நீர் பாய்ச்சவா? அல்லது மிக்சியைத் தூர எறிந்துவிட்டு 'எம் குலப் பெண்டிருக்கு மஞ்சளரைத்துக் கொடுக்கவா?" என்று வசனம் பேசினான் அவன்.

"இரண்டும் செய்யத்தான் தோட்டக்காரனும், சமையல் காரம்மாவும் இருக்கிறார்களே, அவர்கள் பிழைப்பில் நீ மண்ணைப் போடுவானேன்?"

"அதனால்தான், மாமன் மகளே! யாம் இந்த மாதிரியாகப் பொழுதை நெட்டித் தள்ளுவது? வரட்டுமா?" என்று வாயிற்புறம் திரும்பினான் லோகேசன்.

"அதாவது, வேண்டாத வேலை ஏதாவது செய்வாயே தவிர, வீட்டு மனிதனின் பொறுப்போடு ஒன்றும் செய்ய மாட்டாய். அப்படியா?"

திரும்பி வந்து, ரதியை உற்றுப் பார்த்தான் லோகேசன். "இன்று உனக்கு வேறு வேலை ஒன்றும் இல்லையா? என்னைப் பிடித்துக் கடிக்கிறாய். சொல்லு, என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"யோசி லோகன். உன் அண்ணன் தன் தொழிலோடு உங்கள் அப்பாவினதையும் சேர்த்துப் பார்த்துவிட்டு, இரவு எட்டு மணி, ஒன்பது, பத்து என்று களைத்துப் போய் வருகிறாரே. அவருக்கு

உதவ வேண்டிய வயது, உனக்கு ஆகவில்லையா? அதைச் செய்யாததால்தானே உன்னை அவர் பொறுப்பற்றவனாக எண்ணுவது? அந்த எண்ணத்தை மாற்ற முயற்சி செய்ய வேண்டாமா?'' என்று எடுத்துரைத்தாள் ரதி.

''ஐயோ, பார்த்தாலே விழுந்து கடிக்கிறான். வேலையில் வேறு தலையிட்டால் அவ்வளவுதான். கொன்றே போடுவான். முதலில் தொழிலில் என்னை உள்ளேயே விட மாட்டான். ரதி! புரியாமல் பேசாதே!'' என்று நழுவ முயன்றான் லோகேசன்.

''உள்ளே விடுகிறாரா, இல்லையா என்பது பரமேஷைக் கேட்டால் தெரிந்து விடுகிறது. அத்தோடு தொழில் உன் அப்பாவுடையது. உனக்கும் உரிமை உண்டுதானே! அவரிடம் என்ன கேட்பது? உனக்கு வேலை செய்யச் சோம்பேறித்தனம். முதலில் அதை ஒத்துக்கொள்!'' என்றாள், ரதி - சவால் விடுவது போல்.

ரோஷமாக, ''நான் ஒன்றும்...'' என்று தொடங்கிய லோகேசன், வாயிற்புறமாகச் சத்தம் கேட்கவே, எட்டிப் பார்த்தான்.

''அடப் பரவாயில்லையே. நீ வீட்டில் இருக்கிறாயா, லோகன்? போய் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்துவிடு. அப்புறம்... ரதி! ஞாயிறன்று காலையில் ஒன்பது மணிக்கே கிளம்பி விடலாம் என்று நானும், பரமும் முடிவு செய்தோம். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். ஒன்பது மணிக்குள், விழித்துக் கிளம்பி விடுவாய் அல்லவா? நாங்கள் எல்லோரும் என்றால் அம்மா எழுப்பிவிட்டு, காலையில் விழித்து எழும் பழக்கம் உள்ளவர்கள். உனக்கு அந்தப் பாக்கியம் இல்லையல்லவா...'' என்று சவிதா பேசிக் கொண்டே



போக, குற்றம் சாட்டும் பார்வையுடன் ரதியை நோக்கிவிட்டுப் பர்சை எடுத்தபடி லோகேசன் வெளியே சென்றான்.

அவள் அவனை நிறுத்தி வைத்துப் பேசியதால்தான் சவிதாவுக்கு ஆட்டோ செலவு கொடுக்கும்படி ஆயிற்றாம்.

கொடுக்கட்டும், கொடுக்கட்டும். ஆனால் இவர்கள் பேச்சில் எவ்வளவு சவிதா காதில் விழுந்திருக்கும்?

என்ன விழுந்திருந்தாலும் அதில் யாரையும் கெடுத்துப் பேசவில்லையே, பிறகென்ன என்று ரதி அலட்சியமாக நினைத்ததோடு சரி.

ஆனால் சவிதா மூட்டை கட்டிக் கொண்டு பரமேசனிடம் சென்றாள்.

''இந்த ரதிக்கு ஏன் இந்தக் கெட்ட புத்தி என்று வருத்தமாக இருக்கிறது, பரம். லோகனை உங்களுக்கு எதிராகக் கிளப்பி விடுகிறாள். ஈசன் மெட்டல்ஸ் உங்கள் அப்பாவுடையதாம். அதன் வருமானத்தில் லோகனுக்கும் பங்கு உண்டாம். உரிமை கேட்டுப் போ என்கிறாள். அவனும் வரப் போகிறான். ஆனால் அவனை உள்ளே விட்டு விடாதீர்கள். அப்புறம் பைசாகூட மிஞ்சாது. அவனது ஊதாரித்தனம் உங்களுக்கே தெரியும்!'' என்று எச்சரித்தாள்.

அவள் சொன்னது சரி என்றுதான் பரமேசனுக்கும் தோன்றியது. கைச்செலவுக்கு என்று, தாராளமாகக் கொடுப்பதைக்கூட ஓர் ஆட்டோவுக்குக் கொடுக்க நாற்பது ரூபாய் இல்லாமல், பாதி மாதத்திலேயே காலி பண்ணி விடுகிறவன்தானே!

ஃபாக்டரி பணத்தில் கையை வைத்தால், அது அம்பேலாகி விடும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்தான்.

அன்றிரவு பரமேசன் வீடு திரும்பக் கிட்டத்தட்ட பதினோரு மணியாகி விட்டது.

ரதியின் உசுப்பல் காரணமாக, அன்று லோகேசனுக்குத் தூக்கம் சரியாக வரவில்லை.

உருண்டு புரண்டவன், கார் நிற்கும் ஓசை கேட்டு எழுந்து சென்று, கதவு மறைவில் நின்று கவனித்தான்.

பரமேசனேதான். இவ்வளவு நேரமா உழைக்கிறான்?

அண்ணன் மீது பரிவு பெருக்கெடுத்தோட, மறுநாள் அவனிடம் சென்று, "அண்ணா, இனி வேலையில் உனக்கு உதவி செய்வது என்று முடிவு செய்து விட்டேன். அதனால் இன்றிலிருந்து ஈசன் மெட்டல்சுக்கு நானும் வரட்டுமா?" என்று ஆவலோடு கேட்டான்.

அண்ணன் மறுக்கக் கூடும் என்று, லோகேசன் சிறிதும் எண்ணவில்லை. வேலை மிகுதியில் மூச்சு முட்டிப் போயிருக்கும் பரமேசன் இரு கை நீட்டி மகிழ்ச்சியோடு வரவேற்பான் என்ற இனிய கற்பனை வேறு.

ஆனால் முகம் கடுக்க, "ஏன்? அங்கே பாலாறும் தேனாறும் ஓடுகிறது. ஆசை தீர அள்ளிக் குடிக்கலாம் என்றா? ஈசனில் நீ நினைக்கிற மாதிரிப் பணம் ஒன்றும் கொட்டிக் கிடக்கவில்லை. பை நிறைய அள்ளிக் கொண்டு போய் ஊதுவதற்கு!" என்று பரமேசன் கடுமையான குரலில் கூறவும், அவன் முகம் வாடி விட்டது.

"இதற்காகத்தான் ஒதுங்கியே இருந்தேன். முகத்தில் அடித்தாற்போல் ஏதாவது சொல்லுவாய் என்று, எனக்கு நன்றாகவே தெரியும். என்னவோ நீ களைத்துப் போவதாகச் சொல்லி, உனக்கு உதவ வேண்டும் என்று ரதி சொன்னாளே என்று வந்து கேட்டதற்கு நல்ல வெகுமதி!" என்று முணுமுணுப்பாய் வெடுவெடுத்தபடி, அறையை விட்டு வெளியே செல்லத் திரும்பினான் லோகேசன்.



தம்பி அறை வாயிலை அடையும்போது, "சற்று நில்!" என்றான் அண்ணன். "மெய்யாகவே உதவி புரியும் எண்ணத்தில்தான் கேட்டாயா?" என்று சிறு சந்தேகத்துடன் வினவினான்.

"பின்னே? ரதி நேற்று ரொம்பவும் சொன்னாள். நீ வேறு இரவு பதினோரு மணிக்கு வந்தாயா? இவ்வளவு உழைக்கிறாய் என்று எங்கிருந்தோ வந்த ரதிக்குத் தெரிகிறது. நமக்குத் தெரியவில்லையே என்று கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. அதனால்தான் கேட்க வந்தேன். ஆனால் இனி ஜென்மத்துக்கும் வாயே திறக்க மாட்டேன்."

"அப்படியெல்லாம் சொல்லாதே!" என்றான் அண்ணன். "மெய்யாகவே உதவுவது என்றால், செய்வதற்கு நிறைய வேலை இருக்கிறது. ஆனால் ஒன்று, 'ஈச'னின் இன்றைய நிதி, அம்மா, உதி யாருக்கும் தெரியவே கூடாது. அழுது கரைந்து போவார்கள்!" என்று பலமாக எச்சரித்தான். "ஒன்பதரைக்குத் தயாராக இரு. இருவருமாகப் போகலாம்!" என்று ஒருவாறு சம்மதித்தான்.

அப்போதுகூட, லோகேசன் பெரிதாகக் கவலைப் பட்டு விடவில்லை.

ஆனால், தந்தையின் நிறுவனத்துக்கு அவன் சென்றது, மாத ஊதியத்தைக் கணக்கிட்டு, எல்லோருக்கும் கொடுப்பதற்குத் தயாராக வைக்க வேண்டிய நாள்.

கணக்கு வழக்குகளைப் பார்க்கத் தொடங்கியபோது, லோகேசன் மிரண்டு போனான். ''என்னண்ணா, தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் சம்பளம் கொடுக்கவே பணம் துண்டு விழுகிறது. இதை எப்படிச் சமாளிப்பது? யாருக்கும் சம்பளத்தையும் நிறுத்த முடியாதே. என்ன செய்வது?'' என்று பதறினான்.

''ஷ்... சத்தம். பணத்துக்குச் சங்கடம் என்று வெளியே தெரிந்தால், திருடவும் ஓடவும் பலர் தயாராகி விடுவார்கள். அதனால், கவனித்துப் பேசு!'' என்று எச்சரித்தான் பரமேசன்.

''ஆ... ஆனால், இப்போது பணத்துக்கு என்ன செய்வது? என் பைக்கை வேண்டுமானால், பாதி விலை கிடைத்தாலும் விற்று விடலாமா? துண்டு விழும் தொகை, கிட்டத்தட்ட அவ்வளவுதானே?'' என்று ரகசியமாகக் கேட்டான் தம்பி.

லேசாக முறுவலித்து, ''அதற்கெல்லாம் அவசியம் இல்லையடா. 'ஓடி' வாங்கி வரச் சொல்லி ஜிஎம்மை பாங்குக்கு அனுப்பியிருக்கிறேன். வாங்கி வந்து விடுவார்...'' என்றவனை இடையிட்டு, ''ஆனால் ஓடி என்றால் கடன் தானே! அப்புறம், அந்தப் பணத்தையும் கட்ட வேண்டும் அல்லவா? அதற்குப் பணம்?'' என்று கவலைப்பட்டான் சின்னவன்.

''அதெல்லாம் அவ்வப்போது வசூலாவதில் கட்டிச் சமாளித்துக் கொள்ளலாம்...'' என்று பரமேசன் சொன்னபோது, மீண்டும் குறுக்கிட்டான் அவன் தம்பி.

''ஐயோ... இங்கே இவ்வளவு குறைவாகப் பணம் இருக்கும்போது வீட்டுச் செலவுக்கு... எங்களுக்குக் கைச்



செலவுக்கு என்று எவ்வளவு கொடுக்கிறாய்! அதுவே குறைச்சல் என்று நான்... அண்ணா... இனிமேல் எனக்குப் பாக்கெட் மணியே வேண்டாம். பெட்ரோலுக்கு மட்டும் கொடு, போதும்!'' என்று லோகேசன் கூறவும், பெரியவன் சிரித்தான்.

''நாம் இன்னும் அந்த நிலைக்குப் போய்விடவில்லையடா. சமாளித்து விடலாம். இப்போதுதான் இங்கேயே இருந்து கவனித்துக் கொள்ள நீ வந்து விட்டாயே. உடையவன் கூடவே இருந்தால், எல்லோருக்குமே வேலையிலும் வேகம் வரும்.''

''அண்ணா... எனக்கும் ஒன்றும் சரியாகத் தெரியாதே. அப்பாவோடு அவ்வப்போது வரும்போது சும்மா ஒரு பார்வை பார்த்திருக்கிறேன். என்றாலும் தெளிவாகத் தெரியாதே. ஏதாவது தப்பு செய்து விட்டால்? உள்ளதும் கெட்டு விடாதா?''

தம்பியைச் சற்றுக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''என்னடா ஏண்டா வந்தோம் என்று இருக்கிறதா? என்னவோ, ரதி சொல்லி உதவ வந்தேன் என்றாய். இப்போது பின் வாங்கப் போகிறாயா?'' என்றான் பரமேசன், சற்று ஏளனமாக.

''அதெல்லாம்...'' என்று தொடங்கிவிட்டு, ''ஏண்ணா என்னைத் தப்பாகவே நினைக்கிறாய்? நீ இப்படிப் பேசும்போதுதான் உன்னிடம் பேசக்கூட எனக்குத் தயக்கமாகி விடுகிறது!'' என்றான் தம்பி.

''பின்னே, கெட்டு விடும் அது இதென்று நீதானே இழுத்தாய்?''

''என் கவலையையும் பயத்தையும் நான் சொல்லவே கூடாதா? எனக்குப் பயம். சும்மாவே, தொழில் ஆடிக் கொண்டிருக்கிறதே, நம்மால் படுத்து விடக்கூடாதே என்று பெரிய கலக்கம். தேற்றித் தைரியம் சொல்லுவாய் என்று பார்த்தால், என்னென்னவோ சொல்லுகிறாயே!''

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, ''சாரிம்மா!'' என்றான் பரமேசன். ''ரதியிடம் பெரிதாக வீரியம் பேசி வந்துவிட்டு இங்கே பிரச்சினை என்றதும் பின்னடிக்கிறாயோ என்று எண்ணி விட்டேன்!'' என்றான் மன்னிப்புக் கோரும் குரலில்.

தொடர்ந்து, ''தினமும் நான் கொஞ்ச நேரம் வந்து இந்த நிர்வாகம் கற்றுத் தருகிறேன். பொது நிர்வாகியும் பழைய ஆள். நம்பிக்கையானவர். யார் யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று அவரும் சொல்லுவார். அப்புறம் உன் விருப்பம்!'' என்றான் பரமேசன்.

''செய்கிறேன்!'' என்றாள் இளவல்.

அன்று மட்டும் அரை நாள் கூடவே இருந்து கற்றுக் கொடுத்த பரமேசன் சந்தோஷமான மனநிலையில் தன் ஃபாக்டரிக்குப் போனான்.

அதே மன நிலையை மாலையில் வந்த சவிதாவோடு கலந்து கொள்ள அவன் முயன்றபோது அவனுக்கு ஏமாற்றந்தான் மிஞ்சியது.

ஒரேயடியாக லோகேசன் வேஷம் போடுகிறான். நடிக்கிறான். பரமேசனின் முதுகிலேயே குத்தப் போகிறான் என்றாள் அவள். ''மாமா ஆசையாத் தொடங்கி வளர்த்த தொழில். அதை அவன் அழித்துவிடப் போகிறானே என்று கவலையாக இருக்கிறது. அவன் குணம்தான் உங்களுக்கே



தெரியுமே!'' என்று மென் குரலில் வருத்தத்துடன் எடுத்துரைத்தாள் அவள்.

அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு, ''நீ ஏன் எப்போதும் லோகேசனை நான் தப்பாக எண்ணும்படியாகவே பேசுகிறாய்?'' என்று நேரடியாகக் கேட்டான் பரமேசன்.

அந்தக் கேள்வியில் சவிதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

## 12

பரமேசனின் கேள்வியில், சவிதா ரொம்பவே திகைத்துப் போனாள்.

அவள் செய்து வந்ததைத்தான் அவன் கேட்டான்.

ஆனால் அவனுக்கே தெரியாமல் செய்து கொண்டிருப்பதாக அவள் எண்ணிக் கொண்டிருந்ததைப் பரமேசன் கண்டு பிடித்துக் கேட்டதுதான் அவளைத் திணற வைத்து விட்டது.

சவிதாவைப் பொறுத்தவரையில், அவளது வீடு அவ்வளவு சந்தோஷமான இடம் அல்ல. அவளுடைய தந்தை நன்றாய்ச் சம்பாதித்த போதும், அவளுடைய தாய் திருப்தியோடு இருந்தது இல்லை. வருமானம் குறைந்த பிறகோ, வீடு நரகம்தான்.

அதற்குள்ளும் அவள் ஒரு நிலைக்குத் தயாரான போது தான், அவளுடைய தந்தை, சுந்தரலிங்கத்தைச் சந்திக்க நேர்ந்தது.

தான் நிறையச் சம்பாதிக்காததற்குப் பிராயச்சித்தமாக, மகள் பணக்காரியாவதற்கு அவர் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

வளமான ஒரு குடும்பத்தின் மருமகளாகும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது.

பரமேசனின் சொந்தத் தொழில், சுந்தரலிங்கத்தின் தொழில்.

இதில் எதையும் பங்கு போடவே அவளுக்கு மனமில்லை.

பிரித்துக் கொடுக்கப் பெரியவர் இல்லாத நிலை.

லோகேசனை உள்ளே விட்டால் அவன் பாதிப் பங்குக்கு வந்து விடுவான். எனவே அதைத் தடுப்பதற்காகவே, அவனை ஓர் உதவாக்கரையாக, ஊதாரியாகப் பரமேசனுக்குக் காட்ட முற்பட்டாள்.

ஒரு சிறு தொகையுடன் லோகேசனை விரட்டிவிட்டால், மொத்தமும் அல்லவா அவள் கைக்கு வந்து சேரும்? பரமேசனுக்கு அதிக வேலைதான். ஆனால் பிற்பாடு அவளது திட்டத்துக்கும் அதுதானே வசதி?

உதயாவுக்கும் கூட அவள் ஒரு திட்டம் வைத்திருந்தாள். அதன் முதல் படியாகப் பரமேசனிடமிருந்து அவளையும் ஒதுக்கிக் கொண்டிருந்தாள்.

வெற்றி பெற்று விட்டோம் என்று அவள் இறுமாந்த நேரத்தில், இந்த ரதி வந்து எல்லாவற்றையும் ஆட்டம் காண வைத்து விட்டாளே, பாதகி. இந்த லோகேசன் பொறுப்போடு நடந்தாக வேண்டும் என்று இங்கே யார் அழுதார்கள்?



இதெல்லாம் ஒரு மண்ணும் புரியாமல், இவன் வேறு பீற்ற வந்துவிட்டான்.

கூடச் சேர்ந்து, ஆமாம், ஆமாம் என்றிருக்க வேண்டுமோ? இப்போது அவளையே சந்தேகக் கண்ணோடு பார்க்கிறானே. இதே போலப் பரமேசன் எல்லாவற்றையும் ஆராயத் தொடங்கினால், இன்னும் கழுத்தில் தாலி ஏறாத நிலையில் அவளுக்கல்லவா ஆபத்து?

முதலில் இந்த ஐயப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்புறம் இருக்கவே இருக்கிறது கைவந்த கலை, தேன்பூசி விஷம் ஏற்றுவது.

ரதி என்ன, என்றைக்குமா இங்கேயே இருந்து கெடுத்துக் கொண்டிருப்பாள்?

வினாடியில் கலகலவென்று கண்ணீருகுத்து விட்டாள் சவிதா. "என்ன பரம், என்னைப் போய் இப்படி நினைத்து விட்டீர்கள்? இவர்தான் உன் வருங்காலக் கணவர் என்று என் அப்பா சொன்ன வினாடியில் இருந்து, உங்கள் நன்மையை மட்டும் பெரிதாகக் கருதி வந்திருக்கும் என்னைப் போய் எப்படி இப்படி எண்ணினீர்கள்? கூடப் பிறந்த தம்பி, உங்களுக்குச் சரியில்லையே என்று எத்தனை நாள் தூங்காமல் கவலைப் பட்டிருக்கிறேன்; தெரியுமா? உங்கள் கவலைகள், அதிகப்படி வேலை எல்லாம் நினைத்து, எவ்வளவு அழுதிருப்பேன்! கூட இருந்து உங்களுக்குப் பணி புரிந்து உங்கள் சுமையைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே என்று நான் படும் வேதனை கொஞ்சமா நஞ்சமா? லோகன் நல்லபடியாக மாறி உங்களுக்குப் பளு குறைந்தால் அதில் என்னைவிட மகிழ்ச்சி அடைகிறவர் யார் இருக்க முடியும்?

''ஆனால், இவ்வளவு நாள் பார்த்த அளவில், அவன் அப்படி இல்லையே. சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வது இல்லை என்று பழமொழி வேறு இருக்கிறதே என்று உங்களை எச்சரித்தேன். எனக்கு ரொம்ப முக்கியம் நீங்கள் தானே?

''இப்போது ஏமாந்து பிறகு உங்களுக்கு அதிக வருத்தப் படும்படி ஆகி விடக் கூடாதே என்கிற கவலை. அதற்காகக் கவனப்படுத்தினால் அதற்கு என்னையே தப்பாக எண்ணுவதா? நல்லதற்குக் காலமில்லை என்பது மெய்தான் போல. நீங்களே என்னைத் தவறாக நினைத்த பிறகு, இந்த உலகத்தில் எனக்கு என்ன இருக்கிறது?'' என்று புலம்பிக் கொட்டினாள்.

இந்தப் புலம்பலோடு கண்ணீரும் அருவியாய்க் கொட்ட வும், நமக்காகப் பார்க்கிறாள் பாவம் என்று, பரமேசன் இளகிப் போனான்.

''அப்படியில்லை, சவிதா. லோகேசனை நீ தப்பாகவே எண்ணுகிறாயே என்று எனக்கு வருத்தம் என்று நினைக்கிறேன். என்ன இருந்தாலும் அவன் என் தம்பி. அவனை நீ மதிக்க வேண்டும் என்று எனக்கு இராதா? அதைத்தான் சொல்ல வந்தேன்,'' என்று ஏதோ சொல்லி அவளைச் சமாதானம் செய்து சமாளித்தான்.

இந்தப் பிரச்சினைக்குக் காரணம் தம்பியும்தான் என்று பரமேசனுக்குத் தோன்றியது. எனவே லோகேசனிடம், ''சவிதாவும் நீயும் இந்த வீட்டில் ஒத்துவாழ வேண்டியவர்கள். அவளைக் கண்டால் ஆளே மறைந்து போவதை விட்டு அவளுக்கு நம்பிக்கை வரும் விதமாக அவளோடு அன்பாகப் பேசிப் பழகேன்!'' என்றான் அவன்.



இரவு உணவின்போது நடந்த பேச்சு இது.

தட்டில் கொஞ்சம் சன்னாவை எடுத்து வைத்தபடி பரமேசன் சொல்ல, அவன் கண்ணில் படாது என்ற எண்ணத்தில் 'நடக்கிற காரியமா?' என்பது போல் லோகேசன் ரதியைப் பார்த்துத் தோளைக் குலுக்கினான்.

சும்மாயிரு என்பது போல ரதி லேசாகத் தலையசைக்க, இந்தப் பார்வைப் பரிமாற்றத்தைக் கண்டு விட்ட பரமேசனின் முகம் கடுத்தது.

அதே கடுப்புடன் உடனே எதையும் சொல்ல வழியின்றி, சூடான சப்பாத்தியோடு அன்ன பூரணி வந்து கொண் டிருக்கவும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று பேசா திருந்தான் அவன்.

ஆனால் பிறகும் இருவரையும் சேர்த்து வைத்துப் பேச முடியாமல், ரதியும் உதயாவும் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டனர்.

லோகேசனுக்குத் தொழில் தொடர்பாகப் பேச வேண்டி யிருந்தது.

வரட்டும். எத்தனை நாள் ஒளிய முடியும்? ஒரு நாள், மூவரையும் ஒன்றாகப் பிடித்து நன்றாக டோஸ் விட வேண்டும் என்று எண்ணினான் பரமேசன்.

தொடர்ந்து இரு தினங்கள் இப்படியே சென்றபின், மூன்றாம் நாள் இளம் பெண்கள் இருவருமாக, ஓர் அழகிய டப்பாவைக் கொணர்ந்து, அவனிடம் கொடுத்தனர்.

திறந்து பார்த்தால், எழிலாய் ஒரு செய் நீருற்று.

''யாரோ வாடிக்கையாளருக்குக் கொடுக்க வேண்டும் என்கிறீர்களே, பரமேஷ். இப்போது உதயாவும் இதைச் செய்யக் கற்றுக் கொண்டு விட்டாள். இன்னும் கூட வேண்டு மானாலும் செய்து கொள்ளலாம்!'' என்று புன்னகை செய்தாள் ரதி.

''ஆமாண்ணா. செய்யவும் தெரியும். என்னென்ன சாமான்கள், எப்படி வாங்க வேண்டும் என்றும் தெரியும். ரதியும் நானும் எப்படிச் சுற்றியலைந்து வாங்கினோம் தெரியுமா?'' என்றாள் உதயா. ''தொடர்ந்து செய்வதற்காக, எல்லாம் நிறையவே வாங்கி வைத்து விட்டோம்.''

ஆக, இதற்குத்தான் இரு பெண்களும் அலைந்து திரிந் திருக்கிறார்கள். வெறுமனே ஊர் சுற்றவில்லை.

மேலே எதையும் துருவிக் கேட்கவே பரமேசனுக்குப் பயமாக இருந்தது. இது போலக் கள்ளங் கபடற்ற விளக்கங்கள் வருமானால், அவன் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்ள முடியும்? நல்ல வேளையாக இரண்டு நாட்களாக நின்று பேச முடியாது போயிற்று.

''நிறைய என்றால், செலவும் நிறைய ஆகியிருக்குமே. பாக்கெட் மணி எல்லாம் காலியா? எவ்வளவு ஆயிற்று?'' என்று பர்சை எடுத்தான் அவன்.

உதயா, ரதியைப் பார்த்து விழிக்க, ''பர்சை உள்ளே வையுங்கள், பரமேஷ், என்னிடம் கிரெடிட் கார்டு இருக்கிறது. பாங்க் கணக்கும் இருக்கிறது!'' என்றாள் ரதி.

''என் தங்கைக்கு நீ எதற்காக...'' என்று தொடங்கியவன் பேச்சில் குறுக்கிட்டு, ''இனி என் வீட்டில் நீ என்ன தங்குவது என்றும் கேட்பீர்கள் போல!'' என்றாள், ரதி - கிண்டலாக.



பதில் சொல்ல முடியாமல் சற்றுத் திணறிவிட்டு, ''அதில்லை. உனக்கே எத்தனையோ செலவுகள் இருக்கும். இது வேறு எதற்கு என்றுதான்...'' என்று காரணம் சொன்னான் பரமேசன்.

''உண்மைதான். எனக்கு என்னென்ன செலவுகள் என்றும் உங்களுக்குத் தெரியாது. அதை எப்படிச் செய்வேன் என்றும் தெரியாது. பிறகு, அதைப் பற்றி யோசிப்பானேன்?'' என்று மிடுக்காகக் கேட்டாள் ரதி. உடனேயே சிரித்து, ''கவலைப் படாதீர்கள் பரமேஷ். அப்பா தந்திருப்பதற்கு மேலே அதிகமாகச் செலவாகிவிட்டால், நானே உங்களிடம் வந்து கேட்டு வாங்கிக் கொள்கிறேன். எந்தக் கடன்காரனும், வீட்டு வாசலில் வந்து நின்று, உங்கள் கௌரவத்தைக் கெடுக்க நான் விட்டு விட மாட்டேன். சரிதானா?'' என்றவள், அதற்கு மேல் பண விஷயம் பேச இடம் கொடாமல், ''லோகனைப் பற்றிச் சொல்லுங்கள் பரமேஷ். தொழிற்சாலையில் சமாளிக்கிறானா? அல்லது, இரட்டிப்பு வேலையாக்கி வைத்துக் கொண்டிருக் கிறானா?'' என்று விசாரித்தாள்.

முகம் மலர, ''பிரம்மாதமாய்! அவனுக்கு இவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருக்கும் என்று நான் நினைத்ததே இல்லை. ஒரு சின்ன ஊக்கச் சொல்தான் அவனுக்குத் தேவையாக இருந்திருக்கிறது. அதை நேரமறிந்து சொன்னதற்காக நன்றி, ரதி!'' என்று மனதாரச் சொன்னான் பரமேசன். ''அப்புறம் இதற்கும்!'' என்று நீர் ஊற்றைக் காட்டினான்.

''ஒரு பழமொழி... எங்கள் வீட்டுக் கணக்கர் சொல்லுவார். 'கை அள்ளித் தருகிறதே என்று வாய் கைக்கு நன்றி சொல்வதா!' என்பார். இப்படி நன்றி சொல்லத் தொடங்கினால், நான் எவ்வளவு சொல்லலாம்? வீட்டில் தங்க இடம் கொடுத்து, சாப்பாடு போட்டு, இந்தத் தண்ணீர்ப் பஞ்ச காலத்தில் குடிக்க

மட்டும் இல்லாமல், குளிக்க, முகம் கழுவத் தண்ணீர் கொடுத்து...''

''போதும் போதும்...'' என்று சிரித்தான் பரமேசன். ''நான் உனக்கு இனி நன்றி சொல்லவே மாட்டேன்!'' என்று அவன் அறிவிக்க, ''இது... இது... இது... சரி...'' என்று ரதி பாவனை யோடு கூறத் தன்னை மறந்து வாய்விட்டு நகைத்தான் அவன்.

''சூப்பர் சிரிப்பு அத்தான். எப்போதும் இப்படிச் சிரித்துக் கொண்டே இருப்பதற்கு என்னவாம்?'' என்று ரதி ரசனை காட்டிக் கேட்ட விதத்தில் அவனுக்கு இன்னமும் சிரிப்பு வந்தது.

இந்த இனிய மனநிலை ஞாயிற்றுக் கிழமை வரை நீடித்தது.

## 13

ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கெல்லாம் சவிதா வந்து விட்டாள்.

ஹாலில் அமர்ந்து, டீ குடித்தபடி, ஏதோ பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த ரதியின் கண்கள் வியப்பில் விரிந்தன.

''நாம் ஒன்பது மணிக்குப் புறப்படுவதாகத்தானே திட்டம்?'' என்று வினவியபடி, ஹால் கடிகாரத்தை எட்டிப் பார்த்தாள்.

குறிப்பை உணர்ந்த சவிதா, எப்போதும்போல ரதியின் முன் சங்கடமாக உணர்ந்தாள்.

எல்லோரையும் கிளப்புகிற சாக்கில் முன்னதாகவே வந்து, இங்கேயே காலை உணவை முடித்துக் கொள்ளலாம் என்பது



அவளது திட்டம். வெறும் இட்டிலி தோசைக்குக் கூட, சட்டினியில் இரண்டு வகை, சாம்பார், பொடி என்று நாலைந்து வகை வியஞ்சனங்கள் இருக்கும். பூரி ஆப்பம் என்றால் கேட்கவே வேண்டாம்.

ஆனால், புருவம் உயர்த்தி ரதி கேட்கையில் ஏன் வந்தோம் என்று தோன்றியது.

ஆனால், உடனேயே ஆத்திரமும் உண்டாயிற்று.

இந்த வீடு அவளுடையது. இன்றில்லா விட்டாலும், எப்படியும் ஒரு நாள் அப்படித்தான் ஆகப் போகிறது. இங்கே, இந்த ரதி வெறும் விருந்தாளி மட்டுமே. அதை மறந்து, அவள் என்ன உடையவள் மாதிரிக் கேள்வி கேட்பது? அதுவும் யாரைக் கேட்பது?

கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து, தான் யார் என்று காட்ட வேண்டும் என்று சவிதா சோஃபாவை நோக்கி நகரும்போதே, ''நிற்பானேன்? உட்காருங்கள்!'' என்று அந்த வீட்டுப் பெண்ணாய் ரதி உபசாரம் செய்யவும், அவளுக்கு உட்காரப் பிடிக்காமல் போனது.

அத்தோடு நில்லாமல், கை நீட்டி, டெலிஃபோன் கருவியை எடுத்துச் சமையல் அறை பட்டனைத் தட்டினாள், ரதி. ''ஒரு கப் காஃபி கொண்டு வா அப்பு!'' என்று சமையல் அறை உதவியாளிடம் சொல்லிவிட்டு, ரிசீவரை வைத்தாள்.

சவிதா நின்றுகொண்டு இருப்பதைப் பார்த்து, ''இன்னும் நிற்கிறீர்கள்? கிளம்புவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. அவ்வளவு நேரம் நிற்பதானால், கஷ்டமாக இராதா? 'சும்மா உட்காருங்கள், சவிதா!'' என்று மேலும் உபசாரம் செய்தாள்.

அதற்குள் காஃபி வேறு வந்துவிட "டீபாயில் அந்தப் பக்கமா வை, அப்பு. சவிதா சோஃபாவில் உட்கார்ந்து எடுக்க வசதியாக இருக்கும். எடுத்துக் கொள்ளுங்கள், சவிதா!" என்று மேலும் கூறினாள்.

கொதிப்பை மறைத்துக் கொண்டு உதட்டால் முறுவலித்தாள் சவிதா. "வேடிக்கையைப் பார்த்தாயா, ரதி! இந்த வீட்டில் இருந்து, உன்னைப் போல விருந்தாளிகளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கியிருக்க வேண்டியவள் நான். இப்போது நீ என்னை உபசாரம் செய்யும்படி இருக்கிறது. எல்லாம் தலை விதி!" என்று பெருமூச்சு விட்டாள்.

"எங்கே, உங்கள் உள்ளங்கையைக் காட்டுங்கள், பார்ப்போம்!" என்றாள் ரதி.

"எதற்கு? ரேகை பார்ப்பாயா, என்ன? சொல்லு, பார்ப் போம்," என்று ஆவலோடு நீட்டினாள் சவிதா.

"என்னைத் தாங்குமா என்று பார்க்கத்தான். என்னமோ என்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவதாகச் சொன் னீர்கள். ஊகூம். நடக்கவே நடக்காது. நான் ஏறி நின்றால் உங்கள் கை அவ்வளவுதான். சட்டினியாகி விடும்!" என்று சொல்லிக் கண் சிமிட்டிச் சிரித்தாள் ரதி.

கிண்டலா?

கடும் சீற்றத்துடன் ஏதோ சொல்லச் சவிதா வாயைத் திறந்தபோது, "அடடே, சவிதாவா? ஏது இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டாய்? பரவாயில்லை. தாமதமாக வருவதற்கு இது மேல். ஏதோ கையை வேறு நீட்டிக் கொண்டு இருந்தாயே. உனக்கு ரேகை பார்க்க வேறு தெரியுமா, ரதி. ஆய கலைகள்



அறுபத்து நாலு என்பார்கள். நீ அத்தனையும் படித்திருப் பாய் போல!" என்று மாமன் மகளைப் பாராட்டினான் பரமேசன்.

அவளைப் பாராட்டுகிறானே என்று சவிதா கொதிக்கை யில், "இன்று என்ன டிஃபன் என்று நேற்றுக் கேட்டாயே, சவிதா. உனக்குப் பிடித்த ஆப்பம் அதோடு குருமா தேங்காய்ப் பால்தான். ரதி! எல்லோரையும் சாப்பிடக் கூட்டி வாம்மா, சேர்ந்து சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம்," என்றான்.

"பிடித்த உணவா? அப்படியானால் காத்திருக்க வைக்கக் கூடாதே. நீங்கள் சவிதாவைச் சாப்பிட அழைத்துப் போய்ச் சாப்பிடுங்கள், அத்தான். நான் மற்றவர்களை அழைத்து வருகிறேன்," என்று ஒரு குறும்புப் பார்வையை வீசிவிட்டுப் போனாள் ரதி.

வழக்கம்போல அன்றைய உணவும் மிகுந்த கவனத்துடன் தான் தயாரிக்கப்பட்டிருந்தது. சுவையாகவும் இருந்தது. ஆனால் சவிதாதான் அதை விழுங்குவதற்குள் அரும்பாடு பட்டுப் போனாள்.

ஆனால் பரமேசனின் ஜக்கனில் ஏறி, அவன் அருகே அமர்ந்ததுமே அவளுக்கு மீண்டும் உற்சாகம் பீறிட லாயிற்று.

எதிர்ப்புறம் வருவோர் தன்னைக் காண வசதியாகச் சற்று நேரம் நிமிர்ந்து அமர்ந்து காட்சி தந்துவிட்டு, ரதியை உரக்க அழைத்து, "இப்போது நாம் ஓர் அதிசயத்தைப் பார்க்கப் போகிறோம்!" என்று அறிவித்தாள்.

அதுவரை உதயா, லோகேசன் இருவரிடமும் சளசளத்துக் கொண்டிருந்தவள், அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "அதிசயமா? ஏசி செய்த ஒரு பெரிய ஷாப்பிங் சென்டருக்குப் போவதாகத்தானே ஏற்பாடு?" என்று வினவினாள்.

"அது அப்படித்தான். ஆனால் அதிசயம் அதில் இல்லை."

"ஆமாமாம். அதிசயம் என்கிற நீர் விளையாட்டு இடம், மதுரையில் அல்லவா இருக்கிறது!" என்றான் லோகேசன்.

"சொல்லி முடிக்கும் வரை கேட்கும் பொறுமை இல்லையா, லோகன்? எவ்வளவு காலம்தான் இப்படி அவசரக் குடுக்கையாகப் பொறுப்பற்று இருக்கப் போகிறாய்?" என்று சவிதா அலுத்துக் கொள்ளவும், அவன் முகம் கல்லாகிப் போயிற்று.

"இப்படிச் சிறுபிள்..." என்று மேலும் ஏதோ தொடர முயன்றவளின் பேச்சில் இடையிட்டு, "கொஞ்சம் பொறுங்கள், சவிதா. லோகேஷ், நீ சொல்லுகிற அதிசயம் இந்தப் பக்கம் மேட்டுப் பாளையத்தில் இருக்கும் 'பிளாக் தண்டர்' மாதிரியா? ஒரு தரம் கல்லூரியிலிருந்து தமிழ்நாடு சுற்றுப் பயணம் வந்தபோது பார்த்தோம். பிரமாதமாக இருந்தது. ஒரு லீவு நாளில், மதுரை 'அதிசயம்' பார்க்கப் போவோமா?" என்று ரதி கேட்க, "கட்டாயமாய்!" என்றான் அவன் முகம் மலர்ந்து.

"இப்போது சொல்லுங்கள், சவிதா, இங்கே என்ன அதிசயம்?"

அவளைப் பெரிதாகக் கொண்டாடி, எனக்கு அடுத்த இடம் தருகிறாயா என்று, சவிதாவுக்கு ஆத்திரம்தான். ஆனால் அதைக்



காட்டிக் கொள்வது ரொம்பவே சிறு பிள்ளைத்தனமாகத் தோன்றும் என்பதால், ரதிக்குப் பதிலாகக் "கார் நிறுத்துமிடம்!" என்றாள், என்னவோ தானே அதைக் கட்டி வைத்தது போன்ற பெருமையுடன்.

"எல்லாவற்றுக்கும் மேல் தளத்தில் கார் பார்க்கிங். இப்போது நாம் காரில் உட்கார்ந்து போகிறோம். அங்கே, நம் தலைக்கு மேல் இந்தக் கார் நிற்கும்.

"ஆனால், வேறு எங்கேயோ கூட, நம் காரை உயரே கொண்டு போய் நிறுத்தினோம் இல்லையா உதி? வந்து ஃப... ஃபவுண்டன் பிளாசா. அங்கேதானே?" என்று உதயாவிடம் ரதி கேட்டாள்.

"அது எவ்வளவு சின்ன இடம். ஒரு தளம்தானே மேலே போக வேண்டும்? இது எவ்வளவு உயரம். அத்தோடு எத்தனை கார்கள். நம் காரைக் கண்டு பிடிப்பதே பெரும்பாடாகி விடும். என் பிறந்த நாளுக்கு அழைத்து வந்தீர்களே, பரம். நம் காரை நீங்கள் கண்டுபிடித்தது இன்னமும் எனக்கு அதிசயம்தான்!" என்று உணர்ச்சி பொங்க அவனைப் பார்த்தாள் சவிதா.

என்னவோ, சுண்டு விரலால் மலையைக் கெல்லி எறிந்த மகாவீரனைப் பார்க்கும் பார்வை.

ஆனால் முகம் கன்றிக் கறுக்க, "உனக்குக் கார் ஓட்டத் தெரியாததால், பெரிதாகத் தோன்றுகிறது. மற்றப்படி, இது ஒன்றுமே இல்லை!" என்றான், பரமேசன் - எரிச்சலை அடக்கிய குரலில்.

"ஒரேயடியாக அப்படிச் சொல்ல முடியாது, பரமேஷ் அத்தான். மலேஷியாவில், மைதீன் சூப்பர் மார்க்கெட்டுக்கு

அடியில் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, நானும் என் தோழியும் திணறித்தான் போனோம். பிறகு பார்க்கிங் டிக்கெட்டைக் காட்டித் தேடித் தேடிக் கண்டுபிடித்தோம்!'' என்றாள் ரதி இயல்பாக.

சவிதாவிடம் இருந்து சத்தமே இல்லை.

அஸ்ஸாமில், ஏதோ ஒரு மூலையில் இருக்கும் சின்ன டீ எஸ்டேட்டில், தீவிரவாதிகளுக்குப் பயந்து, உள்ளேயே அடைந்து கிடந்த பெண்ணுக்கு இங்குள்ள பிரம்மாண்டங் களைக் காட்டி மிரள வைக்கலாம் என்று பார்த்தால், அவள், இதற்கு மேல் எங்கெங்கோ சென்று என்னென்னவோ அறிந்து வைத்திருக்கிறாளே.

ஆனால் உற்சாகக் கூச்சலிட்டபடி, ''நீ மலேஷியாவுக்குப் போயிருக்கிறாயா? சொல்லவே இல்லையே. இன்னும் வேறே எங்கெல்லாம் போயிருக்கிறாய்? என்னவெல்லாம் பார்த்தாய்? எது ரொம்ப நன்றாக இருந்தது?'' என்று உதயாவும் லோகேசனும் மாறி மாறிக் கேட்டனர்.

''அமைதி... அமைதி...'' என்று முறுவலித்துவிட்டு, ''நிறைய இடங்களுக்குப் போயிருக்கிறேன். ஆனால் உலகின் முக்கியமான இடங்கள், அங்கே முக்கியமாகப் பார்க்க வேண்டியவை, அவற்றின் சிறந்த தோற்றங்கள் எல்லா வற்றையுமே, இப்போது டீவியில் காட்டி விடுவதால், எதையுமே நாம் நேரில் போய்ப் பார்க்க என்று ஒரு சின்ன அதிசயம் கூட மிச்சம் இல்லை!'' என்று சாதாரணம் போலச் சொன்னாள் ரதி.

''ஆனால் மதுரை அதிசயம் தனி!'' என்று லோகேசன் சொல்ல, எல்லோரும் சிரித்தனர்.



ரதியின் பேச்சின் தாக்குதலோ என்னவோ, ஸ்பென்சரை அடைந்து, தளம் தளமாகச் சுற்றத் தொடங்கும் வரை, சவிதா வாயைத் திறக்கவில்லை.

அப்புறம் வழக்கம்போலத் தனக்குத்தான் தெரிந்த மாதிரி, கண் முன் இருப்பதையே விளக்கம் கூறிக் காட்டத் தொடங்கினாள்.

அலங்காரப் பொருட்களை விற்கும் கடை ஒன்றில் தள்ளுபடி விற்பனை போடப்பட்டிருந்தது.

''இந்த நிறுவனப் பொருட்கள் நன்றாக இருக்கும்!'' என்று ரதி சிலது தனக்குத் தேர்ந்தெடுத்தாள். உதயாவுக்கும் சிலது எடுத்து வைத்தாள்.

நீயும் எடுத்துக் கொள் என்று யாராவது சொல்வதற்காகச் சவிதா காத்திருந்தபோது, பணம் கொடுக்கும் இடத்தில், ரதி கைப்பையைத் திறக்கவும், பரமேசன் அங்கே ஓடினான். ''ரதி, பொருட்களைத் தேர்ந்தெடுப்பதை மட்டும் நீ பார். இன்றையச் செலவு என் பொறுப்பு!'' என்று பில்லுக்காகக் கையை நீட்டினான்.

புன்னகையோடு, பில்லோடு பணத்தைக் கொடுத்து, ரசீதை வாங்கிக் கொண்டு, கடைக்கு வெளியே வந்து, ''எனக்கு வேண்டியதை நான்தான் வாங்கிக் கொள்ள வேண்டும், பரமேஷ் அத்தான். என் சில்லறைச் செலவுகளை அடுத் தவர் மீது சுமத்தினால் என் அப்பாவுக்குப் பிடிக்காது!'' என்றாள்.

''அவ்வளவு கணக்குப் பார்க்கிறவள் எப்படித்தான் என் வீட்டில் தங்கி இருக்கிறாயோ?'' என்றான் அவன் ஆத்திரத்துடன்.

''அது வேறு. நீங்கள் அஸ்ஸாம் வந்தால், எங்கள் வீட்டில் தங்க மாட்டீர்களா? அப்படித் திருப்பிக் கொடுக்கக் கூடிய கடன் அது. ஆனால் கண் மையும், நகச் சாயமும், மேக்கப் சாமான்களும், உங்களுக்கு நான் வாங்கித் தர முடியுமா, சொல்லுங்கள்?'' என்றவள் சட்டெனச் சிரித்தாள்.

''என்ன? என்ன சிரிப்பு?'' என்றான், அவன் - ஆத்திரம் முழுமையாகத் தணியாமலே.

''அந்த அலங்காரம் எல்லாம் செய்தால் உங்கள் முகம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தேனா? இந்த மீசைக்கும்...'' என்று அவள் மீண்டும் வெள்ளிச் சதங்கையாய் ஒலியெழுப்ப, தன்னை மீறி, அவனும் முறுவலித்தான்.

''ஆனாலும் உனக்குத் துணிச்சல் அதிகம்தான். ஆனால் சாப்பிடுகிற இடத்தில் கூட, இப்படி அதிகப் பிரசங்கித்தனமாக, நீ காசை நீட்டக் கூடாது. நினைவிருக்கட்டும். இங்கே முடித்து விட்டால் மேலே போவோமா?'' என்று வேறு எதையோ பார்த்துக் கொண்டு இருப்பது போல, ஆனால் இங்கே கவனமாக நின்ற தம்பி, தங்கையையும் சேர்த்துக் கேட்ட பிறகே, அங்கே சவிதா இல்லை என்பதைக் கண்டு, அவள் எங்கே என்று வினவினான்.

உதயாவின் பார்வையைத் தொடர்ந்து, அவள் கடையின் உள்ளே நிற்பதைக் கண்டு, அவளிடம் சென்றான்.

''ஏன் இன்னும் இங்கேயே நிற்கிறாய்? எல்லோரும் கிளம்பியாயிற்றே!'' என்றான்.



''நான் இன்னும் ஒன்றும் வாங்கவில்லையே!'' என்றாள் அவள்.

அவளது கருத்து புரியாமல், ''ஏன் வாங்கவில்லை? இவ்வளவு நேரத்தில், எவ்வளவோ வாங்கிப் பணம் கொடுத்து முடித்திருக்கலாமே!'' என்றான் அவன்.

பணம் கொடுக்க நீ இல்லாமல் அது எப்படி முடியும் என்றா கேட்க முடியும்?'' எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை!'' என்றாள் சவிதா.

அப்போதும், 'இல்லையில்லை. நீ ஏதாவது வாங்கித்தான் ஆக வேண்டும்!' என்று கட்டாயப்படுத்தாமல், ''அப்படியானால் போகலாம். எல்லோரும் காத்திருக்கிறார்கள்!'' என்று அவன் முன்னே நடந்துவிட, அவளும் பின் தொடர வேண்டியதாகி விட்டது.

இந்த அழகில், ரதி வேறு, ''நீங்கள் ஒன்றும் வாங்கவில்லையா, சவிதா? அடடா, அடுத்த கடையில் முதலில் உங்களுக்குத்தான் வாங்க வேண்டும்!'' என்றுரைத்து இன்னமும் எரிச்சலூட்டினாள்.

சவிதாவுக்கு உள்ளம் கொதித்தது. இந்த ரதி வந்ததில் இருந்து அடிக்கடி இப்படித்தான். திருமதி பரமேசன் ஆன பிறகு இவள் வரட்டும், பேயோட்டி விடுகிறேன் என்று மனதுள் கறுவினாள் அவள்.

'லாண்ட் மார்க்' புத்தகப் பிரிவைப் பார்த்ததும், முன்னே சென்ற எல்லோரும் அதனுள் புகுந்து விட்டனர்.

''உங்களுக்குப் பாருங்கள், சவிதா!'' என்று ரதி மறக்காமல் அழைத்ததில் ஒன்றும் குறைவில்லை.

ஆனால் இவளுக்கு அலங்காரப் பொருட்கள்... எனக்கு மட்டும் வெறும் புத்தகமா என்று சவிதா பொருமியது அவளுக்குத் தெரியாது.

அலங்காரப் பொருட்களை விட, ரதி மிக அதிகமாகப் புத்தகங்களில் செலவிடுவதை வெறுப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

அப்போது திடீரென்று, ''ஹே... அது ரதி. ரதிதானே?'' என்ற கேள்வியும், ''ரதி!'' என்ற உற்சாக அழைப்பும் கேட்க, சிலர் வேகமாக வந்து, அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

''ரதி, டீலர்கள் மீட்டிங்கில் உன்னைப் பார்த்ததாக, முகர்ஜி சொன்னார். ஆனால் எங்கிருக்கிறாய் என்று கேட்குமுன், நீ போய் விட்டாயாமே. தீபன் அப்போதிருந்து தேவதாசாக உருகிக் கொண்டு இருக்கிறான். உன்னைப் பார்த்தாயிற்று அல்லவா? இனிப் பிழைத்து விடுவான்!'' என்றான் ஒருவன் கேலிக் குரலில்.

''பார்க்கா விட்டாலும் பிழைப்பான் என்பது அவனது தொப்பையில் இருந்தே தெரிகிறது!'' என்று சிரித்தாள் ரதி.

நண்பர்கள் கேலி பண்ண, வீட்டினர் வியப்பும் குறுகுறுப்பு மாக நோக்கினர்.

யார் அந்த தீபன்?

## 14

நண்பர்களோடு ரதி பேசியது ஆங்கிலத்தில்.

அவளுடைய அஸ்ஸாம் மாநில நட்பு வகை என்று ஊகித்த பரமேசன், புன்னகையோடு அவள் அருகில் நின்றான்.



ரதி, தன் மாமன் மகனின் பக்கம் திரும்பி, ''இவர் என் மாமா பையன், பெயர் பரமேசன். அடுத்தவர் லோகேசன். தங்கை உதயா... பரமேசனுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் பெண் சவிதா!'' என்று வீட்டினரை அறிமுகப்படுத்திவிட்டு, சூழ நின்ற நண்பர்களை வீட்டினருக்கும் அறிமுகப்படுத்தினாள்.

தீபன் செக்கச் செவேல் என்று கிட்டத்தட்ட பரமேசன் உயரத்தில் நெட்டையாக இருந்தான்.

உதயாவைப் பார்த்து, ''புத்தகக் கடையா, அழகிப் போட்டி நடக்கிற இடமா என்று ஒரு கணம் அசந்து விட்டேன்!'' என்று சிரித்தான்.

உதயா வெட்கிச் சிரித்தாள்.

''ரதிக்கு, அந்தப் பக்கமே காதல் இருக்கும்போல!'' என்று பரமேசன் காதில் முணுமுணுத்தாள் சவிதா.

''வெறும் கேலிப் பேச்சைக் கொச்சைப் படுத்தாதே!'' என்றான் அவன் பதிலுக்கு.

பரமேசனைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''உங்களைப் பார்த்திருக்கிறேன்!'' என்றான் ஒரு நண்பன். பெயர் அசோகன்.

பரமேசனும் பார்த்துவிட்டு, ''கரெக்ட். கோயம்புத்தூர் டீமில் விளையாடினீர்கள்!'' என்றான்; ''இப்போதெல்லாம் கிரிக்கெட் விளையாடுவது இல்லையோ?'' என்று முறுவலித்தான்.

''எங்கே சார்? அந்தப் போட்டியில் சிக்ஸரும் பவுண்டரியுமாக நீங்கள் என்னை அடித்துக் கொளுத்தி விட்டீர்களா? அத்தோடு எஸ்டேட் வேலையில் இறங்கிவிட்டேன்.

ஊட்டியில் இருக்கிறது. நீங்கள் ரொம்ப நன்றாக பாட் செய்வீர்களே!''

''நீங்கள் நன்றாகப் போட்டுக் கொடுத்தீர்கள். அடித்தேன். அந்த நல்ல மனம் வேறு யாருக்கும் இல்லையே!'' என்று பரமேசன் வருத்தம் காட்ட, எல்லோரும் சிரித்தனர். சிரித்துவிட்டு, ''தொழில் ஆர்வம், கிரிக்கெட்டைப் பின்னே தள்ளிவிட்டது!'' என்றான்.

''ஆக, என் கிரிக்கெட் எதிர்காலத்தைக் கெடுக்க மட்டும்தான், அன்று அப்படி அடித்தீர்கள் என்று சொல்லுங்கள்!'' என்றான், அசோகன் சோகமாகவே.

சிரிப்பினூடே, ''நன்றி சொல்லு, அசோக். உன்னால் நம் இந்திய டீமே தோற்றுவிடும் கேவலத்திலிருந்து உன்னைக் காப்பாற்றியிருக்கிறாரே!'' என்று ரதியும் சேர்ந்து கிண்டலடித்தாள்.

''எல்லோருக்கும், என்னுடைய ஒரு சின்ன ட்ரீட். கன்னிமாரா போகலாம், வாருங்கள்!'' என்று பரமேசன் அழைத்தான்.

''நடந்தே போய் விடலாம்!'' என்று யாரோ சொல்ல, எல்லோரும் ஆமோதித்தார்கள்.

சேர்ந்து சொல்லும்போது, ''தீபன், நீ எங்கே இங்கே?'' என்று ரதி, தீபனைக் கேட்க, ''உன்னைத் தேடித்தான் பார்வதி, என்றால் அடிப்பாயா?'' என்று சிரித்தான் அவன்.

உடனேயே முகம் மாற, ''டீ தயாரிப்பாளர்கள் மாநாட்டுக்கு வந்த இடத்தில், திடீரென்று பெரியப்பாவுக்கு உடம்பு சரியில்லை, ரதி. அப்பல்லோவில் சேர்த்திருக்கிறது. நல்ல



வேளையாக நம் செட். எல்லோருமே, மாநாட்டுக்காக இங்கே வந்திருந்ததால் எல்லாம் இலகுவாக இருந்தது. இப்போது பெரியம்மாவும், அண்ணனும் வந்து விட்டதால், இன்று நான் இவர்களோடு வெளியே வந்தேன்,'' என்று விவரம் கொடுத்தான் அவன்.

''அங்கிளைப் பார்க்க இவர்களோடு நானும் வருகிறேன்,'' என்றாள் ரதி.

இருவருமாகப் பேசிச் செல்லுகையில், ''ரதி!'' என்று பரமேசன் அழைத்தான். ''உன் நண்பர்களுக்கு என்ன பிடிக்கும் என்று உனக்குத் தெரியும் அல்லவா? என்னோடு வா, நாம் இருவரும் வேகமாகச் சென்று எல்லோருக்கும் ஆர்டர் பண்ணுவோம். எல்லோரும் வந்து சேரும்போது, உணவு தயாராக இருக்கும்!'' என்றுரைத்து அவளை முன்னே அழைத்துச் சென்றான்.

கிரிக்கெட்டைப் பற்றிப் பேசியவாறு, லோகேசன், அசோகன், சுந்தரோடு கூட்டுச் சேர, ''மிஸ் இந்தியா...'' என்று அழைத்து உதயாவோடு இணைந்து நடந்தான் தீபன்.

யாருடனும் கலந்து கொள்ள முடியாமல், தன்னை அழைத்துச் செல்லாத பரமேசனுக்கு உள்ளூர அர்ச்சனை செய்தபடி, கடைசியாகச் சென்றாள் சவிதா.

பின்னொரு காலத்தில், இதற்கெல்லாம் அவனை வருந்தச் செய்ய வேண்டும்.

''உனக்குப் பிடித்த பாசந்தி சொல்லியிருக்கிறேன்!'' என்று பரமேசன் சொன்னது கூட, அவளுக்குத் திருப்தி தரவில்லை.

அதற்குப் பிறகு, பல நாட்கள் ரதியை வீட்டில் பார்க்க முடியவில்லை.

முதல் நாள், தீபனுடைய பெரியப்பாவைப் பார்க்க என்று, மருத்துவமனைக்குப் போனாள்.

அடுத்த நாள், அதற்கு மறுநாள் அஸ்ஸாமுக்குக் கிளம்பும் அசோகன், சுந்தரோடு ஷாப்பிங் போனாள்.

அப்புறம் அவர்கள் கிளம்புகிறார்கள் என்று வழியனுப்பப் போனாள்.

அடுத்த நாள், பெரியப்பாவின் அறுவைச் சிகிச்சைக்காக, அவரது பிரிவு ரத்தத்திற்காக அலைந்தாள். கடைசியாகப் பரமேசனின் உதவியால் ரத்தம் கிடைத்தது.

அதற்காக, தீபனின் நன்றியைத் தெரிவித்து, பரமேசனின் தொழிற்சாலை வரை அவனை அழைத்துச் சென்று வந்தாள்.

அடுத்த நாள், பெரியவரின் அறுவைச் சிகிச்சையின்போது, அவருடைய மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு துணையாக உட்கார்ந்திருந்தாள்.

எல்லா இடங்களுக்கும், அவளுக்குத் தீபன் துணை சென்றான்.

ஒரேயடியாக, அவனோடு தனியே சென்றதாகத் தோன்றக் கூடாது என்பதற்காகவோ என்னவோ, ஓரிரு தருணங்களில் உதயாவையும் கூட அழைத்துச் சென்றாள்.

''இப்படி, இங்கே வந்து ஊரைச் சுற்றி நாறடிப்பதற்கு, அங்கேயே அவர்களுக்குத் திருமணத்தை முடித்து விட்டே, உங்கள் மாமா வெளிநாடு சென்றிருக்கலாம்!'' என்று சலித்துக்



கொண்டாள் சவிதா. ''ஒரு வேளை, இந்த ஊர் சுற்றியை மருமகளாக ஏற்க, அந்த தீபனுடைய பெற்றோர் மறுத்து விட்டார்களோ?''

''இதை ஏன் என்னிடம் கேட்கிறாய்?'' என்றான் பரமேசன் எரிச்சலோடு. ''இந்த விவரம் எதையும் யாரும் என்னிடம் சொன்னதில்லை. அப்படி உனக்குத் தெரிந்தே ஆக வேண்டுமானால் அவளிடமே போய்க்கேள். என்னைத் தொல்லை செய்யாதே. அவளைக் கட்டிக் காபந்து பண்ணுகிற கடமை எனக்குக் கிடையாது!'' என்று கடுகடுப்புடன் கூறினான்.

இந்தக் குரலில் சவிதா நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் உள்ளே உற்சாகம் பொங்கியது அவளுக்கு.

ரதியின் நடத்தை பரமேசனுக்குப் பிடிக்கவில்லை. இந்த மனநிலையை வளர்த்தாக வேண்டுமே. ரதி என்ற பெயரே வெறுத்துப் போக வைக்க வேண்டுமே.

''அது சரிதான், பரம். ரதி எப்படிப் போனாலும், அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியது இல்லைதான். வெகு தூரத்து உறவுக்காரிதானே! நாமானால், இவ்வளவு தூரத்து உறவுக்காரர்கள் வீட்டில், அதுவும் வயதுப் பையன்கள் இருக்கும் இடத்தில் ஒரு நாள் தங்குவதற்கே கூசிப் போவோம். ரதியிடம் அந்த மாதிரிக் கூச்சத்தை எதிர்பார்க்க முடியாது. அவள் மட்டும் என்றால் எப்படியோ போகட்டும் என்று விட்டு விடலாம். ஆனால் பாதி, நம் உதியையும் கூட்டிக் கொண்டல்லவா அலைகிறாள். உதி வேறு சின்னப் பிள்ளை. வெள்ளை நிறத்தைக் கண்டாலே, ஒரு மயக்கம். அந்த தீபன் வேறு செக்கச் செவேல் என்று இருக்கிறான்.

இவளுக்கு என்னமும் ஆகி விடுமோ என்றுதான்... உங்கள் தங்கைக்கு ஒன்று என்றால் அது எனக்கும்தானே அவ மானம்?''

முகம் இறுக, அவளை நேராகப் பார்த்தான் பரமேசன். ''அப்படி என்ன அவமானம் நேர்ந்து விடும் என்கிறாய்?'' என்று வெளிப்படையாகக் கேட்டான்.

சவிதா சற்றுத் திணறிப் போனாள்.

குறிப்புக் காட்டி எவ்வளவோ பேசலாம். அகப்பட்டுக் கொண்டால் கூட, ''ஐயோ! நான் இப்படி நினைத்தல்லவா சொன்னேன். தப்பாக அர்த்தம் பண்ணிக் கொண்டாயா?'' என்று சமாளித்து விடலாம். ஆனால் பொல்லாத குறிப்புக் கொடுத்த சவிதாவுக்கு நேரடியாகப் பதில் சொல்ல முடிய வில்லை.

அவசரமாக யோசித்து, ''அவனிடம் உதயாவின் மனம் ஈடுபட்டு விடக் கூடாதே என்று எனக்குக் கவலை. அவன் அவ்வளவு நல்லவனாகத் தெரியவில்லை, பாருங்கள்!'' என்று சமாளித்தாள் அவள்.

''உதிக்கு நல்வழி காட்டுவது பற்றி அம்மா கவனித்துக் கொள்வார்கள் என்று உனக்கு முன்னமேயே சொல்லி யிருக்கிறேன், சவிதா. தயவு செய்து விட்டு விடு. அம்மாவின் வேலையில் நீ மூக்கை நுழைப்பது நன்றாகவும் இல்லை. அவசியமும் இல்லை. அத்து மீறலும் கூட. இப்போது கிளம்புகிறாயா? எனக்கு வேறு வேலை இருக்கிறது!'' என்றான் பரமேசன்.

தட்டில் மீதம் இருந்த நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்புகளை ஏக்கத்துடன் பார்த்தாள் சவிதா. இதைச் சாப்பிட்டு



முடித்த பின் அவனுடைய வீட்டினரின் குற்றம் குறைகளைப் பேசத் தொடங்கியிருக்க வேண்டுமோ?

பக்கத்தில் நின்றவனைப் பார்த்தாள்.

எங்கோ பார்த்தபடி இலக்கமின்றி நின்றான் அவன். இனி உட்கார மாட்டான்.

சட்டென, மேஜை மீது இருந்த நாப்கினில், அந்த முந்திரிப் பருப்புகளைக் கொட்டி, மடக்கி எடுத்துக் கொண்டு எழுந்தாள் அவள்.

''போவோம், வாருங்கள்.''

அவளை அனுப்பி வைத்த பிறகும், வீட்டிற்குப் போக மனமின்றி, நாலைந்து நாட்கள் இடைவெளிக்குப் பிறகு, பரமேசன் ஈசன் மெட்டல்சுக்குப் போனான்.

அங்கே மாலை ஷி∴ப்ட் வேலை நடந்து கொண்டு இருந்தது. வேலை செய்யும் ஆட்களை லோகேசன் கவனித்த விதம், அவன் மனதுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது.

சும்மா, பைக்கில் உபயோகமற்று ஊர் சுற்றிக் கொண்டிருந்த பையன். உடன் பிறந்த அண்ணன், அவன்கூடப் பொறுப்பற்ற சின்னப் பையன் என்று கைகழுவி விட்டிருந்தான்.

ரதியால் விளைந்த எவ்வளவு பெரிய நன்மை இது.

டீலர்கள் மீட்டிங் போனாளாமே. தயாரிப்பாளராக இருந்து, டீலர் மீட்டிங் போவது என்றால் கட்டாயம் திறமை இருந்தாக வேண்டும். உலகம் முழுக்கச் சுற்றியிருக்கிறாள். அது பற்றியும், பெருமையாக ஒரு சொல் சொல்லிக் கேட்ட தில்லை.

ஆனால்...

வீடு போய்ப் பார்த்தால், அப்போதுதான் காரிலிருந்து இறங்கி உதயா வீட்டுக்குள் வர, ரதி காரை ஷெட்டில் விடப் போனாள்.

மீண்டும் அவனது புருவங்கள் நெரிந்தன.

காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்த ரதி, பரமேசனின் முகத்தைப் பார்த்துவிட்டு, "என்ன விஷயம்? முகம் உம்மென்று இருக்கிறது?" என்று புன்னகையோடு வினவினாள்.

"மணி என்ன ஆகிறது என்று பார்த்தாயா? வீட்டுப் பெண்கள். பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்? கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக இருக்கக் கூடாதா?" என்றான் பொறுமையாகவே.

தலை சரித்து அவனைப் பார்த்தாள் அவள். "ம்ம்ம்... அடக்க ஒடுக்கம். அடக்கம் பற்றி எப்போதோ பாடத்தில் படித்த நினைவு இருக்கிறது. ஆனால் இந்த அதென்ன, ஒடுக்கம்? அதுதான் புரியவில்லை. ஒரு வேளை உங்கள் ஃபாக்டரிக்கு அழைத்துப் போய், பக்கவாட்டில் இரண்டு தட்டுத் தட்டி, ஒடுங்க வைத்து விடுவீர்களோ?" என்று ரதி கேலிக் குரலில் கேட்டுச் சிரிக்க, உதயாவும், அன்னபூரணியும் சேர்ந்து நகைத்தனர்.

அப்போதைக்கு இணைந்து முறுவலித்தபோதும், அவரவர் வேலையாக எல்லோரும் உள்ளே செல்லுகையில், "சொன்ன பேச்சுக் கேட்கப் போவதே இல்லை என்று குறிப்பாய்ச் சொன்னாய் போல!" என்றான், பரமேசன் - ரதியிடம்.



"இல்லையே. காதில் பஞ்சு வைத்து அடைக்கும்வரை, அதற்கு வாய்ப்பே கிடையாது என்று எனக்குத் தெரியாதா?" என்றாள் அவள் விளையாட்டாகவே.

"நான் என்ன சொன்னேன் என்று உனக்குத் தெரியும்!" என்றான் அவன் குரல் இறுக.

குறும்பாகப் பார்த்து, "சாப்பாட்டு மேஜையில், கூலரில் குளிர் நீர் இருக்கிறது. போய்க் குடியுங்கள். கோபம் குறையும்!" என்று விட்டுப் போனாள் அவள்.

இரவு உணவின்போது சாப்பாடு பற்றிய பேச்சில், "அந்தப் பையன் தீபனுக்கு நம் பக்கச் சாப்பாட்டு ருசி மிகவும் பிடித்திருக்கிறதுபோல, ஒரேயடியாகப் புகழ்கிறான்!" என்றாள் அன்னபூரணி.

"உங்கள் வீட்டுப் பக்குவம் அப்படி, அத்தை!" என்றாள் ரதி, புன்னகைத்து.

"மருத்துவ மனையில் இருப்பவருடைய மனைவி, மகன்தான் வந்தாயிற்றே. தீபன் திரும்பிப் போகாமல் இன்னமும் ஏன் இங்கேயே இருக்கிறார்?" என்று பரமேசன் ரதியிடம் வினவினான்.

விழி விரித்து நோக்கிவிட்டு, "தீபனுக்குச் சென்னை மிகவும் பிடித்துப் போயிற்றாம். இதை விட்டுப் பிரிய, மனமே வரவில்லையாம்!" என்றாள் ரதி.

"சென்னையையா? இந்த வீட்டையா? எதை விட்டுப் பிரிய மனம் இல்லை?" என்று ஒரு மாதிரிக் குரலில் அவன் வினவ, "கேட்டுத்தான் சொல்ல வேண்டும். மற்றவர் மனம் பற்றி, எனக்கு என்ன தெரியும்?" என்று சிரித்தாள் ரதி.

"ஏ...ய் உதி, நீ ஏன் எழுந்து விட்டாய்? உட்கார்ந்து சாப்பிடு!" என்று அன்னபூரணி சொன்னதற்கு, "பசியில்லை!" என்று முணுமுணுத்துவிட்டுப் போய்விட்டாள் மகள்.

"எப்படியோ... இப்படித் தினமும் சுற்றாமல் இருக்கப் பாருங்கள்!" என்றான், பரமேசன். "ஊர் வாயைப் பற்றிப் பெரிதாக நினைக்கக் கூடாது என்றாலும், அதற்கு இடம் கொடுக்காமல் இருப்பது மேல்!" என்று முடித்தான்.

அவ்வளவு சொன்னதற்கு, தன் பேச்சுக்குக் கொஞ்சமாவது மதிப்பு இருக்கும்... இருக்க வேண்டும் என்று பரமேசன் எதிர்பார்த்தான்.

ஆனால் மறு நாள் உதயாவை விட்டு விட்டுத் தனியாகச் சென்ற ரதி, இரவு வெகு நேரம் சென்ற பிறகும், வீடு திரும்பவில்லை.

சவிதாவின் வாய்க்கு அது நல்ல அவலாயிற்று.

## 15

அன்று பரமேசனின் வீட்டுக்குச் சவிதா சென்றபோது மாலையாகி இருந்தது.

முந்திய தினம் அவ்வளவு பேசியதில் பரமேசனைக் கொஞ்சம் கிளப்பி விட்டு விட்டோம் என்ற நிச்சயம்தான் அவளுக்கு.

எடுத்துச் சொன்னதற்காகத் தன் மீது அவனுக்கு எரிச்சல் என்பதையும் உணர்ந்திருந்ததால் அன்று பரமேசனைப் போய்ப் பார்க்க, அவள் சற்றுத் தயங்கினாள்.



ரதியைப் பற்றிய குற்றச்சாட்டுக்கு, இன்னமும் உறுதியான ஆதாரம் காட்டி, அவள் நல்லதற்கே சொன்னதாகப் பரமேசனை நம்ப வைக்க வேண்டியிருந்தது.

எனவே, தன் முந்திய நாள் பேச்சின் பிரதிபலிப்பாக, வீட்டில் ஏதாவது சிறு கொந்தளிப்பாவது ஏற்பட்டதா என்று அறிவதற்காக, வீட்டுக்குச் சென்றாள்.

அப்படி ஏதாவது ஏற்பட்டிருந்தால் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாமே.

அவளைப் பார்த்ததும் வெறுமனே தலையசைத்து உட்காரச் சொல்லிவிட்டு, உதயா உள்ளே போய்விட்டாள். சவிதாவுடன் உட்கார்ந்து பேசப் பிடிக்கவில்லையாம்.

அடிக்கடி போட்டுக் கொடுக்கிறவளோடு பேசப் பிடிக்காது தான்.

ஆனால், வருங்கால அண்ணியிடம் பணிந்துதானே ஆக வேண்டும்? கொஞ்ச நாள் முன்பு வரை அப்படி இருந்தவள்தானே, எப்படியெப்படிக் குத்தினாலும், பதில் பேசாமல் சகித்துக் கொண்டு, அதற்கு மேல் உபசாரம் வேறு செய்து கொண்டு...

இப்போது நேர் மாறாகத் திருப்பிக் கொண்டு போகிறாளே...

எல்லாம் இந்த ரதி வளர்த்துவிட்ட திமிர்.

அவள் போன பிறகு, மீண்டும் இந்தச் சவிதாவின் காலடியில்தானே விழுந்தாக வேண்டும். அப்போது வைத்து வாங்க வேண்டும். இருக்கட்டும்.

மகளின் இள ரத்தத்தின் திமிர், பெற்றவளுக்கு இல்லாததால், அன்னபூரணி சவிதாவிடம் வசமாக மாட்டிக் கொண்டாள்.

ஆப்பிள் சாறு, பலகாரங்கள் கொடுத்து உபசரித்ததோடு, அவள் மட்டுமே உட்கார்ந்து பேசவும் நேர, விரைவிலேயே அவளுக்குத் தலைவலி முணுமுணுவென்றது.

தலைவலியைச் சொன்னாலாவது மற்றவள் கிளம்பக் கூடும் என்று பார்த்தால் சவிதா அதற்கும் ஒரு விளக்கம் வைத்திருந்தாள். ரதி மாதிரி, எந்த வித ஒழுங்குக் கட்டுப்பாடும் இல்லாத ஒரு பெண்ணை மாதக் கணக்கில் வீட்டில் வைத்து விருந்தோம்ப நேர்ந்தால், பூமா தேவிக்குக் கூடத் தலை வெடித்து விடுமாம்.

''நம் தலைவிதி, அத்தை. இந்தப் பொறுப்பை இங்கிருந்து நான் ஏற்றுச் செய்ய முடியாமல் மாமா இப்படிப் பண்ணி விட்டார். எங்கள் திருமணம் முடிகிற வரையிலாவது அவர் உயிரோடு இருந்திருக்கலாம். என்ன செய்வது? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!'' என்று ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ஆப்பிள் சாறை அண்ணாந்து கடைசிச் சொட்டு வரை அவள் குடித்து முடித்தபோது, அன்னபூரணிக்கு மெய்யாகவே, தலை வெடித்துவிடும் போல, வலிக்கத் தொடங்கிவிட்டது.

ஆனால் அதை வெளியே சொன்னால் இதே ரீதியில் இன்னமும் ஏதாவது சொல்லுவாளோ என்ற பயத்தில், தைலம்கூடத் தடவிக் கொள்ளாமல் பல்லைக் கடித்துச் சகித்தாள் அன்னபூரணி.

ஆனால் எவ்வளவு நேரம் சகிப்பது?

மணி ஆறாகியும் சவிதா அசையாமல் உட்கார்ந்திருந்து ரதியைப் பற்றி நோண்டி நோண்டிக் கேட்டுக் கொண்டே இருந்தாள்.



''ரதி எத்தனை மணிக்கு வெளியே போனாள்? யாருடன் போனாள்? அந்த தீபன் அவளுடைய காதலனா? அவர்கள் ஏன் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை? ஒருவேளை, வெளிநாட்டில் போல, இருவரும் சேர்ந்து வாழ்கிறார்களா? அவளுடைய அப்பாவுக்கு ரதி இப்படித் தீபனோடு சுற்றுவது தெரியுமா? அவன் வந்து கூட்டிப் போனானா? அல்லது இவளே அவனது ஹோட்டல் அறைக்குப் போய்விடுவாளா? தீபன் தவிர, அவளுக்கு வேறு காதலர்கள் உண்டா?''

''என்னம்மா, இப்படி அசிங்க அசிங்கமாகக் கேட்கிறாய்?'' என்றபோது அன்னபூரணிக்குக் கண்ணீரே வந்துவிட்டது. ''ரதி நல்ல பெண். நீ சொல்லுகிற மாதிரி எல்லாம் எதுவும் கிடையாது!'' என்றாள் வருத்தத்துடன்.

''உங்கள் அண்ணன் பெண் என்பதால், அவளுக்காக என்னிடம் வக்காலத்து வாங்கிப் பேச வேண்டியது அவசியம் இல்லை, அத்தை. நான் உங்கள் மருமகள். எனக்குத் தெரியாமல் போகுமா? எப்படியும் பரம் சொல்லாதிருப்பாரா? பரத்துக்குக் கூட, அவள் நடந்து கொள்ளும் விதம் பிடிக்கவே இல்லை. இவ்வளவு நாள் கட்டிக்காத்த குடும்பப் பெயர் கெட்டுவிடுமோ என்று பயப்படுகிறார். அவளிடம் பேசப் போகிறேன் என்றாரே, சும்மாவே, கோபக்காரர், ரொம்பவும் கத்தி விட்டாரா?'' என்று சவிதா ஆழம் பார்த்தாள்.

முந்திய நாள் மகள் சாப்பிடாமல் எழுந்து சென்றது நினைவு வந்தது அந்தத் தாய்க்கு. தனக்குத் தெரியாமல் தங்கையிடம் கோபித்திருப்பானோ?

மூட்டிவிடத்தான் இவள் இருக்கிறாளே.

நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டபடி, "கோபித்த மாதிரி எனக்கு ஒன்றும் தெரியவில்லையம்மா. ஆனால் ஊர் வாய் பற்றி.. இதற்கு இரை போட வேண்டாம் என்று ரதியிடம் ஏதோ எச்சரித்தான்!" என்றாள் அன்னபூரணி.

அதாவது ரதியை அவன் திட்டவில்லை. திட்டி விரட்டவும் இல்லை.

அதுவும் அவள் அவ்வளவு சொல்லியும்.

என்ன அநியாயம். வருங்கால மனைவியின் சொல்லுக்கு மதிப்பு மரியாதை ஒன்றும் கிடையாதா? முன்னெல்லாம் தம்பியை, தங்கையைத் தட்டி வைக்கவில்லை? இப்போது மட்டும் என்ன இப்படி?

இதுவும் இந்த ரதி வந்த பிறகுதான்.

பரமேசன் ஊர் வாய் என்றதுகூடத் தன்னைத்தானோ என்றிருந்தது அவளுக்கு.

அதுவும் அதே ரதியிடம்.

அவள் மட்டும் வந்து மாட்டினால்...

ரதி இன்னும் திரும்பி வரவில்லை என்பது நினைவு வந்தது.

மணி ஆறாகிறது. இன்னமும் கழுதை எங்கே ஊர் சுற்றுகிறது?

அன்னபூரணியிடம் கேட்டாள். "இருட்டிய பிறகும் வீடு திரும்பக் காணோம்? தினமும் இப்படித்தானா? நீங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும், அத்தை. இல்லாவிட்டால் நான் இருந்து நல்ல புத்தி சொல்லிவிட்டுப் போகிறேன்!"



என்று சவிதா கூறிக்கொண்டு இருந்தபோது கார் சத்தம் கேட்டது.

ஆனால் வந்தது பரமேசன்.

அவனைக் கண்டதும், "என்ன இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீர்கள்? 'ஈசன் மெட்டல்'சுக்குப் போகவில்லையா? ஏன்?" என்று கேள்விக் கணை தொடுத்தாள் அவள்.

"போக வேண்டிய அவசியம் இல்லை. போகவில்லை!" என்று சுருக்கமாகப் பதிலிறுத்திவிட்டு, "ஆனால் இந்த நேரத்தில் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அவன் பதில் கேள்வி கேட்டான்.

"நான் அப்போதே கிளம்பியிருப்பேன். விளக்கு வைக்கிற நேரத்தில் பெண்கள் வீட்டில் இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியாதா? நடக்க வேண்டியபடி நடந்திருந்தால் இங்கேதான் விளக்கேற்றிக் கொண்டு இருந்திருப்பேன். ஆனால் நம் எல்லோரின் கெட்ட நேரம் காரணமாக இப்போது அதற்கு வழியில்லை. அதனால் நானும் அப்பா வீட்டுக்கு அப்போதே கிளம்புவதாகத்தான் இருந்தேன். ஆனால் அந்தப் பெண் ரதியால், அத்தைக்கு ஒரே தலைவலி. அதனால் அவர்களுக்கு ஆறுதலாக இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்!" என்று அவள் கூறவும் தலையில் வலி விண்ணென்று தெறிக்க, அன்னபூரணி முனகினாள்.

"பாருங்கள்!" என்று நாட்டிய பாவனையில் அவன் தாயின் புறம் கையை மட்டும் நீட்டிக் காட்டினாள் சவிதா.

"ரதி என்னதான் செய்து தொலைத்தாள்?" என்று எரிச்சலுடன் கேட்டான் அவன்.

''ஒன்றுமே செய்யவில்லை. வீட்டிற்கு வந்தால்தானே எதுவும் செய்வதற்கு? அவள் இன்னமும் வீடு திரும்ப வில்லை. அதுதான் அத்தையின் கவலை. அந்தத் தீபனோடு ஹோட்டலிலேயே தங்கி விடுவாளோ... எதுவும் தப்புத் தண்டா ஆகிவிடுமோ என்று கவலை!'' என்று சவிதா அளந்தாள்.

''ஒரு தப்பும் நடக்காது!'' என்றாள், அண்ணனின் கார் சத்தத்தைக் கேட்டு அங்கே வந்து நின்ற உதயா.

''அண்ணா! இவ்வளவு நேரம் ரதி ஃபோன் செய்து இருக்கும் இடம் பற்றிச் சொல்லாமல் இருக்கவே மாட்டாள். தீபனுடைய பெரியப்பாவின் அறுவைச்சிகிச்சையின்போது கூட அம்மா கவலைப் படுவார்களே என்று இரண்டு மூன்று மணிக்கு ஒரு தரம் ஃபோன் செய்துகொண்டுதான் இருந்தாள். இன்றைக்குக் காலையில் பத்தரை சுமாருக்குப் போனவளிடம் இருந்து தகவலே இல்லை. அண்ணா! எனக்குப் பயமாக இருக்கிறது!'' என்றாள் உதயா.

''அங்கே இருக்கிற உற்சாக மயக்கத்தில் ஃபோன் பண்ண மறந்திருக்கும்!'' என்றாள் சவிதா.

''என்ன உற்சாகம்? ரதி போனது மருத்துவமனைக்கு. அங்கிளைப் பார்க்க. விஷயம் தெரியாமல் யாரும் எதையாவது உளற வேண்டாம்!'' என்றாள் உதயா ஆத்திரத்தோடு.

''நீதான் உளறுகிறாய். ஃபோன் பண்ண நினைத்தால், முடியாமலா போகும்? அவளது செல்...''

''ரதியின் செல், மருத்துவமனையில் தீபனுடைய அண்ண னிடம் இருக்கிறது.''



''அந்த செல் மட்டும்தானா பேசுவதற்கு? அது போக, ஊரில் எத்தனை பி.சி.ஓ.க்கள். வேண்டியது ஃபோன் பண்ணுகிற எண்ணம் மட்டும்தான். அதுதான் ரதிக்கு அடியோடு இல்லாமல் போயிற்று என்கிறேன். அவளுக்குத்தான் இல்லை என்றாலும், கூட இருக்கிற தீபனுக்காவது அது தோன்றியிருக்க வேண்டாம்? அங்கே அஸ்ஸாமில் என்ன ஆட்டம் ஆடியிருந்தாலும் இங்கே அடுத்தவர் வீட்டில் இருக்கிற பெண் என்பதே இல்லையே. அந்த ஆட்டத்தைத் தடுக்கத்தான் அவள் அப்பா, ரதியை இங்கே கொண்டு விட்டாரோ என்னவோ?'' என்றாள் சவிதா விடாமல்.

''அப்படிக் கிடையாது!'' என்றுவிட்டு, மேலே ஒன்றும் சொல்ல முடியாமல், பெருமூச்சு விட்டபடி, முகம் சிவக்க நின்றாள் உதயா.

அன்னபூரணி தலைவலியின் தாக்குதல் அவள் முகத்தில் தெரிந்தது.

ஒரு பார்வையின் பின், ''அனாவசியக் கற்பனைகள் எதற்கு? விரைவிலே, ரதி வந்து விடுவாள். சவிதா! நீ நேரத் துக்கு வீடு போய்ச்சேர். டிரைவரைக் கார் எடுக்கச் சொல்லு கிறேன், கிளம்பு!'' என்று வீட்டில் காரியக்காரனாகவும், அவசரத்துக்குக் காரோட்டியாகவும் பணிபுரியும் பெருமாளை அழைத்தான்.

எப்படியும் ரதி வந்து விடுவாள் என்பதுதான் சவிதாவுக்கும். அவள் வந்து, தாமதத்தின் காரணமாக ஏதாவது கதை கட்டும்போது, அதை உடைப்பதற்குத் தான் அங்கேயே இருப்பது நல்லது என்று எண்ணினாள். எனவே, ''அத்தைக்குப் பயங்கரத் தலைவலி. இந்த நிலையில் அவர்களை விட்டுவிட்டு,

எப்படிப் போவேன்?'' என்று சோகமாக அன்னபூரணியின் அருகில் போய் நின்றாள்.

ஆனால், ''அம்மாவை உதயா பார்த்துக் கொள்ளுவாள். நீ கிளம்பு!'' என்று சற்று அழுத்தமாகக் கூறிவிட்டு, அவனது அழைப்புக்குப் பணிந்து வந்து நின்ற பெரு மாளிடம், சவிதாவை அவள் வீட்டில் விட்டு வருமாறு பணித்தான்.

இதற்கு மேல் நிற்பதற்குச் சவிதாவுக்குத் தயக்கமாக இருந்தது. அதுவும் சவிதா இருக்கட்டும் என்று அந்தக் கிழவி கூட, ஒரு வார்த்தை சொல்லாமல் அமுக்குப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கும்போது போகாதிருக்க என்ன காரணம் காட்டுவது?

எல்லாவற்றுக்கும் மேலாக, உணவு பற்றிய எண்ணமே யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. பட்டினி கிடக்க அவளால் முடியாது.

இப்போது போனாலும் உதயா முன் உங்கள் சொல்லை மீறிக் காட்டக் கூடாதே என்று போனேன்... அல்லது, அத்தையை விட்டு அசைந்திருப்பேனா என்று சொல்லிக் கொள்ளலாம்.

அவள் கிளம்பிச் சென்ற பிறகு, ''அம்மா, ரதி முட்டாள் அல்ல. காரை அருமையாக ஓட்டுகிறாள். அவளுக்கு ஒன்றும் இராது. பத்திரமாக வீடு வந்து சேருவாள். அனாவசியமாகக் கவலைப்பட்டு, உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நான் முகம் கழுவிவிட்டு வருகிறேன்!'' என்று விட்டு, அவனது அறைக்குள் சென்று ரதியின் செல்லுடன் தொடர்புகொள்ள முயன்றான்.



அந்த செல்லை வைத்திருக்கும் தீபனுடைய அண்ணனிடம் அவளைப் பற்றிய விவரமேனும் பெறக் கூடுமோ என்ற எண்ணம்.

ஆனால் 'பிஸி. சற்றுப் பொறுத்துத் தொடர்பு கொள்ளவும்' என்று தகவல் வரவும், சொல்லி வந்தபடி முகம் கழுவிவிட்டு மீண்டும் தாயிடம் சென்றான்.

அதற்குள், உதயாவும் அதையே முயன்று பார்த்துவிட்டு, அதே பதிலைப் பெற்று முகம் வாடி நின்றாள்.

மகளைப் பார்த்ததும், ''என்னப்பா, ஏதாவது டிஃபன் மாதிரி சாப்பிடுகிறாயா?'' என்று வினவினாள் அன்னை.

''வேண்டாம்மா. உதி! கொஞ்சம் காஃபி மட்டும் குடித்து விட்டு வருவோமா? உங்களுக்கும் கொண்டு வரவாம்மா?'' என்று இலகுவாகக் கேட்டவாறு, தங்கையை அழைத்துக் கொண்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றான்.

தாயின் காது கேளாத தூரம் போனதும், ''ரதிக்கு வேறு சினேகிதங்கள் உண்டாம்மா? தெரிந்தால் சொல்லு. அவர்களுக்கும் ஃபோன் செய்து கேட்டுப் பார்க்கலாம். அம்மா முன்னிலையில் எதுவும் வேண்டாம். இல்லை, இல்லை என்று வர வரக் கலங்கிப் போகிறார்கள். இன்னொரு பெண் மாதிரி அதிகப் பாசம் வைத்து விட்டார்கள்... ஏய்! நீ ஏன் அழுகிறாய்? அம்மாவுக்கு மேல் இருக்கிறாயே. ரதிக்கு ஒன்றும் ஆகாது. கவலைப்படாதே!'' என்று தங்கையைத் தேற்றினான்.

அவள் அமைதி அடையவும், ''என்ன பெண் இவள்? எத்தனை பேரைக் கலக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதே

இல்லாமல்... மணி ஏழு ஆகிறது. இவ்வளவு நேரம் காணோம் என்றால் கவலையாக இராதா? ஒரு வினாடி இதை யோசிக்க வேண்டாம்? பொறுப்புணர்ச்சியே இல்லையே. ரதியிடம் இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை. வரட்டும், நன்றாக டோஸ் விட வேண்டும்!'' என்று ஆத்திரப்பட்டான் பரமேசன்.

தைலத்தைப் பூசிக் கொண்டாளே தவிர, அன்னபூரணியும் ரதிக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந்துதான் இருந்தாள்.

ஷிஃப்ட் முடிந்து, எட்டு மணிக்கு வீடு வந்த லோகேசனும் கவலைப்படுவதில் சேர்ந்து கொண்டான்.

மருத்துவ மனைக்குப் போய்ப் பார்க்கலாமா என்று யோசித்துவிட்டு, அந்த எண்ணத்தைக் கைவிட்டார்கள். பெரிய அறுவைச் சிகிச்சை முடிந்து, அன்றுதான் நாலாவது நாள். அவர்களும் கலங்கி விடக் கூடாதே. அவர்களும் ரதியிடம் அவ்வளவு பாசம் காட்டுகிறவர்கள் தான்.

என்ன செய்வது, எங்கே தேடுவது என்று புரியாமல், வீட்டில் எல்லோரும் பெரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது அவர்களது கவலைக்குக் கொஞ்சமும் குறையாத கவலை கப்பிய முகத்துடன் தீபனும் ரதியும் வந்து சேர்ந்தனர்.

ஓடிப்போய், ''ரதி! உங்கள் இருவருக்கும் ஒன்றும் இல்லையே?'' என்று இருவரையும் மாறிமாறிப் பார்த்தபடி தவிப்புடன் வினவினாள் உதயா.



# 16

உதயா பேசிய மொழியறியாதவள் போலச் சற்று நேரம் திகைப்புடன் ரதி அவளை நோக்கினாள். பிறகே விஷயம் புரிபட, ''ஓ... எங்களுக்கு ஏதோ ஆபத்து என்று எண்ணிப் பயந்து விட்டாயா...'' என்றவள், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''காட்...'' என்று தலையில் பலமாகத் தட்டிக் கொண்டாள்.

''சரியான மட்டித்தனம். ஒரு ஃபோன் செய்து நேரமாகக் கூடும் என்று சொல்லியிருக்க வேண்டும். கவலையும் தவிப்புமாக அங்குமிங்கும் அலைந்ததில் இது மனதில் தோன்றவே இல்லை. சாரிம்மா. ஐயோ, என்னால், அத்தைக்கு வேறு தலைவலி வந்துவிட்டது போலிருக்கிறதே!'' என்று ஓடிப்போய் அன்னபூரணியின் அருகில் அமர்ந்து மென்மையாய், அவள் தலையை வருடி விட்டாள். ''ரொம்ப கவலைப்பட்டு விட்டீர்களா? சாரி, அத்தை!'' என்று வருத்தமும் தெரிவித்தாள்.

''நீ நல்லபடியாக வந்து சேர்ந்ததே அம்மாவின் கவலையைப் போக்கியிருக்கும். ஆனால் நீ கவலையும் தவிப்புமாக அலைந்ததாகச் சொன்னாயே, என்ன விஷயம்? என்ன கவலை?'' என்று பரமேசன் விசாரித்தான்.

தீபனிடம் பேசிக் கொண்டிருந்த உதயா திரும்பி, ''தீபன் பெரியப்பாவுக்குக் கட்டாயமாய் ஏதோ மருந்து வேண்டுமாம் அண்ணா! எங்கு தேடியும் கிடைக்கவே இல்லையாம்!'' என்று பதிலுரைத்தாள்.

"என்ன விஷயம்?" என்று பரமேசன் ரதியைப் பார்க்க, அவள் அதற்குள் தைல பாட்டிலை எடுத்து அன்னபூரணியின் நெற்றிப் பொட்டுகள், முன் நெற்றி என்று சிறு சுழல்களாக மென்மையாகத் தேய்த்து விட்டுக் கொண்டிருந்தாள். கண் மூடி, அதை அனுபவித்த அன்னபூரணி முகத்தில் இருந்த வேதனையின் இறுக்கமும் குறைந்து கொண்டிருந்தது.

பரமேசன் திரும்பிக் கேட்கவும், "அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, அங்கிளின் உடல் நிலையில் எதிர்பாராத ஒரு பிரச்சினை. அதைச் சீர்ப்படுத்துவதற்கு, வேறு சில மருந்துகள் எழுதித் தந்திருக்கிறார்கள். மருத்துவமனையில் இப்போது கையிருப்பில் இல்லையாம். வெளியே வாங்கி வரச் சொன்னார்கள். எங்கெங்கே இது கிடைக்கக் கூடும் என்று சொன்னார்களோ, அத்தனை இடங்களிலும் கேட்டுப் பார்த்து விட்டோம். சற்றுப் பெரியதாகத் தோன்றிய மற்ற மருந்துக் கடைகளிலும் தேடினோம். ஆனால் முக்கியமான ஒரு மருந்து மட்டும் எங்கும் கிடைக்கவில்லை. நாளைக்குக் கட்டாயம் வேண்டுமாம். அது இல்லாமல் ஒன்றும் பயனே இராதாம்!" என்று கவலை கப்பிய குரலில் ரதி விவரித்தாள்.

"நாளைக்கு எப்போது வேண்டுமாம்?"

"காலையில்...!" என்றவள் சட்டென விழி விரிய, "அத்தான், உங்களுக்கு யாராவது... அந்த மருந்து கிடைக்கக்கூடிய இடம் ஏதாவது தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

சட்டெனப் பார்வையை அகற்றிக்கொண்டு, "ஒரு பெரிய ஸ்டாக்கிஸ்ட் தெரியும். மருந்துச் சீட்டைக் கொடுத்தாயானால் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்றான் அவன்.



"என்னிடம் இருக்கிறது. என்னிடம் இருக்கிறது. விலாசம் கொடுங்கள். நான் போய்ப் பார்க்கிறேன்!" என்று பரபரத்தான் தீபன்.

"இல்லை. நான்தான் நேரில் போக வேண்டும். நீங்களும்... வேண்டாம். நாள் முழுதும் அலைந்ததாகச் சொன்னீர்களே, ஏதாவது சாப்பிட்டுவிட்டு இங்கேயே ஓய்வு எடுங்கள். ஒரு வேளை அவரிடம் மருந்து இல்லாவிட்டால்கூடக் காலை விமானத்தில் மருந்தைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்," என்று சொல்லி மருந்துச் சீட்டுடன் சென்றான் அவன்.

புதிதாக வந்திருந்த பார்சலை உடைத்து, தேவைப்பட்ட மருந்தை வாங்கிக் கொண்டு, அவன் வீடு திரும்பியபோது, மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டது.

ஆனால் மருந்து கிடைக்கும் என்பதை முதலிலேயே அவன் ஃபோனில் தெரிவித்து விட்டதால் வீட்டில் எல்லோரும் கவலை அகன்று நிம்மதியோடு இருந்தனர்.

"இதைத்தான் நாங்களும் செய்திருக்க வேண்டும். ஆனால் அண்ணா நகருக்குப் போ... மயிலாப்பூர் பார்... எக்மோருக்குப் போ... ஆழ்வார் திருநகரில் தேடு என்று ஓரோர் இடமாக ஓடி அங்கேயும் இடத்தைக் கண்டுபிடிக்க அலைந்து கடைசியாக இல்லை என்ற பதிலோடு திரும்பி இன்னோர் இடத்தை நாடிச் செல்லும்போது வேறு எதுவும் நினைவே வரவில்லை. ஆனால் ரொம்ப சாரி, அத்தை. எப்படியும் உங்களைப் பற்றி நான் யோசித்திருக்க வேண்டும்!" என்றாள் ரதி.

"இல்லை ரதிம்மா. உன்னைப் பொறுத்த வரையில் நியாயமான காரணம் ஏதாவது இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால்..."

''மென்று முழுங்காமல் சும்மா சொல்லுங்கள், அம்மா. சவிதா மாலை ஏழு மணிக்குப் பிறகுதான் போகிறாள். அவ்வளவு நேரம் அவள் பேச்சைக் கேட்டுச் சகித்து, அதில் தான் தலைவலி. இப்போதே இப்படி. வீட்டுக்குள்ளேயே வந்து விட்டால், அம்மா நிரந்தர நோயாளிதான்!'' என்று உதயா படபடப்பதை ''ஷ்'' என்று அடக்கினான் லோகேசன்.

''நீ கத்துவதைப் பார்த்து, மிஸ்டர் தீபன் பயந்துவிடப் போகிறார்!'' என்று ஜாடையாக எச்சரித்துவிட்டு, ''அம்மா, எனக்குப் பசிக்கிறதே. இவ்வளவு நேரம் ஏதேதோ கவலையில் பசி மந்தித்து இருந்தது. இப்போதுதான் எல்லாக் கவலையும் தீர்ந்து விட்டதே. இனிச் சாப்பாட்டைப் பார்க்கலாமா? வாருங்கள், தீபன், சாப்பிடலாம். பகல் முழுதும் நீங்கள் பட்டினிதான் என்று நினைக்கிறேன்,'' என்றான், தொடர்ந்து.

''பரமேசன் சாரும் வந்து விடட்டுமே...'' என்று தயங்கியவனை வற்புறுத்திச் சாப்பிட வைத்தனர்.

பேசிக் கொண்டு இருந்தபோது, அஸ்ஸாமில் தங்கள் குடும்பங்கள் நெருங்கிப் பழகி வாழும் விதம் பற்றித் தீபன் கூறினான். ''அதிலும் ரதி எங்கள் பெரியவர்கள் எல்லோருக்கும் செல்லம். அவள் இங்கே வந்து விட்டது எங்களுக்கு ரொம்ப வருத்தம்தான். இங்கே உங்கள் சமூகக் கட்டுப்பாடுகள் எப்படியோ என்று ஒரு பயம் இருந்தது. ஆனால் இப்போது அந்தப் பயம் போய்விட்டது.''

உரியவாறு லோகன் பதில் சொல்ல, மருந்துக்காகக் காத்திருந்த நேரம் இதமாகக் கழிந்தது.



மருந்தை வாங்கிக் கொண்டு பல தரம் நன்றி தெரிவித்து விட்டுத் தீபன், ரதியின் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ரதி நன்றி தெரிவிக்க முயன்றபோது, ''அள்ளிக் கொடுக்கிறதே என்று வாய் கைக்கு நன்றி தெரிவிக்கக் கூடாது என்று நீதானே சொன்னாய்? அத்தோடு யாருக்கு உதவி போய்ச் சேருகிறதோ அவர் ஏற்கெனவே நன்றி தெரிவித்துவிட்டார். அதற்கு மேல் நீ எதுவும் சொல்லத் தேவையில்லை!'' என்று ஒரு மாதிரிக் குரலில் சொல்லிவிட்டுப் போய்விட்டான் அவன்.

மறுநாள் சவிதாவைத் தவிர்க்கப் பரமேசன் எவ்வளவோ முயன்றபோதும் அட்டையாய் வந்து ஒட்டிக் கொண்டு ரதியைப் பற்றிக் கேட்டாள் அவள். ''அப்படி எங்கே போய்ச் சுற்றினார்களாம்?''

''மருந்துக் கடைகளில்!'' என்றான் அவன்.

அவளது நம்பாத பாவனையைக் கண்டதும், ''தயவு பண்ணி, அவசரப்பட்டு ஏதேனும் சொல்ல வேண்டாம், சவிதா. மருந்துச் சீட்டைக் கொண்டு போய்க் கடைசியாக அந்த மருந்தை வாங்கிக் கொடுத்தவன் நான்!'' என்று பரமேசன் ஒரு மாதிரிக் குரலில் கூறவும், சவிதா சுதாரித்தாள்.

''என் பயம் வேறு, பரம்!'' என்றாள் பெரும் அபாயத்தை அறிவிக்கும் குரலில். ''ரதியும் உதயாவும் கிட்டத்தட்ட சம வயதுப் பெண்கள். எந்த விதக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் ரதி சுதந்திரமாக இன்னோர் ஆண் மகனோடு சுற்றுவதைப் பார்த்து நாமும் இப்படிப் போனால் என்ன என்று உதயாவுக்குத் தோன்றுமே என்பதுதான். சொன்னால் அத்தை

பார்த்துக் கொள்வார்கள் என்பீர்கள். ரதி சொல்லிச் சொல்லி அத்தையே இந்த தீபனை வீட்டு ஆள் மாதிரிதான் நடத்துகிறார்கள். அதைப் பார்த்து... பரம், உங்கள் தங்கை என் தங்கை மாதிரி. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் பரம். தீபனிடம் உதயா பேசிப் பழகாமல் மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள். ரதியையும், தீபனையும் ஜோடி சேர்த்து, அங்குள்ள நண்பர்கள் அத்தனை பேரும் பேசுகிறார்கள். நெருப்பு இல்லாமல் புகையுமா? இடையில் உதயா வின் உள்ளம் உடைந்து விடக் கூடாது. அதனால்தான் இவ்வளவு சொல்லுகிறேன். தப்பாக எண்ணாதீர்கள்!" என்றாள் கெஞ்சலாக.

அவளுக்குப் பதிலேதும் சொல்லாவிட்டாலும், முன்தினம், உதயா தீபனிடம் விவரம் கேட்டுச் சொன்னது அவனுக்கு நினைவு வந்தது. பிறகும், அவனுக்குத் தேவையானதை எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்த மாதிரிகூட ஞாபகம்.

கவனிக்க வேண்டும் என்று எண்ணினான் அவன்.

அதற்கான வாய்ப்பும் உடனே கிட்டியது.

'ஈசன் மெட்டல்'சைப் பெரும்பாலும் இப்போது லோகேசனே கவனித்துக் கொண்டதால், மாலையில் சற்றுச் சீக்கிர மாகப் பரமேசன் வீடு திரும்புவது வழக்கமாகிக் கொண் டிருந்தது.

அன்று அப்படிச் சென்றபோது ஹாலில் ரதி மட்டும் கையைக் கட்டிக் கொண்டு தனியே அமர்ந்திருந்தாள்.

"என்ன... கூடத் தீபன் வரவில்லையா?" என்றான் சற்றுக் கிண்டலான குரலில்.



"வந்திருக்கிறானே!" என்று அவள் கள்ளமற்று, கண்கள் அகலக் கேள்வியாய்ப் பார்த்ததும், "ஒன்றுமில்லை. அவ னுடைய பெரியப்பாவுக்குப் பரவாயில்லையா என்று கேட்க நினைத்தேன். அவ்வளவுதான்!" என்றான் அவன் சமாதானமாக.

சட்டென ரதியின் கன்னங்கள் குழிந்தன. "தாராளமாகக் கேட்கலாம். ஆனால் இப்போது போய்க் கேட்பதை விடுத்து, சற்றுத் தாமதமாகப் பேசுவது இங்கிதமாக இருக்கும்!" என்று சிரிப்போடு கூறினாள்.

"இங்கிதமா? என்ன உள... என்ன பேச்சு இது?"

"ம்ம்ம்..." என்று அவனை ஏற இறங்கப் பார்த்தாள் ரதி.

பிறகு, "பரமேஷ்! சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு, அடிதடி என்று போகிற ரகம் இல்லையே, நீங்கள்? சற்றுப் பரந்த மனமும் உண்டுதானே?" என்று கேட்டுக்கொண்டு அவனை ஜன்னல் அருகே அழைத்துச் சென்றாள்.

அவள் சுட்டிக் காட்டிய இடத்தில் தீபனும், உதயாவும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ சொல்லிவிட்டு, உதயாவின் நெற்றிக் கூந்தலை மென்மையாக ஒதுக்கி விட்டுக் கொண்டிருந்தான் தீபன்.

ஒரே பார்வையில் விஷயம் தெளிவாகத் தெரிந்தது.

கைவிரல்கள் முஷ்டியாய் இறுகிய போதும், பரமேசன் எதுவும் பேசாமல் ரதியைப் பார்த்தான்.

"தீபன் நல்ல பையன். கெட்ட பழக்கம் எதுவும் கிடையாது. வளத்துக்கும் குறைச்சல் இல்லை. டீயில் வந்த பணத்தைக் கொண்டு அங்கங்கே பெரிய சூப்பர் மார்க்கெட்டுகள் வைத்து,

லாபகரமாக நடத்துகிறார்கள். ஆனால், அங்குள்ளவன். அதில் அத்தைக்கு ஆட்சேபம் இல்லையாம். நானே பாதி வேறுதானே. ஆனால் நீங்கள் என்ன சொல்லுவீர்களோ என்றுதான் யோசிக்கிறார்கள். என்ன சொல்லுகிறீர்கள், அத்தான்?''

அவளை நேரே பார்த்து, ''எல்லோரும் வேறு விதமாகக் கேலி பேசினார்களே?'' என்று வினவினான் அவன்.

''அதெல்லாம் சும்மாயா. சேர்ந்து வளரும்போது பொருத்தமான வயதில் இருப்பவர்களை ஜோடி சேர்த்துக் கேலி பண்ணுவது எங்கும் வழக்கம்தானே! ஒரு வேளை மனதில் ஏதாவது சலனம் இருக்குமோ என்று அப்பாவும் அங்கிளும் எங்களிடமே நேரிலும் கேட்டார்கள். உடன் பிறந்தவர்கள் மாதிரிச் சேர்ந்து வளர்த்துவிட்டு, இந்தப் பேச்சே கூடாது என்று நாங்கள் இருவருமே சொல்லிவிட்டோம். அப்புறம்தான், அப்பா என்னை இங்கே விட்டுவிட்டு வெளிநாடு சென்றார்!'' என்றாள் ரதி. உடனேயே, ''என்ன அத்தான், உதயா - தீபன் விஷயம் உங்களுக்கும் சம்மதம்தானே?'' என்று ஆவலாகக் கேட்டாள்.

ஒரு விநாடி தயங்கிவிட்டு, ''வேறு வழி? மறுத்துப் பேசினால் பரந்த மனம் இல்லை என்று முத்திரை குத்தி விடுவாயே!'' என்று இலகுவாகப் பேசுவது போலத் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டுத் தாயைத் தேடிப் போனான் பரமேசன்.

யோசனையோடு அவன் முதுகைப் பார்த்தபடி நின்றாள் ரதி.

இந்த விஷயம் தெரியவந்தபோது சவிதா அப்படியே ஆடிப் போய்விட்டாள்.



எவனோ ஒருவனை மணந்து கொண்டு உதயா எங்கோ கண்காணாத தூரத்துக்குப் போய்விடுவது பற்றி, அவளுக்கு ஒன்றும் இல்லை. அவன் வசதி உள்ளவனாக இருக்கிறானே என்பது மட்டுமே வருத்தமாக இருந்தது. மற்றப்படி போய்த் தொலைகிறது என்று விட்டுவிட அவள் தயார்தான்.

ஆனால் இது ரதியால் வந்த சம்பந்தம்.

இந்த ஒன்றே, சவிதா இந்தத் திருமணத்தை ஆட்சேபிக்கப் போதுமானதாகாதா?

திருமணத்தைத் தடுத்தே தீரவேண்டும் என்ற வேகத்தில், ''வேண்டாம், பரம். இதற்கு நீங்கள் சம்மதிக்காதீர்கள். உங்கள் மாமா வேற்று மொழிப் பெண்ணை மணந்ததால் வந்த வினையே போதும்...'' என்று சொல்லிக் கொண்டு போனவளைக் குறுக்கிட்டு, ''மாமாவின் திருமணத்தால் என்ன துன்பம் வந்து விட்டது என்கிறாய்?'' என்று நிதானமாகக் கேட்டான் பரமேசன்.

என்ன முட்டாள் தனமாகக் கேட்கிறாய் என்பது போலப் பார்த்து, லேசான முறுவலுடன், ''ரதி'' என்றாள் அவள். ''நமக்கெல்லாம் வழி வழியாக வந்த பண்பாடு, ரத்தத்திலேயே ஊறி, ஒழுங்காக நடக்க வைக்கிறது. அவளைப் பாருங்கள். இரண்டு இனங்களின் கலப்பு என்கிறபோது எந்தவிதப் பண்பாடும் இல்லையே. சும்மா மனம் போனபடியல்லவா சுற்றுகிறாள். அவளால் எல்லோருக்கும் தொல்லைதான். அன்றைக்கு அத்தைக்குத் தலைவலி...''

''போதும்...'' என்றான் பரமேசன்.

உறுமலாக வந்த வார்த்தையில் சவிதா திகைத்து விழிக்க, அவன் தொடர்ந்து பேசினான். ''ரதியைப் பற்றி ஒரு வார்த்தை

குறை சொல்ல, யாருக்கும் தகுதியில்லை. தெரிந்து கொள். அவள் வந்த பிறகுதான் எங்கள் வீட்டில் சிரிப்புச் சத்தம் கேட்கிறது. பொறுப்புணர்ந்து, லோகன் ஒழுங்காக வேலை பார்க்கிறான். உதயாவுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைய அவளே காரணம். மனதாலும், உடலாலும் அம்மாவும் எவ்வளவோ தேறியிருக்கிறார்கள். வீடு, மறுபடியும் வீடாக மாறியிருப்பதே, அவளால்தான். உனக்குக் கொஞ்சமேனும் மூளையிருந்தால் அவளைப் பார்த்து, நீ படித்திருப்பாய். அதை விட்டு அவளைப் போய்... சே...!'' என்றவன், அதற்கு மேல் அங்கே நில்லாமல் எழுந்து சென்று விட்டான்.

ஏதேதோ எண்ணங்கள் ஓடச் சவிதா வெகு நேரம் அசையவே இல்லை.

அதன் பிறகு அவள் எழுந்து சென்ற இடம் அவள் வீடு அல்ல.

## 17

இப்போதெல்லாம், ஒரு நாள்கூட சவிதாவால் நிம்மதியாக இருக்க முடிவதே இல்லை. பரமேசனின் வீட்டில் ரதி என்னென்ன குளறுபடிகள் செய்து வைத்திருக்கிறாளோ என்று அதே எண்ணம், அதே கவலை.

அவள் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பரமேசனுக்கும், அந்த வீட்டின் மற்ற அங்கத்தினருக்கும் இடையே ஒரு பிளவை உண்டாக்கி வைத்திருந்தாள்.

இந்த ரதி வந்து அதை அப்படியே தகர்த்து எறிந்துவிட்டாள். இப்போது, வீட்டில் எல்லோரும் தங்கு தடையின்றிப் பேசுகிறார்கள். பேசிச் சிரிக்கிறார்கள்.



ஆனால் அவளிடமோ பரமேசன்கூட, நின்று பேசக் காணோம். இத்தனைக்கும் முன்பு அவள் சொல்வதையெல்லாம் வருத்தத்துடன் கேட்டுப் பெருமாள் மாடு மாதிரித் தலையாட்டிக் கொண்டிருந்தவன்.

எல்லாம் ரதியின் குறும்புத்தனம் என்பதில் அவளுக்குக் கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

ஆனாலும், தனக்கும் பரமேசனுக்கும் நடக்க இருக்கும் திருமணத்தைப் பற்றி, எந்த விதச் சந்தேகமும் சவிதாவுக்கு இன்று வரை வந்தது கிடையாது.

அவனுடைய தம்பி, தங்கையைப் பற்றிய தன் திட்டத்தை அடியோடு கெடுத்து விட்டாளே என்கிற ஆத்திரம்தான். என்றோ இவள் போன பிறகு, மீண்டும் அடியிலிருந்து தொடங்கிச் செய்ய வேண்டுமே என்கிற எரிச்சல்தான்.

ஆனால், பரமேசன் ரதியைத் தாங்கிப் பேசிய விதம், அஸ்திவாரத்தையே ஆட்டி வைத்துவிட்டது.

பரமேசனுக்கும், அவளுக்கும் திருமணம் நிச்சயம்தான் ஆகியிருந்தது. திருமணம் இன்னமும் நடக்கவில்லை.

அது நடக்காமல் போய்விட்டால்? போய்விடக்கூடும் என்ற பயம் வந்தது. தாலி கட்டும் தருணத்தில்கூட எத்தனை கல்யாணங்கள் நின்று போகின்றன. இங்கே நடந்தது, வெறும் நிச்சயம்தானே. நிறுத்தி விட்டால்?

எவ்வளவு பணம், எத்தனை நகைகள்!

நிச்சயத்தன்று போட்ட மோதிரம், என்ன விலை! பத்துப் பவுன் சங்கிலி வேறு. அன்னபூரணி தன் கையால் போட்டாளே!

இதெல்லாம் அச்சாரம் மட்டுமே.

மீதியும் கைக்கு வருமுன்னரே, மகராஜன் செத்துத் தொலைத்து... சே!

இப்போது இப்படி நடுங்க வேண்டியதாகி விட்டதே.

பெருமுயற்சி செய்து மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று சவிதா யோசித்தாள்.

எது, என்ன ஆனாலும், இந்தப் பணம், நகை வசதிகளை அவள் கைநழுவ விடுவதாக இல்லை.

அவைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக என்ன செய்யவும் அவள் தயார்.

பெண்ணுக்குப் பெண்ணாய், ரதியை வெல்லுவது கடினம். எல்லா வகையிலும் அவள் கெட்டிக்காரியாக இருந்தாள்.

புத்திசாலியாகவும் துணிச்சல்காரியாகவும்கூட.

மற்றப்படி, திருமணம் நிச்சயமான ஒருவனைக் கைக்குள் போட்டுக் கொள்ள முடியுமா?

அவளை இங்கிருந்து அகற்றுவதற்கு, இன்னோர் ஆளின் துணை வேண்டும்.

அந்த இன்னோர் ஆள், அவள் சொல்படி கேட்பவனாகவும் இருக்க வேண்டும்.

நன்கு ஆலோசித்து விட்டுச் சவிதா நந்தகுமாரைத் தேடிப் போனாள்.

வீட்டில், அவளுக்கு எத்தனையோ வேலைகள் இருந்தன. முக்கியமாக அவளுடைய தந்தைக்கு இரவு உணவு தயார்



பண்ண வேண்டியிருந்தது. சாப்பாடு இல்லாவிட்டால், அல்சர் நோயாளியான அவர் வலியில் மிகவும் கஷ்டப்படுவார். ஆனால் சவிதாவுக்கு அதை நினைத்துப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் பட்டினியில், ஒன்றும் ஆகிவிட மாட்டார் என்று எண்ணியவளாய், நந்தகுமாரிடம் சென்றாள்.

வியப்பும் ஆவலுமாக அவளை வரவேற்ற நந்தகுமார், சவிதா சொன்னது முழுவதையும் கேட்ட பிறகு, அவளது விருப்பப்படி நடக்கத் தயாரானான்.

அந்தப் பத்துப் பவுன் சங்கிலியை விற்கச் சவிதாவுக்குக் கொஞ்சமும் மனமே வரவில்லை. ஆனால், அவளது திட்டம் நிறைவேற வேண்டுமானால், அதற்கு நிறையப் பணம் தேவைப்பட்டது. எனவே, செல்வம் கொழிக்கும் எதிர் காலத்துக்கான முதலீடாகக் கருதி, நகையை விற்றுப் பணத்தைத் தயார் செய்தாள் அவள். வீட்டுச் செலவில், பொய்க் கணக்குச் சொல்லித் தந்தையை ஏமாற்றிச் சேர்த்து வைத்திருந்த பணமும் இருந்தது.

புதுப்புது உடைகள் வாங்க வாங்க நந்தகுமாருக்கு உற்சாகம் அதிகரித்தது.

''கரும்பு தின்னக் கூலி மாதிரிக் கதையாக இருக்கிறதே!'' என்று சிரித்தான்.

''கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம். ஆனால் நம் இருவருக்குமே கரும்பும் கிடைத்து, தின்னக் கூலியும் கிடைக்க வேண்டும் என்றுதான் இந்தப் பாடுபடுகிறேன்!'' என்றாள் சவிதா.

''அப்படி மட்டும் ஆகிவிட்டால்?''

கனவில் ஆழ்ந்தான் அவன்.

தட்டி எழுப்பி, ''சும்மா கனவு கண்டு பயனில்லை. இன்று பரமேசன் வீட்டுக்குப் போகிறோம். சரியாக நடிக்க வேண்டும்!'' என்றாள் அவள்.

''நடிப்பைப் பற்றி என்னிடம் சொல்லுகிறாயா?'' என்றான் நாடகங்களில் இரண்டாம் தரப் பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருந்த நந்தகுமார்.

நடிப்பில் தலை தூக்கி விட்டால், செய்து கொண்டிருந்த பிசாத்து வேலையை விட்டொழித்து விடலாமே என்ற ஆசை அவனுக்கு. அப்படியே சின்னத் திரையில் புகுந்து ஒரு கலக்குக் கலக்கி விடலாம்.

ஆனால் இந்த நிச்சயமற்ற புத்திதான் விலகி, வேறு முடிவு எடுக்கச் சவிதாவைத் தூண்டிய ஒரு காரணம். பரமேசனின் பணமும்.

கன கச்சிதமாக உடையணிந்திருந்த நந்தகுமாரை அழைத்துக் கொண்டு, சவிதா பரமேசனின் வீட்டுக்குச் சென்றாள்.

''அம்மா வழி உறவினர். மும்பையில் பெரிய தொழில். நண்பரின் திருமணம் என்று இங்கே வந்தவர், எங்களைப் பார்க்க வீட்டுக்கு வந்தார். இங்கே வருவதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்தேனா? அப்படியே கூட்டி வந்தேன். எங்கள் தேனிலவின்போது மும்பையில் இவரது வீட்டில்தான் தங்க வேண்டுமாம். ஒரே பிடிவாதம்!'' என்று அளந்தாள்.

''வீட்டையே உங்களுக்குத் தந்துவிட்டு நான் தாஜ் அல்லது ஷெராட்டனில் தங்கிக் கொள்கிறேன்!'' என்றான் நந்தகுமார்.



''இருக்கட்டும் நந்து. திருமணத்துக்குத்தான் இன்னமும் ஏழு மாதங்கள் இருக்கின்றனவே. என்ன அவசரம்?'' என்றாள் சவிதா அவனையே பார்த்து.

ஏதோ குறிப்புக் கிடைத்தாற்போல, ''இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஆன்ட்டி, நீங்களே சொல்லுங்கள். உங்கள் கணவரே விரும்பி ஏற்பாடு செய்த கல்யாணம்தானே? அவர் இறந்ததால், ஒருவரை ஒருவர் அடையத் துடிக்கும் இருவரைப் பிரித்து வைப்பது, அவருக்கே பிடிக்கும் என்றா சொல்லுகிறீர்கள்? பாவம். ஆவி உருவத்திலும் அவரை வருத்தப்பட வைக்கிறீர்களே!'' என்று சோகமாக உச்சுக் கொட்டினான்.

வெட்கமாய்ச் சிரித்து, ''ஷ். நந்து... சும்மாயிரு. யாராவது கேட்டால் நாங்கள் இருவரும் திருமணத்துக்காகப் பரப்பதாகச் சொல்லுவார்கள். எல்லாம் நடக்கிற நேரம் நடக்கட்டும். என் வருத்தம் எல்லாம் அத்தை கூடவே இருந்து உதவி பண்ண முடியவில்லையே என்பதுதான். ஆனால் நல்ல வேளை. இந்த நேரம் ரதியாவது அவர்களுக்குத் துணையாக இருக்கிறாளே!'' என்று அங்கே வந்து கொண்டிருந்த ரதியைக் காட்டி, யார் என்ன என்று அறிமுகமும் செய்து வைத்தாள்.

சிறு புன்னகை செய்து, கரம் குவித்தாள் ரதி.

''ஐயோ!'' என்றான் நந்தகுமார், திகைத்த தோற்றத்துடன். ''ஏய், சவி. இதென்ன அதிசயம். இங்கே, இவ்வளவு அழகுப் பதுமை மாதிரி, பெயருக்கு முழுமையான நூறு சதவிகிதப் பொருத்தமாக ஒரு பெண் இருக்க முடியுமா? என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று உணர்ச்சியோடு பேசினான்.

தலை சரித்து நோக்கி, "ரொம்ப அதிகமாகப் பேசுகிறீர்களே, மிஸ்டர் நந்தகுமார்!" என்று கிண்டலாகச் சிரித்தாள் ரதி. "கண்ணாடியில் நான் என்னைப் பார்த்திருக்கிறேன், தெரியுமோ?"

"நந்து! பெண்களை நிமிர்ந்தே பாராத நீயா?" என்றாள் சவிதா, திகைத்தவளைப் போல. "எனக்குக் கூட, இவன் சற்று அதிகப்படியாகப் பேசுவது போலத்தான் தோன்றியது, ரதி. ஆனால் உலகப் பேரழகி யார் என்பது பற்றி ஒன்று சொல்வார்கள் தெரியுமா? உண்மைக் காதல் உள்ள கணவனுக்கு மனைவிதான் உலகத்திலேயே சிறந்த அழகியாகத் தோன்றுமாம். ஒரு பார்வையிலேயே என் அண்ணன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டாயோ என்னவோ!" என்று கேலி போலப் பேசிச் சிரித்தாள்.

ஒரு கணம் நேராகக் கூர்ந்து நோக்கிவிட்டு, "எதற்கும் உங்கள் இதயத்தை மார்பெலும்புக் கூட்டின் உள்ளேயே பத்திரமாகப் பூட்டி வைத்திருங்கள், நந்தகுமார் இப்படி இலகுவாகக் கோட்டை விடுவது முட்டாள்தனம்!" என்றுவிட்டு, "உதி! வா... உன்னைக் கல்ச்சுரலில் விட்டுவிட்டு, நாங்கள் மருத்துவமனைக்குப் போய்விட்டுத் திரும்ப அழைக்க வருகிறோம். கொஞ்சம் தாமதம் ஆனாலும், அங்கேயே இரு!" என்ற ரதி, சவிதாவிடம் திரும்பினாள்.

"வருகிறோம், சவிதா. அத்தை கொஞ்சம் டல்லாக இருக்கிறார்கள். அதனால், அவர்களிடம் அதிகம் பேச்சுக் கொடுக்காதீர்கள். அத்தை! சவிதா தப்பா எடுத்துக் கொள்ள மாட்டார்கள். நீங்கள் போய்ப் படுங்கள்!" என்று விட்டு, தீபன், உதயாவை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.



என்ன நாசூக்காய்த் தன்னையும் தான் அழைத்து வந்தவளையும் விரட்டுகிறாள் என்று உள்ளே கொதித்தபோதும், "இந்த வீட்டில் எனக்குச் சொல்ல வேண்டுமா? நீ போய் வா ரதி!" என்று விடை கொடுத்துவிட்டு, அன்னபூரணியிடம், "எல்லாம் உங்களால் வந்தது. உங்கள் உபசாரத்தில் வீட்டு மருமகள் நான், அவள்தான் விருந்தாளி என்பதே ரதிக்கு மறந்துவிட்டது. பரவாயில்லை. நீங்கள் போய்ப் படுங்கள் அத்தை. நந்துகூட ஏதோ ஷாப்பிங் போகவேண்டும் என்றான் வரட்டுமா?" என்று கிளம்பிச் சென்றாள்.

"பார்த்தாயா? எப்படி நம்மை வேண்டாத விருந்தாளியாக்கிக் கிளம்ப வைத்தாள். இவளைத்தான் நாம் ஜெயிக்க வேண்டும்!" என்றாள் நந்தகுமாரிடம்.

உதயாவை விட்டுவிட்டு மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில், "ரதி! இந்த நந்தகுமார் மும்பைக்காரனே இல்லை. இவனை நான் இங்கேயே பார்த்திருக்கிறேன்!" என்றான் தீபன்.

"மண்டு! அவன் ஏதோ திருமணத்துக்காக இங்கே வந்திருப்பதாகத்தானே சொன்னார்கள். பிறகு அவனை இங்கே பார்ப்பது பெரிய விஷயமா? மக்கு, மக்கு!" என்று ரதி நகைத்தாள்.

"உலகத்திலேயே நீ ஒருத்திதான் புத்திசாலி என்று எண்ணமா? எங்கள் சூப்பர் மார்க்கெட்டுக்காக, ஒரு தினுசான கைத்தறித் துணி வாங்கப் போயிருந்தேன். அங்கே இவன் டைப்படிக்கிற வேலை செய்து கொண்டிருந்தான். சந்தேகத்துக்கு அவனிடம் குயின்ஸ் நெக்லஸ் பார்த்தீர்களா என்று இப்போது கேட்டதற்கு, அது ஏதோ அரும் கலைப் பொருள் என்று எண்ணிக் கொண்டு மியூசியத்துக்கெல்லாம் போகத் தனக்கு

நேரம் கிடையாது என்கிறான். அது, ஆர வடிவத்தில் இருக்கும் வெறும் விளக்கு வரிசை என்பதுகூடத் தெரியவில்லை. இவன் மும்பைக்காரனும் இல்லை. மும்பையைப் பற்றி அறிந்தவனும் இல்லை. இதில் ஏதோ சதித் திட்டம் இருக்கிறது!'' என்றான் தீபன் தெளிவாக.

யோசனையில் ஆழ்ந்த ரதியின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன.

அதைக் கவனித்து, ''என்ன?'' என்று கேட்டவனிடம், ''சாலையைப் பார்த்து ஓட்டுப்பா. எங்காவது முட்டி, மோதி என் அழகான ரதி முகத்தில் காயம் பட வைத்துக் காரியத்தைக் கெடுத்துவிடாதே!'' என்று சிரித்தாள் அவள்.

''எந்தக் காரியத்தை?'' என்ற கேள்விக்கு அவள் பதிலே சொல்லவில்லை.

மருத்துவமனையில் தீபனுடைய பெரியப்பா எழுந்து உட்கார்ந்து இருந்தது, எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது.

தன் உயிர் காத்த மருந்துக்காகப் பரமேசனுக்கு நன்றி தெரிவிக்குமாறு பெரியவர் ரதியிடம் சொல்லிக் கொண்டு இருந்தபோது தீபன் தன் அண்ணனிடம் தனியே பேசினான்.

மருத்துவமனையிலிருந்து திரும்பி, உதயாவை அழைக்கச் செல்லும்போது, ''நல்ல வேளையாக உதயா முன்னிலையில் இது பற்றிப் பேசாமல் இருந்தாய், தீபு. இனியும் அப்படியே இருந்துவிடு. இந்த சவிதா அப்படி என்னதான் திட்டம் போட்டிருக்கிறாள் என்று நாமே கண்டு பிடிப்போம்!'' என்றாள் ரதி.



''எதற்கு வம்பு? இப்போதே அந்தப் போலியை வெளிப்படுத்தி விட்டால் என்ன?'' என்று தீபன் கேட்டான்.

''மகா புத்திசாலி. இப்போது சொன்னால் நந்தகுமார் தன்னையும் ஏமாற்றி விட்டதாகச் சவிதா சாதித்து விடுவாள். நாம் கண்டு கொள்ளாத மாதிரி இருந்தால்தான் சதியில் அவளது பங்கையும் சேர்த்து வெளிப்படுத்த முடியும்!'' என்றாள் ரதி.

''ம்ம்ம்... சவிதா எப்படிப் போனால் நமக்கு என்ன...'' என்று அவன் யோசிக்கவும், ''இதோ பார், அந்த சவிதா அத்தையை என்ன பாடு படுத்துகிறாள் என்று உனக்குக் கூடப் புரியும் என்று நினைக்கிறேன். அவளிடமிருந்து உன் வருங்கால மாமியாரைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்று கேட்டாள் ரதி.

அவளைத் திரும்பிப் பார்த்து, ''என் மாமியார் மட்டும் தானா? அல்லது மாமியாரை மட்டும்தானா?'' என்று பூடகமாகக் கேட்டான் தீபன்.

லேசாகச் சிவந்த கன்னங்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு, ''சாலையைப் பார்த்து ஓட்டுப்பா என்று முன்பே சொன்னேன்!'' என்றாள் ரதி.

தொடர்ந்த சில நாட்களில் நந்தகுமாரும், சவிதாவும் தினமும் பரமேசனின் வீட்டுக்குச் சென்றார்கள்.

நந்தகுமாரின் கண்கள் ரதியை விட்டு அகலாமல் அவளையே சுற்றி வந்தன. இயன்றவரை, அவளோடு பேசிய வாறு, அவனும் அவள் அருகிலேயே இருக்க முயன்றான்.

சின்னச் சின்ன மலர்ச் செண்டுகள், அலங்கார வசனங்கள், கச்சிதமான அலங்காரத்துடன் கூடிய தோற்றம், எல்லாமே ரதிக்கும் பிடித்துப் போன மாதிரித் தோன்றியது.

எவனையோ அழைத்து வருகிறாயே என்று பரமேசன் வெடுவெடுத்தபோது, "ரதிக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று அவளுடைய தந்தை சொன்னார் என்று அத்தை கூறினார்கள். நந்து பெரிய தொழில் அதிபன், படித்தவன் மாதிரிதான் தோன்றுகிறது. அப்புறம் உங்களுக்கு என்ன ஆட்சேபம்?" என்று சவிதா புருவம் உயர்த்திக் கேட்டபோது அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

வாய் திறவாமல் விலகிப் போனவனைப் பார்த்து, ஆங்காரமும், எக்களிப்புமாகச் சிரித்தாள் அவள். பொறுப்பு மிக்க குடும்பத் தலைவன். வீட்டுப் பெண்ணின் பேர் கெட்டு விடக் கூடாதே என்று அவ்வளவு கவலை. அவள் தீபனைப் பற்றி எச்சரித்தபோது, பரமேசன் நடந்து கொண்ட முறை நினைவு வர, அவளது ஆங்காரம் அதிகமாயிற்று.

அவனை மட்டும் ஒத்துக் கொண்டானே. ரதி அறிமுகப் படுத்திய ஆள் என்பதாலா? பொல்லாத ரதி. அவள் சொல்வது மட்டும் வேதமாகி விடுமா?

இருக்கட்டும். எல்லாவற்றுக்கும் திருப்பிக் கொடுக்கிறேன் என்று கறுவினாள் அவள்.

## 18

எந்த ஒரு திட்டத்துக்கும் ராஜ பாட்டை அமைந்து விடாது.

நன்மையைக் கருதிப் போடப்படும் திட்டங்களுக்கே அப்படித்தான் என்றால் மற்றது எவ்வளவு சிரமப்படும்?

சவிதாவின் திட்டமும் தட்டுத் தடுமாறலாயிற்று.



முதல் சிக்கல், அவள் எதிர்பார்த்தது போலப் பரமேசன் மூலமாக, ஆனால் அவள் எதிர்பாராத விதத்தில் வந்தது.

இரண்டு நாட்கள் ரதியும் நந்தகுமாரும் பேசிப் பழகுவதை மௌனமாகக் கவனித்தவன், அந்தப் பழக்கத்தை எதிர்க்கவில்லை. மாறாகச் சவிதாவிடம் வந்து, நந்தகுமாரின் மும்பை முகவரியைக் கேட்டான்.

முகம் வியர்த்து விட்டது சவிதாவுக்கு. மும்பை முகவரிக்கு அவள் எங்கே போவது? அப்படி ஒன்று இருந்தால் அல்லவா கொடுக்க முடியும்?

தன்னைத் தானே காட்டிக் கொண்டு விடாமல், அவள் சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டிருந்தபோது, பரமேசன் மேலும் கேட்டான். "நந்தகுமாரின் தொழில் பற்றிய விவரங்களும், அந்த முகவரியும் கூட வேண்டும், சவிதா. எனக்குத் தெரிந்தவர்கள் சிலர் மும்பையில் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக, நந்தகுமாரைப் பற்றிய விவரங்களைச் சரி பார்த்துக் கொண்டு மாமாவுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் இங்கே இல்லாமல் எங்கள் பொறுப்பில் ரதியை விட்டுச் சென்றிருக்கிற சமயத்தில், ஏதாவது கூடாத நட்புக்கு இடம் நான் கொடுத்து விடக் கூடாது அல்லவா?"

அவனது எந்தக் கேள்விக்கும் பதில் இல்லாததால் சவிதா திணறிப் போனாள்.

கடைசி முயற்சியாக, "என் உறவினர் என்கிறேனே. அதற்கு மேல் விசாரித்தாக வேண்டுமா? என்னையே அவமானப் படுத்துவது போலத் தோன்றுகிறது. எனக்காவது, உங்கள் கடமை உணர்வு தெரியும். போகிறது என்று பொறுத்துப் போவேன். ஆனால், நந்து நிச்சயமாகத் தப்பாகத்தான் நினைப்பான். அதுதான், அவனிடம் கேட்கத் தயக்கமாக இருக்கிறது!" என்றாள் தயங்கித் தயங்கி.

''கேட்பதா? அப்படியானால் இதெல்லாம் உனக்கு ஒன்றும் தெரியாதா?'' என்று பரமேசன் கேட்கவும், சொல்வதறியாமல் சவிதா மீண்டும் திகைத்தாள்.

அவசரமாக யோசித்து ''நாங்கள் பெண்கள். தனியே வெளியே எங்கே போகிறோம்? என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்களைப் பாராமல் இருக்க முடிவதில்லை. அதனால் ஃபாக்டரிக்கும், வீட்டுக்கும் வருகிறேன். மற்றப்படி, எனக்கு எந்த இடம் தெரியும்? தெரிந்தவர்கள் வீட்டுக்குப் போவது என்றாலும்கூட, 'இப்படியே போய், இடப்புறம் திரும்பி, அடுத்த குறுக்குத் தெருவில் இத்தனாவது வீடு' என்று அடையாளம் சொல்லத் தெரியுமே தவிர, எந்தத் தெருவில் என்ன நம்பர் வீடு என்று தெரியாதே. இங்கேயே இப்படி என்றால் மும்பையில் என்ன தெரியும், சொல்லுங்கள்,'' என்று பெரிதாக விளக்கம் கொடுத்தாள்.

இத்தோடு வாயை மூடுவான் என்று நினைத்தால், பரமேசனின் மனம் வேறு விதமாக வேலை செய்தது.

''நீ இப்படிச் சொல்லுகிறாய். ரதியானால், விடிகாலையில் தன்னந் தனியாகக் காரை ஓட்டிக் கொண்டு வீட்டைக் கண்டுபிடித்து விட்டாளே. எவ்வளவு கெட்டிக்காரி!'' என்று சிலாகித்தான் அவன்.

தொடர்ந்து, ''அவ்வளவு கெட்டிக்காரிக்கு ஏற்ற கணவன் அமைவது ரொம்ப முக்கியம். எங்கோ இருப்பவன், எப்படி இருக்கிறான் என்று தெரியாமல் பெண்ணைக் கொடுப்பது தவறு. அதிலெல்லாம் யார் என்ன நினைப்பார்களோ என்று பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. அதனால் நான் கேட்ட விவரங்களை நந்தகுமாரிடம் கேட்டு வாங்கிக் கொடு,'' என்று முடித்து விட்டான் பரமேசன்.



அங்கே ரதியிடமும் விரும்பிய முன்னேற்றம் இல்லை என்றான் நந்தகுமார்.

''சிரித்த முகமாகத்தான் பழகுகிறாள், என் பேச்சையும் ரசிப்பது போலத்தான் தோன்றுகிறது. ஆனால் அவளது சுண்டு விரலைக்கூடத் தொட முடியவில்லை!'' என்றான் அவன்.

''காதலிப்பதாகச் சொல்லித் தொலைத்தாயா, இல்லையா?'' என்று ஆத்திரப்பட்டாள், சவிதா.

அவசரம் தெரியாமல் மெல்லப் பூச்சி பிடித்துக் கொண்டு இருக்கிறானே என்ற ஆத்திரம். இதற்குள் உலகத்தின் மறு மூலைக்கே அவனோடு ஓடிவர ரதி தயாராக இருந்திருக்க வேண்டாமா?

''சொன்னேன். ஆனால் அவள் சிரித்துவிட்டுப் போய் விட்டாள்.''

சிரித்துவிட்டுப் போய்விட்டாளா?

அப்படியென்றால் என்ன அர்த்தம்?

சிரிப்பு அவளுக்கும் மகிழ்ச்சிதான் என்று காட்டுகிறது.

பெரிய புத்திசாலி. இன்னொருத்திக்குத் தாசனாக இருப்பவன் காதலிப்பதாகச் சொன்னால், அதைப் போய் நம்புகிறாளே, இவளா கெட்டிக்காரி?

ஆனால், கொஞ்சம் மூளை இருப்பதை ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும் என்றும் சவிதாவுக்குத் தோன்றியது.

நந்தனை ரதிக்குப் பிடித்துதான் இருக்கிறது. ஆனால் உடனே ஒத்துக் கொள்ளத் தயங்குகிறாள். கெட்டிக்காரி அல்லவா? அவனது பொருளாதார நிலையையும் அறிந்து கொண்டு, கடைசிப் பதிலைச் சொல்ல எண்ணுகிறாள் போலும்.

ஆனால் இதை அனுமதிக்க முடியாதே.

இன்னும் கொஞ்சம் தீவிரமாக முயற்சிக்கும்படி, நீ ஒத்துக் கொள்ளா விட்டால், உயிரை விட்டு விடுவேன் என்று சினிமாக்களில் வருகிற மாதிரி ஏதாவது சொல்லிக் காரியம் சாதிக்கும்படி நந்தகுமாரிடம் சொல்லி அனுப்பினாள் சவிதா.

சுவரில் அடிபட்ட பந்தாக, முட்டாள்தனமாக உளற வேண்டாம் என்று ரதி சொல்லி விட்டதாகத் திரும்பி வந்து நின்றான் நந்தகுமார். கூடவே, "உயிரை விட்டுக் காட்டுகிற முயற்சியெல்லாம் நம்மால் ஆகாதம்மா. வேறு வழியிருந்தால் சொல்லு. அல்லது நல்லதாக நாலு உடை கிடைத்தது என்று இத்தோடு விட்டுவிடுவோம்!" என்றான் அவன்.

எட்டி இரண்டு அறை வைக்கலாமா என்று இருந்தது அவளுக்கு.

இவனுக்கு நல்லதாய்ப் பல உடைகள் கிடைத்திருக்கலாம். அவளுக்குப் பத்துப் பவுன் சங்கிலியல்லவா இழப்பாகி விடும். எப்படி விட முடியும்?

இந்தப் பக்கம் அவளுக்கு நந்தகுமாரிடம் விவரம் கேட்கத் தயக்கமாக இருந்தால் அவனிடம் தானே நேரில் பேசுவதாகப் பரமேசன் நெருக்கினான்.

அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டால், அப்புறம் எல்லாமே வீணாகிப் போகும்.

மயில் தானாக இறகு போடும் என்று இனியும் காத்திருக்க லாகாது என்ற முடிவுக்குச் சவிதா வந்தாள்.



மீதி இருந்த பணத்தை எண்ணிப் பார்த்து, மேற்கொண்டு செய்ய வேண்டியதையும், அதற்கான செலவுகளையும் திட்டமிட்டாள்.

இப்படி எண்ணிப் பார்த்துச் செலவு செய்யும் துன்பம், இத்தோடு தீர வேண்டும். தீர்ந்தே ஆக வேண்டும். கட்டுக் கட்டாய் நோட்டை வீசிக் கண்ணில் பட்டதை வாங்குவது போலக் கனவு வந்தது.

கூடவே பரமேசன் அதை அனுமதிப்பானா என்ற சந்தேகமும் வந்தது. வேண்டிய பணத்தைத் தட்டாமல் அவன் தர வேண்டுமே.

எல்லாம் தருவான். அவன் மானத்துக்கு அஞ்சியவன். சும்மா, வேலையாட்கள் அறிய, நாலு கத்துக் கத்தினாலே, அள்ளிக் கொடுத்து விடுவான் என்று அதற்கொரு திட்டமும் உருவாயிற்று.

ஆனால் அதையெல்லாம் சாதிக்க அடிப்படையாக இந்தத் திட்டம் பக்காவாக அமைய வேண்டும்.

மீண்டும் மனதை நடப்புக்குக் கொண்டு வந்து தீவிர யோசனை செய்தாள்.

இதன்படி நகரை விட்டுத் தூரத்தில் பழைய மகாபலிபுரம் சாலையிலிருந்து உள்ளே சென்று, ஒதுக்குப் புறமாகக் காலியாக இருந்த ஒரு வீட்டைப் பிடித்தாள்.

மறுநாளே, பணத்துக்காக எதையும் செய்யும் ஓர் அடியாளின் உதவியோடு, ரதியை அரை மயக்க நிலையில் அந்த வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டாள்.

வீட்டுக்குள் அவளை வைத்துப் பூட்டிவிட்டு நந்தகுமாரிடம், "இதோ பார். ரதியை முழுதாக உன்னிடம் தந்துவிட்டேன்.

அவளை என்ன செய்வாயோ? ஒன்று, அவள் உன்னை மணக்க வேண்டும். அது நடக்காவிட்டால், அடையாளமே இல்லாமல் அவளை அழித்துவிடு!'' என்றாள் சவிதா.

''கவலையே படாதே, சவி. நான் அவளை ரேப் பண்ணி விடுகிறேன். அப்புறம் அவள் என்னைத்தானே மணந்தாக வேண்டும்!'' என்றான், நந்தகுமார் - அலட்சியமாக.

''முட்டாள்!'' என்றாள் சவிதா.

''ஏய், என்னது?''

''ஆமாம். எல்லாம் பழைய கற்காலத்திலேயே இருங்கள். அந்த மாதிரி நீ ஏதாவது செய்தால், அவள் நேரே போலீசுக்குப் போவாள். உனக்குப் பத்து ஆண்டு சிறைத் தண்டனை வாங்கித் தந்துவிட்டு, வேறு ஒருவனை மணந்து சந்தோஷமாக இருப்பாள். உனக்கு உதவி செய்தேன் என்று என்னையும் உள்ளே தள்ளுவார்கள். தேவைதானா?'' என்று எரிச்சலுடன் கேட்டாள் அவள்.

நந்தகுமார் விழித்தான். ''பின்னே என்ன செய்வது, சவி?''

''ஆமாம். அதையும் என்னிடம் கேள். இந்தா, இந்தச் சாவியைப் பிடி. இந்த அறைக்குள் சாப்பாட்டுச் சாமான்களோடு அலமாரியில் கொஞ்சம் போதை மாத்திரைகள் வைத்திருக் கிறேன். அதிகம் போட்டு விடாதே. ஒரு நேரத்துக்கு ஒன்று. எதிலாவது கலந்து கொடு. அவள் மயக்கமாக இருக்கிறபோது, நீ ஆண் பிள்ளைதானே? எப்படியோ, அவளை உனக்கு அடிமையாக்கி விடு. நாலு நாளில். மாத்திரைக்காகவேனும் ரதி உன் காலடியில் கிடப்பாள். அப்புறம் ஒரு கோயிலில் வைத்துத் தாலியைக் கட்டி, அதை நிறைய ஃபோட்டோவும் எடுத்து வைத்துக் கொண்டு எனக்குத் தகவல் கொடு...''



''ஆனால் பரமேசன்? அவன் வீட்டில் தேட மாட்டார்களா? தேடிக் கண்டு பிடித்து விட்டால் ஆபத்தாயிற்றே!'' என்று நந்தகுமார் அஞ்சினான்.

''அதைப் பற்றி நீ கவலைப்படாதே. யாரும் உங்களைத் தேடாமல், நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் இருவரும் வீட்டை விட்டு ஓடிப்போய் ஒரு கோயிலில் திருமணம் செய்துகொண்டு தேனிலவுக்குப் போவதாக எனக்கு ஃபோன் செய்ததாகச் சொல்லி விடுகிறேன். உதயா என்றாலாவது கூடப் பிறந்தவள். தேடிக் கீடி அலையக்கூடும். இவள் வேறுதானே? அத்தோடு வயது வந்தவள். அவளாகப் பிரியப்பட்டுச் செய்வதைச் சட்டப்படி யார் என்ன செய்ய முடியும் என்று நிறுத்தி விடுகிறேன். அப்புறமாக அவளை அதற்கு ஒத்துப் பாட வைப்பது உன் பொறுப்பு.''

மடமடவென்று அவள் பேசுவதை வியப்புடன் பார்த்தி ருந்துவிட்டு, ''உனக்கு இடையூறு இல்லாமல் திட்டம் போட்டு ரதியை அகற்றி விட்டாய். பரமேசனின் குடுமியும் பணமும் உன் கைக்கு வந்து விடும்!'' என்றான் அவன்.

''உனக்கு மட்டும் கொஞ்சமா வரும்? ரதி எவ்வளவு பணத்துக்கு வாரிசு தெரியுமா? அவ்வளவும் உனக்குத்தானே!''

''அந்தப் பணத்துக்காக மட்டுமா, நீ சொல்லுகிறபடி எல்லாம் ஆடிக் கொண்டு இருக்கிறேன்?'' என்று கேட்டு, அவளைப் பார்த்தான் நந்தகுமார்.

அவன் கையைப் பற்றி, ''எனக்கு மட்டும் இல்லையா, நந்து? ஆனால், பணம் இல்லாமல் என்ன செய்ய முடியும்? இரண்டு செல்வமும் நம் கைக்கு வரட்டும். அதன் பிறகு நம்மை யார் தடுப்பது?'' என்றவளை இறுக அணைத்து முத்தமிட்டான் அவன்.

சற்றுப் பொறுத்து விலகிக் கொண்டு, "போதும் நந்து. இப்போது ஆக வேண்டியதைப் பார்ப்போம். அவள் தப்பிச் செல்ல முடியாமல் கட்டிப் போட்டிருக்கிறது. இனி... இனிமேல் எல்லாமே உன் கையில்தான் இருக்கிறது, நந்து. மறக்க வேண்டாம். நல்ல சேதியை ஃபோன் பண்ணிச் சொல்லு. பரமேசனோடு வருகிறேன்!" என்று சவிதா ரதியைக் கொண்டு வந்த காரிலேயே திரும்பிப் போய் விட்டாள்.

வரக்கூடிய பணத்தைக் கணக்கிட்டபடி நந்தகுமார் உள்ளே சென்றான்.

இனி நாடக வேஷங்களுக்காக, அடுத்தவரைத் தொங்க வேண்டியது இல்லை. அவனே முழுச் செலவும் செய்து கதாநாயகனாகவும் நடித்துக் கொள்ளலாம்.

அப்புறம் சின்னத்திரை. அதற்கு அப்புறம், வெள்ளித்திரை.

உள்ளே சென்று பார்த்தால், ரதி கண் விழித்து இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா கண்ணு, மயக்கம் தெளிந்துவிட்டதா? இங்கே நீயும் நானும் மட்டும்தான். சொல்லுவதைக் கேட்டு ஒழுங்காக நடந்து கொண்டால் உனக்கு நல்லது! அல்லது..." என்று மிரட்டலாகக் கூறியபடி ரதியை நெருங்கினான் அவன்.

## 19

நந்தகுமார் போலி என்று தெரிந்து கொண்டதில் இருந்தே, ரதி கவனமாகத்தான் இருந்தாள். தீபன் அவன் அண்ணன் ஆசுதோஷ் இருவரிடமும் எல்லாவற்றையும் கலந்து



கொள்வாள். நந்தகுமாரின் ஒவ்வொரு சொல்லையும் செயலையும் மூவருமாக ஆராய்வார்கள்.

அப்போதே செயல்படத் துடித்த இளைஞர்கள் இருவரும் பல்லைக் கடித்துப் பொறுமையோடு இருக்க அவள்தான் காரணம்.

சவிதாவின் திட்டத்தை முழுமையாக முறியடிக்க வேண்டும் என்பது அவளது விருப்பம்.

அதற்காகவே, அப்போதைக்கு எதையும் செய்ய விடாமல் மற்ற இருவரையும் ரதி தடுத்துக் கொண்டிருந்தாள். அவளது ஆலோசனைப்படி, 'வெயிட்டிங் கேம்' என்பார்களே, அது போல் எதிராளி தவறு செய்யும்வரை அவளோடு மற்ற இருவரும் சேர்ந்து பொறுமையாகக் காத்திருந்தார்கள்.

காதலிக்கிறேன் என்று நந்தகுமார் உணர்ச்சிகரமாகச் சொன்னதுமே சவிதா பொறுமையிழக்கத் தொடங்கி விட்டாள் என்று ரதி உணர்ந்து கொண்டாள்.

அடுத்து உயிரை விடுவேன் என்றதும், மூவருமே எச்சரிக்கை அடைந்தனர்.

எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு தனியாரின் துப்பறியும் நிறுவனத்திலிருந்தும், ஆட்களுக்குத் தீபன் ஏற்பாடு செய்தி ருந்தான். அவர்கள் சவிதா, நந்தகுமார், ரதி மூவரையுமே முழு C ,மும் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

சவிதா, அந்த வீட்டை வாடகைக்கு எடுத்தது, அடியாள் ஏற்பாடு செய்தது, எல்லாமே மூவரும் அறிந்ததுதான்.

எனவே, தனியே பேசலாம் என்று நந்தகுமார் அழைத்த போது, ரதி மறுக்காமல் கூடச் சென்றாள். அடுத்து மயக்க மருந்து.

நாமக்கல்லார் எழுதிய மலைக்கள்ளன் புத்தகம், அவளுடைய தந்தை நாதனுக்கே பிடித்தமானது. ரதியோ, அதையும் படித்து, அந்தக் கதையைக் கொண்டு எடுக்கப் பட்டிருந்த திரைப் படத்தையும் பார்த்து ரசித்திருந்தாள். எனவே, மயக்க மருந்தை மூக்கருகே கொண்டு வரவுமே முடிந்தவரை மூச்சை அடக்கி, விரைவிலேயே தொய்ந்து விட்டாள். எனவே மருந்துப் பாதிப்பும் அதிகம் இல்லாது போய்விட, விரைவிலேயே முழுமையாகத் தெளிந்தும் போயிற்று.

கட்டிப் போட்டிருந்த போதும், ஆசு, தீபன் மூலம் உதவி உடனே வந்துவிடும் என்ற தைரியமும் ரதிக்கு இருந்தது.

உதவி எப்போது வரும் என்பது மட்டும்தான் கேள்வி.

ரதியைத் தேடிப் பரமேசன் போலீசுக்குப் போய் விடக் கூடாது என்பது சவிதாவுக்கு. அது பிரச்சினையாகி விடக்கூடும். தள்ளிப் போடாமல் உடனே வேலையைத் தொடங்க வேண்டும் என்று எண்ணினாள்.

எனவே, அன்று மாலையே பரமேசன் வீடு திரும்பி விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு அவன் வீட்டுக்குப் போய் அவள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்த கதையை அரங்கேற்றினாள்.

ரதியும், நந்தகுமாரும், வீட்டை விட்டு ஓடிப் போய்த் திருமணம் செய்து கொண்டு, தேனிலவுக்குப் போய் விட்டார்கள். உரிய ஏற்ற இறக்கங்களுடன் அவள் சொன்னதை யாரும் நம்புவதாக இல்லை.

''அந்த மாதிரிக் காரியம் ரதி செய்யவே மாட்டாள்!'' என்று பரமேசன் பரம நிச்சயமாகக் கூறவும், சவிதாவுக்கு ஆத்திரம் வந்தது. ''அவர்கள் இருவரும் என்னிடம் சொன்னார்கள்



என்கிறேன். அதை இல்லை என்றால் என்ன அர்த்தம்? நான் பொய் சொல்லுகிறேன் என்கிறீர்களா? அப்படியானால் உங்கள் அருமை ரதி இப்போது எங்கே? என் அண்ணன் எங்கே?'' என்று மடக்கினாள்.

''உன் அண்ணனைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ரதியைப் பற்றித் தவறாகப் பேச வேண்டாம்!'' என்றான் அவன் இறுகிய குரலில்.

''இதில் தவறு என்ன இருக்கிறது? இருவரும் காதலித்தார்கள். கல்யாணம் செய்து கொண்டார்கள். அவ்வளவுதானே? உங்களிடம் சொன்னால் மாமா வரட்டும் என்பீர்கள். மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும். அது பிடிக்காமல் அவர்களே வேலையை முடித்துக் கொண்டார்கள். எல்லாருமா உங்களைப் போலச் சாமியாராக இருப்பார்கள்? அவர்கள் மனிதர்களாக நடந்து கொண்டார்கள். அவ்வளவுதானே? இதைப் போய்த் தப்பு, தவறு என்பானேன்?''

வெறுப்புடன் அவளை நோக்கி, ''குடும்ப கௌரவம் என்று ஒன்று உண்டு. அது பற்றி உனக்குப் புரியாது. ஆனால், அதற்கு இழுக்கு நேர ரதி விட மாட்டாள். சற்று வாயை மூடிக் கொண்டு இருக்கிறாயா?'' என்று அதட்டிவிட்டு, திகைத்து நின்ற தாயிடம் சென்றான் அவன்.

''அம்மா, கவலைப்படாதீர்கள். ரதி வந்து விடுவாள். முன்புகூட ஒரு தரம் இப்படி நேரமாகவில்லையா? இப்போதும், ஏதாவது காரணம் இருக்கும்!'' என்று தீபனைப் பார்த்தான்.

''ஆமாம், ஆன்ட்டி ரதிக்கு ஓர் ஆபத்தும் இராது. அவள் கெட்டிக்காரி. எந்தச் சிக்கல் வந்தாலும் சமாளித்துப் பத்திரமாக

வீடு வந்து சேர்ந்து விடுவாள்!'' என்றான் அவன் உறுதியான குரலில்.

''ஆபத்தே கிடையாது என்கிறேன் நான். அவளாகச் செல்லும்போது...''

''அந்தப் பேச்சும் போதும் என்கிறேன்!'' என்று பரமேசன் உறும, சட்டென எழுந்து, ''நான் வீட்டுக்குப் போகிறேன்!'' என்று கிளம்பினாள் சவிதா. ''ஒரு வாரமோ, பத்து நாட்களோ கழித்து, இரண்டு பேருமாகத் திரும்பி வந்து நிற்கும்போது நான் சொன்னதே உண்மை என்று எல்லோருக்கும் புரியும். ஆனால் இப்படி ஒரு வருஷம் காத்துக் கிடக்க வைப்பவர்களுக்குக் காதல், அதன் வேகம் எல்லாம் எங்கே புரியப் போகிறது?'' என்றாள் போகிற போக்கில் குத்தலாக.

''பெருமாள்! காரை எடுங்கள். நான் போக வேண்டும்!'' என்று அவள் ஏவியது காற்றோடு கலந்து மறைந்தது.

ஏதோ நினைத்தவன் போலப் பரமேசன் சவிதாவின் பின்னே ஓடினான்.

காருக்காகக் காத்து நின்றவளை நெருங்கி, ''சவிதா, உண்மையைச் சொல்! ரதிக்கு நீயே ஏதாவது கெடுதல்... உனக்குச் சும்மாவே அவளைப் பிடிக்காது. இப்போது... உன்னால் மட்டும் அவளுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் அப்புறம் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான்.

அச்சம் மிக, தன்னை மீறி ஓர் எட்டு பின்னே எடுத்து வைத்த சவிதா, உடனே ஆங்காரத்துடன் நிமிர்ந்தாள். ''நாளைக்குக் கட்டிக் கொள்ளப் போகிற பெண்ணிடம் இன்னொரு பெண்ணுக்காக இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாக இல்லை?'' என்று ஆத்திரமாக மொழிந்து விட்டு, பெருமாள் கொண்டு வந்து நிறுத்திய காரில் ஏறி, கார் கதவை அறைந்து சாத்தினாள்.



அவன் முகத்திலேயே அறைவது போலக் கற்பனை.

ரதிக்காக அவளை மிரட்டுகிறானா?

நந்துவுடைய மனைவியாக்கி, ரதியைப் படாதபாடு படுத்திக் கண்ணீர் வடிக்க வைக்க வேண்டும். அவள் அழுவதைப் பார்த்து இவனும் நொந்து துடிக்க வேண்டும்.

துடிக்கத்தான் போகிறான். இரண்டு பேருமே துடிப்பார்கள்.

சவிதாவுக்கு இருந்த ஆத்திரத்தில், நேரே அந்த மாமல்லபுரத்து வழி வீட்டுக்குப் போய், கை ஓயுமட்டும் ரதியை அடித்து நொறுக்க வேண்டும் போல உடம்பின் ஒவ்வோர் அணுவும் பரபரத்தது.

ஆனால் இவ்வளவு சந்தேகப்பட்டவன் அவள் பேச்சை நம்பிக் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பானோ என்னவோ? அவளையே கண்காணிக்க, ஏதாவது ஏற்பாடு செய்திருந்தால்? அப்புறம் பரமேசனுக்கு அவளே வழி காட்டுவது போல ஆகிவிடுமே.

பேசாமல், கையைக் கட்டிக் கொண்டு பொறுமையாகக் காத்திருப்பது நல்லது.

கஷ்டமாக இருந்தபோதும் இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

அவள் ஊகித்தது போலவே பரமேசனும் அவளைக் கண்காணிக்க உடனே ஏற்பாடு செய்து விட்டான். ஆனால் தன் தீர்மானத்தின்படி சவிதா பிடிவாதமாகப் பொறுமையைக்

கடைப்பிடித்ததால், அவள் மூலமாகப் பரமேசனுக்கு ஒரு துப்பும் கிடைக்காது போயிற்று.

சவிதாவுடைய தந்தையிடம் நந்தகுமாரைப் பற்றிக் கேட்டுப் பார்த்தான். அவர் மலங்க விழித்தாரே தவிர, உருப்படியாக ஒரு பதிலும் சொல்லவில்லை. சொல்வதற்கு, அவருக்கு எதுவும் தெரியாது என்பதோடு, எதைச் சொல்லவும் அவருடைய மகள் அனுமதிக்கவும் இல்லை.

இரவு பகல் ரதி நினைவாகவே இருந்ததால், இன்னொரு முரண்பாடு அவன் கண்ணை உறுத்தத் தொடங்கியது.

கலங்கிப் போயிருந்த அன்னபூரணியின் அருகிலேயே அன்னைக்கு ஆறுதல் கூறியபடி, உதயா இருந்தாள்.

ஆனால், தீபன், ஆசுதோஷ் இருவருமே - வேலைக்கு நடுவே சவிதாவையும் கண்காணித்துக் கொண்டிருந்த - லோகேசன் அளவு கூடப் பதறாதது, அவனுக்கு வியப்பாக இருந்தது.

உடன் பிறந்தவர்கள் போல வளர்ந்ததாக அன்று கதை சொன்னவர்கள், இன்று ஏன் இப்படி? அதிலும் ஒருவர் மாற்றி ஒருவர் அடிக்கடி காணாமல் போவதும் விசித்திரமாக இருக்கவே, பரமேசன் தீபனைப் பிடித்தான்.

''ரதியைப் பற்றி ஒன்றும் தெரியாமல், பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்கிறது, தீபன். ஆனால் உங்களுக்கு ஏதோ தெரியும் என்று தோன்றுகிறது. தயவு பண்ணி என்னவென்று சொல்லுங்கள்,'' என்று சாதாரணமாகக் கேட்டுப் பார்த்தான்.

அவன் சரியாகப் பதில் சொல்லாமல் நழுவ முயற்சிக்கவும், ''பாருங்கள், தீபன். இதற்கு மேல் நீங்கள் சொல்லாமல் மறைத்தீர்கள் என்றால், நான் உங்கள் பெரியப்பாவிடம் போய்க் கேட்பேன்,'' என்று மிரட்டினான்.



பெரிய சுகவீனத்திலிருந்து இப்போதுதான் குணமடைந்து கொண்டிருந்த மனிதர்.

அப்போதும் சற்றுத் தயங்கிவிட்டு, ''நானும் அண்ணனும் ரதியின் நலம் விரும்பிகள் என்று உங்களுக்குத் தெரியும். எங்களை நம்பி, இன்னும் சில நாட்கள் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும், பரமேசன். பொறுமையாக மட்டும் இல்லை, இதே போல ரதியைத் தேடிக் கொண்டும், அல்லது தேடுவது போல நடித்துக் கொண்டும், ரதியைத் தேடி நீங்கள் அலைவதாகவே உங்களுக்கு மிகமிக வேண்டியவர்கள் கூட நினைக்க வேண்டும் என்பதுதான் இதில் ரொம்பவும் முக்கியமான விஷயம். ரதியின் விருப்பமும் இதுவே. சின்ன ஓட்டை விட்டால்கூட எல்லாம் கெட்டுவிடும். உங்கள் சவிதாவுக்கு... சவிதாவுக்குக் கூடச் சந்தேகம் வரக்கூடாது. மேற்கொண்டு நான் என்ன சொல்லட்டும், பரமேஷ். ஒன்றும் சொல்ல வழியில்லை. இதனால் உங்களுக்கும் நன்மைதான் விளையும். இது சத்தியம். நம்புங்கள். நம்பி, நான் சொன்னது போல் எச்சரிக்கையோடு இருங்கள்!'' என்றான் அவன்.

ரதிக்கு ஆபத்து இல்லை என்பதே பெரும் ஆறுதலாகிவிட, பரமேசனும் சம்மதித்தான். கூடவே அவனுள் ஓர் ஊகமும் இருந்தது.

எனவே தீபனின் கோரிக்கைப்படியே, முழுக்க முழுக்க நடந்து கொண்டான்.

அதற்கேற்ப மீண்டும் மீண்டும் சவிதாவிடம் ரதியைப் பற்றியே பரமேசன் கவலையோடு கேட்கக் கேட்க, அவளுக்கு உற்சாகம் பொங்கிப் பெருகியது.

சரியாக ஒரு வாரம் கழித்துக் காரியம் வெற்றிகரமாக முடிந்தது என்று நந்தகுமார் சவிதாவுக்கு ஃபோன் செய்தான்.

## 20

நந்தகுமார் சொன்னதைக் கேட்ட சவிதா உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள்.

காரியம் வெற்றி என்றால், இனி ரதியால் அவளுக்கு அபாயம் இல்லை.

பெரிய புத்திசாலி, கெட்டிக்காரி... குடும்ப கௌரவம் காக்கிறவள் என்றானே. அந்த ரதி, இப்போது போதை மருந்துக்கு அடிமை. ஒரு போதை மாத்திரைக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள். வீட்டுக்குத் தெரியாமல் எவனோ ஒருவன் கையால் தாலியே கட்டிக் கொண்டு விட்டாள்.

இத்தனையும் சவிதாவின் திட்டம். திட்டமிட்டு அந்தக் கெட்டிக்காரியையே வீழ்த்தி விட்டாள். இப்போது யார் கெட்டிக்காரி?

பரமேசனைக் கூப்பிட்டு எல்லாவற்றையும் சொல்லிக் கொக்கரிக்க அவள் மனம் துடித்தது.

ஆனால் இப்போது அது முடியாது. கூடாது. பரமேசனின் கைத்தாலி அவள் கழுத்தில் விழுமட்டும், அந்த நல்ல காரியத்தைச் செய்வதை ஒத்திப் போட வேண்டும்.

அதுவரை சவிதா உத்தமி ரத்தினமாகத்தான் இருந்தாக வேண்டும்.

எவ்வளவோ சிரமப்பட்டு அப்படி நடித்தும்கூட, ரதியோடு ஒப்பிட்டு, எப்படி இளப்பமாகப் பேசிவிட்டான், அந்தப் பரமேசன்.



அவன் முன்னிலையில் இந்த வெற்றியை விருப்பம்போலக் கொண்டாட முடியவில்லையே என்று சவிதாவுக்கு வருத்தம்தான்.

ஆனால் மாமா மகள் எந்த அளவுக்குத் தரம் இறங்கி விட்டாள் என்று அறியும்போது அவன் படும் வேதனையைக் கண்ணாரக் கண்டு உள்ளூர ரசிக்கலாமே!

அதையாவது செய்தே ஆக வேண்டும் என்று தோன்றி விட, பரமேசனைக் கூட்டி வரும்போது, எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டு, ரிசீவரைக் கீழே வைத்தாள் சவிதா.

ஆனால் பரமேசனை அழைத்துக் கொண்டு எத்தனையோ இனிய கற்பனைகளுடன் அந்த வீட்டுக்குச் சென்ற சவிதாவுக்குத்தான் அங்கே எத்தனையோ அதிர்ச்சி காத்திருந்தது.

கையும் காலும் கட்டப்பட்டுக் கிடந்த பெண்ணிடம் வீரம் பேசுவது நந்தகுமாருக்கு நன்றாகத்தான் இருந்தது.

ஆனால் அந்த மகிழ்ச்சி அவனுக்கு நிலைக்கவில்லை. பாதி பேசிக் கொண்டு இருந்தபோது அவனுக்குப் பின்புறமாக ஏதோ அரவம் கேட்டது.

ஆடோ, மாடோ என்று அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தவனின் விழிகள் பிதுங்கிப் போயின.

ஏனெனில், அங்கே தீபனும், அவனுடைய அண்ணனும் இன்னுமோர் ஆளுடன் நின்று கொண்டிருந்தனர். ரதியைப் பிடித்து வந்த காரைத் தொடர்ந்து - முன்னே சென்றவர்களால் கண்டு கொள்ள முடியாதவாறு - குறிப்பிட்ட தூரத்தில் பின்பற்றி

வந்தவர்கள், பெருஞ்சாலையிலிருந்து முன்னே சென்ற கார், திரும்பி உள்ளே செல்லவும், நேர் சாலையிலேயே தொடர்ந்து சென்று, சற்றுத் தூரத்தில் காரைத் திருப்பி, ஒதுக்கி நிறுத்தி விட்டு, இறங்கி, கால் நடையாகச் சத்தமின்றிப் புதர்களினூடே ஒளிந்து மறைந்து, அந்த வீட்டை அணுகினர்.

சவிதா அடியாளோடு கிளம்பும்வரை தூரத்திலேயே பதுங்கி இருந்தவர்கள் கார் கண்ணுக்கு மறைந்ததும் வீட்டுக்கு வந்தனர்.

அவர்களைப் பார்த்ததும், நந்தகுமார் சட்டெனப் பாய்ந்து ஓட முயன்றது பலிக்காமல், சிறையெடுத்தவனே சிறைப்பட்டு நின்றான்.

இரண்டே தட்டில் அவன் வழிக்கு வந்து விட்டான்.

சவிதாவின் திட்டம் என்ன என்று தெரிந்ததுமே எல்லோருமே ரதியோடு ஒத்துப் போயினர். அதற்கு முன் இருந்த சஞ்சலங்கள் மறைந்து பரமேசன் குடும்பத்தை இந்தப் பிடாரியிடம் இருந்து காப்பதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபட்டனர்.

பரமேசன் இந்த அளவு ஊகித்துவிட்டான் என்றதில் ரதிக்குப் பெருமைதான்.

இனித் தள்ளிப் போட வேண்டாம் என்று மூவர் குழு முடிவெடுத்து, சவிதாவுக்கு ஃபோன் செய்யுமாறு, நந்த குமாரிடம் செல்லைக் கொடுத்தார்கள்.

அடிக்குப் பயந்தே சொன்னபடி செய்தவன், அடுத்துப் போலீசுக்குப் போவோம் என்றதும், அவர்கள் ஏவியபடி, மேற்கொண்டு ஆடவும் தயாரானான்.

இந்த நந்தகுமாரைத்தான் சவிதாவும் பரமேசனும் முதலில் பார்த்தது.



அடுத்து புது மலர் போல வந்து நின்ற ரதியை.

''என்ன புது மாப்பிள்ளை...'' என்று தொடங்கியவளின் பேச்சில் குறுக்கிட்டு, ''புது மாப்பிள்ளையும் இல்லை... பழைய மாப்பிள்ளையும் இல்லை. பாவி... பாவி. உனக்கு ரதி வேண்டாதவளாக இருக்கலாம். அதற்கு என்னை நாசமாக்கப் பார்த்தாயே!'' என்று தொடங்கி, பரமேசனைப் பார்த்து, ''சார், இவளை நம்பாதீர்கள். ரதி என்னை விரும்பவும் இல்லை. என்னோடு ஓடி வரவும் இல்லை. இவள்தான் அடியாளை வைத்து மயக்க மருந்து கொடுத்து அவளை...'' என்று தொடங்கி, நடந்தது முழுவதையும் அவனிடம் ஒப்பித்து விட்டான். ''சார்! அடியாளுக்கு, இந்த வீட்டு வாடகைக்கு, முதலில் என் நல்ல உடைகளுக்கு எல்லாம், உங்கள் வீட்டில் இவளுக்குப் போட்ட சங்கிலியை விற்ற பணத்தைத்தான் செலவு செய்தாள்... சார்.''

அவன் எல்லாவற்றையும் கொட்டிக் கடை பரத்திக் கொண்டு இருந்தபோது, தீபனும் ஆசுவும் கூட அறையினுள் வந்து சேர்ந்தனர்.

அப்போதும், ''எல்லாம் பொய்...'' என்று தொடங்கிய சவிதா, பரமேசனின் முகத்தைப் பார்த்துவிட்டு, ''உங்கள் மேல் கொண்ட காதலில் பைத்தியம் போல நடந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று அவன் காலில் விழப் போனாள்.

சற்று நகர்ந்து நின்று, ரதியின் முகத்தை நோக்கியவன், மீண்டும் சவிதாவிடம் திரும்பினான். ''இந்த நந்தகுமார் அப்ரூவர் ஆகிவிட்டான். போலீசுக்குப் போனால், உன் கதி என்ன ஆகும் தெரியுமல்லவா?''

''பரம்..'' என்றவளின் குரல் நடுங்கியது.

''சரி... போலீசில் புகார் செய்யவில்லை. மேற்கொண்டு ஒரு லட்ச ரூபாயும் கூடத் தருகிறேன். ஆனால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். குற்றத்தை ஒப்புக் கொண்டு எழுதித் தருவதோடு, இனி என் வாழ்வில் தலையிடுவது இல்லை என்று எழுதிக் கையெழுத்திட வேண்டும். சம்மதம் என்றால் ஆளுக்கு ஒரு லட்சத்தோடு அவரவர் வீட்டுக்குப் போகலாம். அல்லது, அப்படியே மாமியார் வீட்டுக்குப் போக நேரும். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான்.

கடைசியாக, அந்தக் கேள்வியைக் கேட்கவே தேவை யில்லை என்று தெரிந்தது.

எழுதி வாங்கிக் கொண்டு, ''இவர்கள் இருவரையும் பஸ் நிறுத்தத்தில் விட்டு விடுங்கள். தீபன்! ஆசு! அப்புறம் ரொம்ப நன்றி. நானும் ரதியும் முதலில் கிளம்புகிறோம். இவளைச் சீக்கிரமாக அம்மா முன் கொண்டு நிறுத்த வேண்டும். நீங்கள் இந்த வீடு, மற்ற எல்லாம் பார்த்து முடித்துவிட்டு வாருங்கள். என்ன... வரட்டுமா?'' என்ற பரமேசன் ரதியை இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

கணணில் சிரிப்போடு, ''வீட்டு மாப்பிள்ளையாகப் போகிறவன் நான். கொஞ்சம் மரியாதையாக நடத்தச் சொல்லு, ரதி!'' என்றான் தீபன்.

''சொல்லுகிறவர்களும் செய்ய வேண்டும்தானே?'' என்று பூடகமாகப் பதில் கொடுத்துவிட்டு, ரதியின் கையை விடாமலே காருக்குக் கூட்டிப் போய் விட்டான் அவன்.

கார் கிளம்பிச் செல்லவும், அவன் பற்றியிருந்த இடத்தைத் தேய்த்துவிட்டபடி, ''அத்தான் சரியான முரடு போல!'' என்றாள் ரதி.



''காலை உடைக்காமல் விட்டேனே என்று சந்தோஷப்படு. இது என்ன வேலை, ரதி? கரணம் தப்பினால் மரணம் என்கிற மாதிரி, ஏதேனும் பிசகிப் போயிருந்தால் என்ன ஆகும்? மாமா மகள் மரகதம் என்று நினைத்தேன். ஆனால் மக்குதான் போல!'' என்றான் அவன்.

''அத்தை மகன் அசடாக இருந்தால், மாமா மகள் மக்காய் இருப்பதுதானே பொருத்தம்?'' என்று வாய்க்குள் முணு முணுத்தாள் ரதி.

''என்னது?''

''ஒன்றும் இல்லை. இப்போதுதான் ஒன்றும் ஆக வில்லையே!'' என்று முறுவலித்தாள் அவள்.

''அம்மா ஓய்ந்து போய் விட்டார்கள் தெரியுமா? உன்னிடம் அவ்வளவு பிரியம். பாதி நேரம் படுக்கைதான். அவர்களை எண்ணிப் பார்க்க வேண்டாமா?''

''அத்தையைப் பற்றிதான் ரொம்பவும் யோசித்தேன், அத்தான். ஆனால் உதயாவை அவர்கள் கூடவே இருக்கச் சொல்லிக் கவனித்துக் கொள்வதாக, அந்தப் பொறுப்பைத் தீபு ஏற்றுக் கொண்டான்.''

''ஆக, அவளும் கூட்டுக் கள்ளிதானா? ஆனால் அன்பும், தவிப்பும், துன்பமும் அம்மாவுக்கு மட்டும்தான் என்றா நினைத்தாய்?''

''இல்லையே. அதனால்தான் காலம் முழுவதும் வேதனைப் படுவதற்கு ஒரு நாலைந்து நாள் சற்று அதிகக் கஷ்டப்பட்டால் பரவாயில்லை என்று, இந்த முயற்சியில் ஈடுபட்டேன்!'' என்றாள் அவள் தெளிவாக.

"என்ன... என்ன? வாழ்நாள் முழுவதுமா? யாருடைய வாழ்நாள்?"

ஓரக்கண்ணால் பார்த்து, "அதைப் பற்றித் தெரியாதவர் களுக்குச் சொல்லிப் பிரயோஜனம் இல்லை!" என்று உதட்டைப் பிதுக்கினாள் ரதி.

"ஓஹோ! அதே போலத் தெரிந்தவர்களுக்கு அது பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையாக்கும். சரி, அது வேண்டாம். வேறு சொல்லு. உன் அப்பா என்னைத் தன் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வாரா?"

"அது பற்றி, அவருடைய மகளைத்தான் அபிப்பிராயம் கேட்டுச் சொல்ல வேண்டும்!" என்று மிடுக்காகப் பதில் வந்தது.

"அதை நீ என்ன கேட்பது? நானே கேட்டுக் கொள்வேனே! ஆனால் வேறு மாதிரியாக!" என்று காரை ஓரமாக நிறுத்தி, ரதியைப் பின்புறம் இழுத்தான் பரமேசன்.